# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குடியியல் வான் செலவு

**குடியியல் வான்செலவினதும் தொடர்பான கருமங்களினதும் ஒழுங்குபடுத்து கைக்கும் கட்டுப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்வதற்கும், சர்வதேசக் குடியியல் வான்செலவு சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்கு மானதொரு சட்டமூலம்**

---

*நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும், துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சருமானவரால் 2008, யூலை மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2006, பெப்புருவரி மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[*308* **ஆம் சட்டமூலம்**]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 85.75** **தபாற் செலவு : ரூபா 20.00**

*ச.வ.ஓ. 52/2000*
*4635*

## குடியியல் வான்செலவினதும் தொடர்பான கருமங்களினதும் ஒழுங்குபடுத்துகைக்கும் கட்டுப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்வதற்கும், சர்வதேசக் குடியியல் வான்செலவு சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் “நியமிக்கப்பட்ட தேதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### அத்தியாயம் 1

### முதனிலையானவை

*சமவாயம், இலங்கையினுட் குடியியல் வான்செலவுச் செயற்பாடுகளை ஆளுதல்.*

**2.** குடியியல் வான்செலவின் காப்பு, கிரமமாந்தன்மை, திறமை மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுபவையான சமவாயத்தின் உறுப்புரைகள், இலங்கையின் ஆள்புலத்தினுள் எல்லாக் குடியியல் வான்செலவுச் செயற்பாடுகளையும் ஆளுதல் வேண்டும்.

*இச்சட்ட ஏற்பாடுகளின் பிரயோகம்.*

**3.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கை ஆள்புலத்தினுள் எல்லாக் குடியியல் வான்செலவுச் செயற்பாடுகள் தொடர்பிலும், குறிப்பாகப் பின்வருவன தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லா வானூர்திகளும், இச்சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற எல்லா வான்செலவு ஆளணியினரும் இலங்கையின் ஆள்புலத்தினுள்ளாயிருப்பினுஞ்சரி அல்லது வெளியேயிருப்பினுஞ்சரி ;

2 –PL 003062– 650 (2008/07)

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டவை தவிர்ந்த வானூர்திகளும், இலங்கையின் ஆள்புலத்தினுள் வழங்கப்பட்ட வான்வழிச் சேவைகளைப் பயன்படுத்து வோரும் ;

(இ) இலங்கையின் ஆள்புலத்தினுள் குடியியல் வான் செலவுச் செயற்பாடுகளின் ஒழுங்குபடுத்துகையும், நிருவாகமும் மற்றும் காப்பு மேனோக்கும் ;

(ஈ) வான்வழிச் சேவைகளை வழங்குதல் ; அத்துடன்

(உ) குடியியல் வான்செலுத்துகையினதும் வான்போக்கு வரத்தினதும் சிக்கனமான அபிவிருத்தி உட்பட, காப்பானதும் ஒழுங்கானதுமான தொழிற்பாடும் அபிவிருத்தியும் தொடர்பான ஏனைய கருமங்களும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அரசுக்காக அல்லது அரசின் சார்பில் மட்டுமே இராணுவத்தினால் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் வானூர்தி தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(3) இலங்கை அரசாங்கத்தின் பயன்பாட்டிலுள்ள வானூர்திகள் தொடர்பில் இச்சட்ட ஏற்பாடுகளின் ஏற்புடைமையானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அந்த அளவுக்கு இருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் (3) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இராணுவத்தினால் தொழிற்படுத்தப்படும் வானூர்திகளும் இலங்கை அரசாங்கத்தின் பயன்பாட்டிலுள்ள வானூர்திகளும் வாடகைக்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளை அல்லது சரக்கை ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டுள்ளவிடத்து, அத்தகைய வானூர்திகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*அமைச்சரின் பொறுப்புகள்.*

**4.** இலங்கையின் குடியியல் வான்செலவின் அபிவிருத்திக்கு, ஒழுங்குபடுத்துகைக்கு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைச்சர் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இக்கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில், அமைச்சர் —

(அ) இலங்கையின் தேசிய வான்செலவுக் கொள்கையை வகுத்தமைத்தல் தொடர்பில் அமைச்சரவைக்கு விதப்புரைகளைச் செய்தலும் வேண்டும் ;

(ஆ) மேற்சொல்லப்பட்ட இலங்கையின் தேசிய வான்செலவுக் கொள்கையைக் காலத்துக்குக் காலம் மீளாய்ந்து நுனித்தாய்தலும் வேண்டும் ; அத்துடன் அவசியமான விடத்து, அத்தகைய கொள்கைக்கான எவையேனும் மாற்றங்களை அமைச்சரவைக்கு விதந்துரைத்தலும் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் நியமங்களும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களும் தொடர்பில் இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும் ஒழுங்குவிதிகளைப் பிரகடனப்படுத்துதலும் வேண்டும் ;

(ஈ) சர்வதேச வான் நடமாட்டத்தில் இலங்கைக்குள்ள உரிமைகளைச் சர்வதேச உடன்படிக்கை மூலம் அல்லது வேறுவகையாக பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு உதவுதலும் மதியுரையளித்தலும் வேண்டும் ; அத்துடன் அதன்மீதான பேரப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குதலும் நெறிப்படுத்தலும் வேண்டும் ;

(உ) வான்வழிச் சேவைகளையும் குடியியல் வான்செலவு தொடர்பான ஏனைய வசதிகளையும் சேவைகளையும் தாபித்தலும், அபிவிருத்தி செய்தலும், பேணுதலும் வழங்குதலும் வேண்டும் ;

(ஊ) அமைச்சரின் அபிப்பிராயப்படி இலங்கையில் குடியியல் வான்செலவுச் செயற்பாடுகளின் அபிவிருத்தியை மேம்படுத்துகின்ற கருத்திட்டங்களை, தொழினுட்ப ஆராய்ச்சியை, கற்கைகளை அல்லது நுண்ணாய்வுகளை ஆரம்பித்து வைத்தலும் வேண்டும் ;

(எ) இச்சட்டத்தினதும் இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் சான்றிதழை, உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை அல்லது அதிகாரவளிப்பை வழங்குவது தொடர்பில்,

அல்லது எவையேனும் சேவைகளை அளிப்பதற்காக, செலுத்தப்படவேண்டிய இறுப்புக்களையும், கட்டணங் களையும், செலவுத் தொகைகளையும் குறித்துரைத் தலும் வேண்டும் ;

(ஏ) விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ் அல்லது இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப் பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் அல்லது விதிகளின்கீழ் குடியியல் வான்செலவு தொடர்பான எந்தப் பணிக்காக குறிப்பான ஏற்பாடுகள் எவையும் செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் பணியைப் புரிவதற்கு அவசியமெனத் தாம் கருதுகின்றவாறான பணிப்புகளை அதிகாரசபைக்கு வழங்குதலும் வேண் டும் ; அத்துடன்

(ஐ) அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன், தோதானதெனக் தாம் கருதக்கூடியவாறாகக் குடியியல் வான்செலவு தொடர்பான வேறேதேனும் செயற்பாட்டை அல்லது பணியைப் பொறுப்பேற்றலும் வேண்டும்.

அமைச்சர் சட்டத்தின்கீழான தமது தத்துவங்களைக் கையளித்தல்.

**5**. (1) அமைச்சர், இச்சட்டத்தின்கீழான தமது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அதிகாரசபைக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அது அல்லது அவர், அமைச்சரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறை வேற்றுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கையளிப்பு எப்படியிருப்பினும், அவ்வுட்பிரிவின்கீழ் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப் பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்குத் தத்துவத்தைக் கொண்டிருக்கலாம்.

## அத்தியாயம் II

### சேவைவழங்குநர்களை நியமித்தல்

சேவை வழங்குநர் களை நியமித்தல்.

**6.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர், அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வான்வழிச் சேவைகளை வழங்கும் நோக்கத்துக்காக, வர்த்தமானில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, (இதனகத்துப் பின்னர் "சேவை வழங்குநர்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) சேவை வழங்குநரொருவராகவிருக்கவென எவரேனுமோ ராளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக் கப்பட்ட நியதி, நிபந்தனைகள், அதிகாரசபையின் கலந்தாலோ சனையுடன் அமைச்சரினால் அதற்கென ஆக்கப்படும் ஏதேனும் பின்னரான கட்டளையின்மூலம் காலத்துக்குக் காலம் திருத்தப்பட லாம் என்பதுடன், எந்தச் சேவை வழங்குநரின் நியதி நிபந்தனை கள் அத்தகைய கட்டளையினால் அவ்வாறு திருத்தப்படுகின் றனவோ அவற்றுடன் இணங்கியொழுகுவது அந்தச் சேவை வழங்குநரின் கடமையாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் சேவை வழங்கு நர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாகப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) 30 ஆம் பிரிவின் (ஈ), (உ), (ஊ), மற்றும் (எ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவை களை வழங்குவதற்காக ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்கு மேற்படாத சேவை வழங்குநர் நியமிக்கப்படுதல் வேண் டும் ;

(ஆ) 30 ஆம் பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவையை வழங்குவதற்காக, குறித்தவொரு வானூர்தி நிலையம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்படாத சேவை வழங்குநர் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) 30 ஆம் பிரிவின் (ஏ), (ஐ), (ஒ), (ஓ) மற்றும் (ஔ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவைகளை வழங்குவதற்காக, குறித்துவொரு வானூர்தி நிலையம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட சேவை வழங்குநர்கள் நியமிக்கப்படலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் அடங்கியுள்ளதெதுவும், அப்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கென, தனியொரு சேவை வழங்குநரை நியமிப்பதிலிருந்து அமைச்சரைத் தடைசெய்தலாகாது.

சேவை உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கான தேவைப்பாடு.

**7.** (1) முப்பதாம் பிரிவின் (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ),(ஓ) மற்றும் (ஔ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கு நியமிக்கப்படும் சேவை வழங்குநர் ஒருவர், அது, அவர் ஒரு சேவை வழங்குநராக நியமிக்கப்படுமுன்னர், 30 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவையை வழங்குவதற்கு நியமிக்கப்படும் சேவை வழங்குநருடன் விடயத்துக்கேற்ப, சேவை உடன்படிக்கையொன்றை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) முப்பதாம் பிரிவின் (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கெனச் சேவை வழங்குநரொருவர் நியமிக்கப்பட்டபின்னர், அப்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவையை வழங்குவதற்கென, குறித்தவொரு வானூர்தி நிலையம் தொடர்பில் சேவை வழங்குநரொருவர் நியமிக்கப்படுகின்றவிடத்து, நியமிக்கப்படும் ஆள் அத்தகைய நியமனத்துக்கு முன்னர், விடயத்துக்கேற்ப, (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கு நியமிக்கப்படும் சேவை வழங்குநருடன், பின்னைய சேவை வழங்குநர்களினால் வழங்கப்படும் சேவைகளின் தன்மையும் நோக்கெல்லையும், அப்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்படும் வான்வழிச் சேவையை வழங்குவதற்கு நியமிக்கப்படும் சேவை வழங்குநரினால் வழங்கப்படும் வான்வழிச் சேவைமீது நேரடியாகக் காப்பு அல்லது

பாதுகாப்பில் ஏதேனும் தாக்கத்தைக் கொண்டிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சேவை உடன்படிக்கையொன்றை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப் படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் சேவை வழங்குநர் நியமிக்கப்படுமுன்னர், அமைச்சரானவர், அதிகார சபையின் ஆலோசனையின்மீது, இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்புடைய சேவை உடன் படிக்கையின் அல்லது உடன்படிக்கைகளின் உள்ளடக்கங்கள், இலங்கையினுள் வான்வழிச் சேவைகளின் காப்பான, திறமை யான, கிரமமான மற்றும் இடையீடில்லாத தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில், போதிய தகவற் பகிர்வுக்கும், உடன்படிக்கைக்கான திறத்தவர்களினால் வான்வழிச் சேவை கள் வழங்குவதில் எல்லாச் செயற்பாடுகளையும் தகுந்தமுறையில் ஒருங்கிணைத்தலுக்கும், ஒருவருக்கொருவரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஆதனங்களை, வசதிகளை அல்லது சேவைகளைப் பயன்படுத்தலுக்கும் ஏற்பாடு செய்கின்றன வென்பது பற்றித் திருப்திப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கை அல்லது உடன்படிக்கைகள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்று அமைச்சருக்குக் கொடுத்துதவப்படல் வேண்டும் ; அதிகாரசபை அத்தகைய பிரதியை அல்லது பிரதிகளை அதன் கட்டுக்காப்பில் வைத்திருப்பதனை அவர் தேவைப்படுத்துதல் வேண்டும்.

சேவை வழங்குநர் களுக்கு ஆதனங்களை வழங்குதல்.

**8.** (1) அதிகாரசபையானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலமும், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையவும் 6ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் சேவை வழங்குநருக்கு, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எந்த வான்வழிச் சேவைகள் தொடர்பில் அத்தகைய சேவை வழங்குநருக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த வான்வழிச் சேவைகளை வழங்கு வதில் அத்தகைய சேவை வழங்குநர் தமது பணிகளை நிறை வேற்றுவதனை இயலச் செய்யும் நோக்கத்துக்காக, அதிகார சபைக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்பட்ட அத்தகைய அசை வற்ற ஆதனங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள் உட்பட, ஏதே னும் அசைவற்ற ஆதனத்தை அல்லது எவையேனும் வானூர்தி நிலையங்களை அவசியமானவிடத்து, கிடைக்கக்கூடியனவாக்க லாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் எந்தச் சேவை வழங்குநருக்கு ஏதேனும் ஆதனம் அல்லது எவையேனும் வானூர்தி நிலையங்கள் கிடைக்கும்படியாக்கப்பட்டனவோ அந்தச் சேவை வழங்குநர், கட்டளையில் விதிக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதும் அத்தகைய அசைவற்ற ஆதனத்தை அல்லது வானூர்தி நிலையங்களை நன்னிலையில் வைத்திருந்து பேணுவதும் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் எந்தச் சேவை வழங்குநருக்கு ஏதேனும் அசைவற்ற ஆதனம் அல்லது எவையேனும் வானூர்தி நிலையங்கள் கிடைக்கும் படியாக்கப்பட்டனவோ அந்தச் சேவை வழங்குநர், அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி—

(அ) அத்தகைய ஆதனத்தில் அல்லது வானூர்தி நிலையத்தில் எவையேனும் மாற்றத்தைச் செய்தலோ அல்லது அத்தகைய ஆதனத்தில் எவையேனும் புதிய நிர்மாணிப்புகளை எழுப்புதலோ ஆகாது ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை அல்லது எவையேனும் வானூர்தி நிலையங்களைக் கையுதிர்த்தல் ஆகாது ; அல்லது

(இ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை அல்லது எவையேனும் வானூர்தி நிலையங்களைக் குத்தகைக்கு அளித்தலாகாது.

சேவை வழங்குநர் முதலியோராகக் குறித்த சில ஆட்களை நியமிப்பதற்கெதிரான தடை.

**9**. ஆளெவரும் அல்லது ஆட்கள் குழுவெதுவும், இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு அல்லது சர்வதேசக் குடியியல் வான்செலவுக்கு அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்துமிடத்து அல்லது ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளவிடத்து, அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் குழு சேவை வழங்குநரொருவராக நியமிக்கப்படுதல் அல்லது வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான உரிமமொன்று வழங்கப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது.

வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான உரிமங்களை வழங்குதல்.

**10**. வான்வழிச் சேவைகளை வழங்குதலானது விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென வழங்கப்படும் உரிமமொன்றின் நியதிகளின்படி இருத்தல் வேண்டுமென்பதுடன், 6 ஆம்பிரிவின்கீழ்

நியமிக்கப்படும் சேவை வழங்குநரொருவர் அத்தகைய ஓர் உரிமத்துக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையவராதலும் வேண்டும். 30 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வெவ்வேறு வகுதியினவான வான்வழிச் சேவைகள் தொடர்பில் தனிவேறான உரிமங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

வான்வழிச் சேவைகளை வழங்குவதற் கான உரிமத்தை வழங்குதல்.

**11.** (1) இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, சேவை வழங்குநரொருவருக்கு -

(அ) 30 ஆம் பிரிவின் (ஏ), (ஐ), (ஒ), (ஓ) மற்றும் (ஔ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வகுதியினவான சேவைகள் தொடர்பில் வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான உரிமமொன்று அதிகாரசபையினால் வழங்கப்படலாம் ; அத்துடன்

(ஆ) 30 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வகுதியினவான சேவைகள் தொடர்பில் வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான உரிமமொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்கு நிறைவேற்றப்படவேண்டிய தேவைப்பாடுகள், விண்ணப்பங்களைச் செய்வதற்கான நடவடிக்கைமுறை, சேவைகளைப் பயன்படுத்துவோரிடமிருந்து உரிமம் வைத்திருப்பவரினால் அறவிடப்படக்கூடியவாறான கட்டணங்கள் அல்லது ஏனைய இறுப்புக்கள் தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்பகாரர்களினால் கொடுத்துதவப்படவேண்டிய தகவல்கள் மற்றும் உரிமமொன்றை வழங்குவதற்காகவும் புதுப்பிப்பதற்காகவும் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் அல்லது வேறெவையேனும் இறுப்புக்கள் உட்பட உரிமமொன்றுடன் இணைக்கப்படவேண்டிய நியதிநிபந்தனைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(3) வான்வழிச் சேவைகளை அளிப்பதற்கான உரிமமொன்றை வழங்குவதற்காக (2) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகள், குறிப்பிட்ட வான்வழிச்சேவையின் நோக்கெல்லை, தன்மை அல்லது அது அளிக்கப்படும் இடம் என்பவற்றைப்பொறுத்து, வேறுபடலாம்.

(4) விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எல்லா உரிமங்களும் அவை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு வழங்கப்படும் ஏதேனும் உரிமம், புதுப்பித்தற் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மீது, ஒவ்வொன்றும் ஓராண்டுக்கான மேலதிகக் காலப்பகுதிகளுக்கு, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதி பதியினால் மீளப் புதுப்பிக்கவும்படலாம்.

*வானூர்தி நிலையங்களை வகுப்பாக்கம் செய்தல்.*

**12.** (1) அதிகாரசபையானது, அந்நோக்கத்துக்காக விதித்துரைக்கப்படுகின்றவாறாக அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க வானூர்தி நிலையங்களை வகுப்பாக்கம் செய்தல் வேண்டும். அந்நோக்கத்துக்காக அமைச்சரினால் ஆக்கப்படவேண்டிய ஒழுங்குவிதிகள், வடிவமைப்பு, தொழிற்பாட்டு நிலைமைகள், வழங்கப்படும் வான் வழிச் சேவைகள், வானூர்தி நிலையங்களின் பயன்பாட்டு நோக்கெல்லையும், நோக்கமும் என்பவற்றைப் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சர்வதேச வானூர்தி நிலையம் ஒன்றாக வகுப்பாக்கம் செய்யப்பட்ட எவையேனும் வானூர்தி நிலையங்கள் பற்றியனவும், இலங்கையின் ஆள்புலத்திலுள்ள மற்றெல்லா வானூர்தி நிலையங்களும் பற்றியனவுமான விபரங்களை அதிகாரசபையானது, இலங்கை வான்வழித் தகவல் வெளியீட்டில் வெளியிடுவித்தல் வேண்டும்.

*வானூர்தி நிலையங்களைத் தாபித்தல்.*

**13.** (1) ஒரு வானூர்தி நிலையத்தைத் தாபிப்பதற்கு நாடுகின்ற எவரேனுமாள் அல்லது வானூர்தி நிலையமொன்றை விசாலிப்பதற்கு நாடுகின்ற எவரேனும் உரிமம் வைத்திருப்பவர், அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளுக்கிணங்க, பின்வருவனவற்றுக்கு அடிப்படையாக ஏற்பாடு செய்யவேண்டிய வரைப்படுத்து திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும் :—

(அ) வானூர்தி நிலையத்தின் வான்செலவுசார் மற்றும் வான்செலவுசாரா இயற்பொருள்சார் வசதிகளை அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) ஒரு வானூர்தி நிலையத்தைச் சுற்றியுள்ள இடப் பரப்புக்களைக் காணிப்பயன்பாட்டுக்காக அபிவிருத்தி செய்தல் ;

(இ) வானூர்தி நிலைய நிர்மாணமும் தொழிற்பாடும் சூழலின்மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை மதிப்பீடு செய்தல் ;

(ஈ) வானூர்தி நிலையத்துக்கான அணுகுகைத் தேவைப் பாடுகளை ஏற்படுத்துதல் ; அத்துடன்

(உ) வானூர்தி நிலையப் பாதுகாப்பு அம்சங்களும் கருத் திட்டத்திற்கான செலவுத்தொகையும் நிதிச்செலவீடும்.

(2) ஒரு வானூர்தி நிலையத்தை, விடயத்துக்கேற்ப, தாபித்த லானாது அல்லது விசாலித்தலானது அது தொடர்பிலான வரைப்படுத்து திட்டம் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படும் வரை தொடங்கப்படுதலாகாது. அதிகாரசபையானது, வரைப் படுத்து திட்டமொன்றை அங்கீகரிக்கு முன்னர், கலந்தாலோசிக் கப்படுவது தோதாகவுள்ளது அல்லது அவசியமாகவுள்ளது என அது கருதுகின்ற எந்த நியதிச்சட்டமுறையான அதிகாரசபையின், உத்தேசிக்கப்பட்ட நிர்மாணம் அல்லது விசாலிப்பு என்பனமீதும் சூழலின் மீதான அதன் தாக்கத்தின்மீதுமான கருத்துக்களும் அவதானிப்புகளும் வேறேதேனும் காரணியும், அத்தகைய வரைப் படுத்து திட்டம் அங்கீகரிக்கப்படுமுன்னர் கவனத்துட்கொள்ளப் படுவது அத்தியாவசியமாகவுள்ளதோ அந்த வேறேதேனும் நியதிச் சட்டமுறையான அதிகாரசபையைக் கலந்தாலோசித்தல் வேண் டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரமொன்று, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையவும், ஒரு கட்டணக் கொடுப்பனவின் மீதும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையானது அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரம் தொடர்பான அறிவித்த லொன்றை வர்த்தமனியில் வெளியிடுவித்தலும் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப் பட்ட தகவல் தவிர்ந்த, அங்கீகரிக்கப்பட்ட வரைப்படுத்து திட்டத் தின் பிரதியொன்று அதிகாரசபையின் அலுவலகத்தில்

வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையி னால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணக் கொடுப்பனவின்மீது பார்வைக்காகப் பொதுமக்களுக்கு கிடைக்கும் படியாக்கப்படுதலும் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், அவசியமென அது கருதுகின்றவிடத்து, அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதோ அந்த ஆளின் வேண்டு கோளின்பேரில், வரைப்படுத்து திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டிருக்கக்கூடிய எவையேனும் மாற்றங்களுக்கு முகங்கொடுக்கவென அத்தகைய வரைப்படுத்து திட்டத்தை மீளாயும்படியும் அல்லது மதிப்பீடு செய்யும்படியும், அதற்குத் தோதான திரிபுகளை அல்லது சரிக்கட்டுதல்களைச் செய்யும் படியும் தேவைப்படுத்தலாம்.

*வரைப்படுத்து திட்டம் அங்கீகரிக்கப் பட்ட பின்னர் மேலும் அங்கீகாரம் எதுவும் தேவைப்பட மாட்டாது.*

**14.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் வரைப்படுத்து திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அது வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அமைந்ததாகவிருத்தலாகாது அல்லது அச்சட்டத்தின்கீழ் மேலும் அங்கீகரிக்கப்படுவதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

*வானூர்தி நிலைய உரிமங்களை வழங்குதல்.*

**15.** (1) பன்னிரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும், இலங்கை வான்படையினால் புறநீங்கலாகப் பயன்படுத்தப்படும் வானூர்தி நிலையங்கள் தவிர்ந்த, வானூர்தி நிலையமெதுவும், அது, அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதாயினுஞ்சரி, அல்லது தனிப்பட்ட முறையில் சொந்தமாக வைத்திருக்கப் பட்டதாயினுஞ்சரி, பணிப்பாளர் தலைமையதிபதியினால் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றுக்கு இசைந்தொழுகவன்றியும் அத்தகைய உரிமத்தின் நியதிநிபந்தனை களுக்கு அமையவன்றியும், பேணப்படுதலோ, தொழிற்படுத்தப் படுதலோ அல்லது சீராக்கப்படுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமமொன்றை வழங்கும் நோக்கத்துக்காக, வானூர்தி நிலையமொன்றைத் தொழிற்படுத்துதல் என்பது, பின்வருவனவற்றை உறுதிப்படுத்து கின்ற செயற்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) வானூர்தியொன்றின் வானேறுகையும் தரையிறக்கமும், அதனுடன் தொடர்புபட்ட நிலத்தின் மீதான வானூர்தியின் நகர்வுகளும் ;

(ஆ) வானூர்திக்கான பாதுகாப்பும் கவனிப்பும் ; அத்துடன்

(இ) வானூர்தி நிலையத்தின் பேணுகையும் அபிவிருத்தியும்.

(3) உரிமத்துக்கான விண்ணப்பமொன்று, எவரேனும் சேவை வழங்குநரினால் செய்யப்படலாமென்பதுடன் அவர் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துதலும் வேண்டும். உரிமமொன்று வழங்கப்பட்டதும், ஒவ்வொரு புதுப்பித்தலும் ஓராண்டைக் கொண்ட மேலதிகக் காலப் பகுதிகளுக்கானதாக அத்தகைய உரிமம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் புதுப்பிக்கப்படுவதற்கமையவும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய புதுப்பித்தற் கட்டணக் கொடுப்பனவின்மீதும், வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதலும் வேண்டும்.

(4) வானூர்தி நிலையங்களுக்கு உரிமமளித்தற்கான கட்டளைக்கற்கள், 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினாற் செய்யப்பட்ட வானூர்திகளின் வகுப்பாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான இறுப்புக்கள்.

**16.** (1) அமைச்சர், அதிகாரசபையின் விதப்புரைகளின்மீது, வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான இறுப்புக்கள் பற்றிய அளவுத்திட்டமொன்றை ஏற்படுத்துதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரசபை, வான்வழிச் சேவைகளை வழங்குவதற்காக எவரேனும் சேவை வழங்குநருக்கு உரிமமொன்றை வழங்கும்போது, வழங்கப்பட்ட உரிமத்தில், அத்தகைய உரிமம் வைத்திருப்பவரினால் வழங்கப்படும் வான்வழிச் சேவையைப் பயன்படுத்துவோரிடமிருந்து அத்தகைய உரிமம் வைத்திருப்பவரினால் அறவிடப்படக்கூடியனவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஏற்படுத்தப்பட்ட இறுப்புக்கள் பற்றிய அளவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டனவுமான இறுப்புக்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) வான்வழிச் சேவைகளை வழங்குவதற்காக ஏதேனும் உரிமத்தை வைத்திருக்கும் சேவை வழங்குநரொருவர், அத்தகைய உரிமம் வைத்திருப்பவரினால் அளிக்கப்படும் சேவையைப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடப்படும் இறுப்புக்கள், சமவாயத்துக்கான திறத்தவர்களாயுள்ள எல்லா அரசுகளினதும் வானூர்திகள் தொடர்பில் ஒரு சீரானமுறையில் பிரயோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

தேசியக் குடியியல் வான்செலவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்.

**17.** (1) அதிகாரசபையானது, இயைபான நி. வி. வழக்கங்களுக்கிணங்க தேசியக் குடியியல் வான்செலவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை வகுத்தமைத்தல் வேண்டும்.

(2) வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குவதற்காகவும் பேணுவதற்காகவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எந்தச் சேவை வழங்குநருக்கு உரிமமொன்று வழங்கப்படுகின்றதோ அந்தச் சேவை வழங்குநரினால், பின்வரும் நோக்கங்களுள் ஒவ்வொன்றுக்கும் எனப் பயன்படுத்தப்பட வேண்டிய மனித மற்றும் ஏனைய மூலவளங்களையும், பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகளையும் குறித்துரைக்கின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் வகுத்தமைக்கப்பட்ட தேசியக் குடியியல் வான்செலவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கிணங்க ஏற்படுத்துதல் அத்தகைய சேவை வழங்குநரின் கடமையாதல் வேண்டும் :—

(அ) வானூர்தி நிலையத்தில் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில், வான்செலவுடனான சட்டவிரோதமான தலையீட்டைத் தடுத்தல், கண்டுபிடித்தல், அதைரியப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் செயலூக்கங்காட்டுதல் ;

(ஆ) வானூர்தியொன்றுக்கெதிராக அல்லது பறந்துகொண்டிருக்கும் வானூர்தியொன்றுக்கெதிராக வான்செலவுடனான சட்டவிரோதமான தலையீடு தொடர்பில் செயலூக்கங்காட்டுதல் ;

(இ) வானூர்தியொன்றுக்கெதிராக அல்லது பறந்துகொண்டிருக்கும் வானூர்தியொன்றுக்கெதிராக வான்செலவு

டனான சட்டவிரோதமான தலையீடுபற்றிய அச்சுறுத்தல் தொடர்பில் செயலூக்கங்காட்டுதல் ;

(ஈ) வானூர்தியொன்றை, வானூர்தி நிலையத்தின் இடப்பரப்புகளை அல்லது எவையேனும் வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடப்பரப்பை அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் அணுகுவதனைத் தடுத்தல் ; அத்துடன்

(உ) எந்தச் சேவை வழங்குநருக்கு அத்தகைய வானூர்தி நிலைய உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தச் சேவை வழங்குநரின் கடமைகளைப் புரிதலுடனான ஏதேனும் சட்டவிரோதமான தலையீடு இடம் பெறுதலை அல்லது இடம் பெறும் அச்சுறுத்தலை அறிக்கையிடுதல்.

வான்செலவுப் பாதுகாப்புச் சேவையை வழங்குகின்ற சேவை வழங்குநரின் கடமைகள்.

**18.** (1) ஒரு வானூர்தி நிலையத்தின் எல்லைகளினுள் அல்லது வான்வழிச்சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில் வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குகின்றவரும் பேணுகின்றவருமான சேவை வழங்குநரொருவர் —

(அ) இலங்கை அரசாங்கத்தினதும் அத்தகைய வானூர்தி நிலையத்தைப் பயன்படுத்தும் ஏனையோரினதும் ஆதனத்தைப் பாதுகாத்தலும், காத்தலும் வேண்டுமென்பதுடன், வானூர்தி நிலையத்தினுட் பிரவேசிக்கின்ற அல்லது அதனைப் பயன்படுத்துகின்ற ஆட்களினதும் அத்துடன் அவ்வாறு பணிக்கப்படுமிடத்து, வானூர்தி நிலையத்தின் எல்லைகளினுள் உள்ள வானூர்திகளினதும் ஏனைய சாதனங்களினதும் காப்பை நியாயமானமுறையில் உறுதிப்படுத்துதலும் வேண்டும் ;

(ஆ) வானூர்தி நிலையத்தினுள்ளும் வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்திலும் அல்லது அமைவிடத்திலும் எல்லாச் சட்டமீறல்களையும் தொல்லைகளையும் தடுப்பதற்கு பிரயத்தனமெடுத்தல் வேண்டும் ;

(இ) வானூர்தி நிலையத்தினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில் ஒழுங்கீனமானமுறையில் நடக்கின்றவரான அல்லது சந்தேகத்துக்கிடமானவரான எவரேனுமாளைக் கைப்பற்றுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) வானூர்தியொன்றுட்பட, வானூர்தி நிலையத்தினதும் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்தினதும் அல்லது அமைவிடத்தினதும் அதனைப் பயன்படுத்துவோரினதும் அங்குள்ள ஆனத்தினதும் காப்பும் பாதுகாப்பும் தொடர்பாக, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய சேவை வழங்குநருக்கு விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதில் உதவுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கடமைகளைப் புரிகையில் —

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின்கீழ் அல்லது 1996 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, சர்வதேச குடியியல் வான்செலவுக்குச் சேவையாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன்செயல்களை அடக்குதல் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவரான அல்லது புரிந்துகொண்டிருக்கின்றவரான ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின்கீழ் அல்லது 1996 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, சர்வதேச குடியியல் வான்செலவுக்குச் சேவையாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன்செயல்களை அடக்குதல் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும் தறுவாயிலுள்ளாரென நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்றவரான ;

(இ) இச்சட்டத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் கீழ் அல்லது 1996 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, சர்வதேச குடியியல் வான்செலவுக்குச் சேவை யாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன்செயல்களை அடக்குதல் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு புரியப்படுவதற்கு உதவியுள்ளாரென்றும் உடந்தையாகவிருந்துள்ளாரென்றும் நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்றவரான ;

(ஈ) வானூர்தி நிலையமொன்றினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படுகின்ற வேறேதேனும் இடத்தி னுள் அல்லது அமைவிடத்தினுள் களவாடப்பட்ட அல்லது மோசடியான முறையில் பெறப்பட்ட ஆதன மென நியாயமானமுறையில் சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் தீங்குவிளைவிக்கும் அல்லது அபாயகரமான ஆயுதத்தை அல்லது எவையேனும் பண்டங்களை, செல்லுபடியான சாக்கின்றித் தமது கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் வைத்திருக்கின்றவரான ;

(உ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் எந்தத் தவறுதொடர்பில் ஆளொ ருவர் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படலாமோ அந்தத் தவறொன்றாகவுள்ள தவறொன்றை வானூர்தி நிலையத்தினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படுகின்ற ஏதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில் புரிகின்றவரான ;

(ஊ) வானூர்தி நிலையத்தினுள் உள்ள ஏதேனும் ஆதனத்தின் திருட்டைப்புரிகின்றவரான அல்லது அதற்குச் சேதம் விளைவிக்கின்றவரான ;

(எ) இலங்கை அரசாங்கத்துக்கு உரியதான அல்லது அதன் உடைமையிலுள்ள அல்லது வானூர்தி நிலையத்தினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படுகின்ற ஏதேனும் இடத்தில் அல்லது

அமைவிடத்தில் உள்ள ஏதேனும் ஆதனத்தின் திருட்டை அத்தகைய ஆள் புரிந்துள்ளாரென்று அல்லது புரியும் தறுவாயிலுள்ளரென்று அல்லது சேதம் விளைவித்துள்ளாரென்று அல்லது சேதம் விளைவிக்கும் தறுவாயிலுள்ளாரென்று நம்புவதற்குக் காரணமாகும் சூழ்நிலைகளில் வானூர்தி நிலையத்தினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படுகின்ற ஏதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில் காணப்படுகின்றவரான ; அல்லது

(ஏ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றை அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றை அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் கீழான தவறொன்றை அல்லது 1996 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, சர்வதேச குடியியல் வான்செலவுக்குச் சேவையாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன்செயல்களை அடக்குதல் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரியும் நோக்குடன் தாம் சமுகமாயிருப்பதனை மறைப்பதற்கான முற்காப்புகளை எடுக்கின்றாரென நம்புவதற்குக் காரணமாகும் சூழ்நிலைகளின்கீழ் அத்தகைய முற்காப்புகளை எடுக்கக் காணப்படுகின்றவரான; அல்லது

(ஐ) வானூர்தி பறந்துகொண்டிருக்கையில் அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் காணப்படுகின்றவிடத்து, ஏவுகின்ற விமானமோட்டியின் வேண்டுகோளின்பேரில்,

எவரேனுமாளைத் தடுத்துவைத்தல், அத்தகைய சேவை வழங்குநரின் எவரேனும் ஊழியருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) இரண்டாம் பிரிவின்கீழ் தடுத்துவைக்கப்பட்டவரான எவரேனுமாள் விட்டுவிடப்பட்டாலொழிய, சட்டத்துக்கிணங்க அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கென பொலிசு அலுவலரொருவரிடம் உடனடியாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

*தேடுகையிடுவதற்கான தத்துவம்.*

**19.** எவரேனுமாள், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றை, அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றை அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின்கீழான தவறொன்றை அல்லது 1996 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, சர்வதேச குடியியல் வான்செலவுக்குச் சேவையாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன்செயல்களை அடக்குதல் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரென்று அல்லது உடன் புரிவதற்குள்ளார் என்று நம்புவதற்குக் காரணமுள்ளவிடத்து, அவருக்கு உரிய பொருட்கள் அல்லது வானூர்தி நிலைய வளவுகளினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில் அத்தகைய ஆளினால் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனம் உட்பட அத்தகைய ஆளைத் தேடுகையிடுதல், பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குகின்றவரும் பேணுகின்றவருமான சேவை வழங்குநரின் எவரேனும் ஊழியருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஒரு பெண்ணைத் தேடுகையிடுவிப்பது அவசியமாகவுள்ளவிடத்து, அத்தகைய தேடுகையானது, மானத்துக்குக் கண்டிப்பான கவனஞ்செலுத்தி இன்னொரு பெண்ணினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*தீயின் அல்லது வேறேதேனும் அனர்த்தத்தின் விடயத்தில் செயற்படுகை.*

**20.** ஒரு வானூர்தி நிலையத்தினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் வேறேதேனும் இடத்தில் அல்லது அமைவிடத்தில் ஏற்படுகின்ற தீயின் அல்லது வேறேதேனும் அனர்த்தத்தின் எல்லா விடயங்களிலும், அதன்மூலம் அபாயத்துக்குள்ளான ஆட்களையும் ஆதனத்தையும் பாதுகாப்பதற்கு அவசியமான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல், அத்தகைய வானூர்தி நிலையத்தினுள் அல்லது வான்வழிச் சேவைகள் வழங்கப்படும் இடத்தில் அல்லது அமைவிடத்தினுள் கடமையிலுள்ள வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குகின்றவரும் பேணுகின்றவருமான சேவை வழங்குநரின் ஊழியர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

**21.** (1) வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குகின்றவரும் பேணுகின்றவருமான சேவை வழங்குநரொருவர், அத்தகைய சேவை வழங்குநரினால் தொழிலுக்கமர்த்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும், அத்தகைய சேவை வழங்குவதில் பயன்படுத்தப்படவுள்ள சுடுபடைக்கலங்களினதும் வெடிமருந்துகளினதும் தன்மை, வகை, அளவு என்பன தொடர்பாகவும் பணிப்பாளர் தலைமையதிபதின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

சேவை வழங்குநரினாற் பயன்படுத் தப்படவுள்ள ஊழியர் கோப்பும் சுடுபடைக் கலங்களும் பணிப்பாளர் தலைமையதி பதியினால் அங்கீகரிக்கப் படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று, பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக்கூடியவாறான எவையேனும் நியதி அல்லது நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

**22.** வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குகின்றவரும் பேணுகின்றவருமான சேவை வழங்குநரொருவரினால் அல்லது அத்தகைய சேவை வழங்குநரின் எவரேனும் ஊழியரினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஒரு வானூர்தி நிலையத்தினுள் அல்லது வானூர்தி நிலையத்துக்கு வெளியே ஆட்களின் அல்லது ஆதனத்தின் காப்பை அல்லது பாதுகாப்பை உறுப்படுத்தும் நோக்கத்துக்காக நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் அல்லது செய்யாது விடப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அத்தகைய சேவை வழங்குநருக்கெதிராக அல்லது அத்தகைய சேவை வழங்குநரின் எவரேனும் ஊழியருக்கெதிராக, பணிப்பாளர் தலைமையதிபதிக்கெதிராக, அதிகாரசபைக்கெதிராக அல்லது இலங்கை அரசாங்கத்துக்கெதிராகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைவதாதலாகாது.

இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நல்லெண ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக் கைக்கான பாதுகாப்பு.

**23.** (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம்—

பாதுகாக்கப் பட்ட இடப்பரப்பை வெளிப் படுத்துதல்.

(அ) ஒரு வானூர்தி நிலையத்தை அத்தகைய வானூர்தி நிலையம் குடியியல் வான்செலவு நோக்கத்துக்காகப் பேணப்படினுஞ்சரி அல்லது கூட்டுப்பயன்பாட்டு அடிப்படையில் பேணப்படினுஞ்சரி ;

(ஆ) வான்வழி உதவுகருவிகளை வழங்குவதற்கான சாதனங்கள் நிறுவப்படுகின்ற ஏதேனும் அமைவிடத்தை ; அல்லது

(இ) எந்த இடப்பரப்புத் தொடர்பில் வானூர்தி நிலைய மொன்றைத் தாபிப்பதற்கான வரைபடுத்துத் திட்ட மொன்று 13 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள் ளதோ அந்த ஏதேனும் இடப்பரப்பை,

அண்டியுள்ள அல்லது தொடுத்தமைந்த ஏதேனும் காணியை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (இச்சட்டத்தில் "பாதுகாக் கப்பட்ட இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாதுகாக் கப்பட்ட இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று, அவ்விடப் பரப்பில் அடங்கியுள்ள காணியில் அல்லது காணிகள் ஒவ்வொன் றினதும் பரப்பளவு, வரிமதிப்பீட்டிலக்கம் அல்லது எல்லைவரை யறைகளை எடுத்துரைப்பதன்மூலம் காணி இடப்பரப்பினை வரையறை செய்யலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, எந்தச் சேவை வழங்குநருக்கு வான்வழி உதவு கருவிகளை வாங்குவதற்கான உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் சேவை வழங்குநர் தொடர்பில், பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பொன்றிலான காணி யின் பயன்பாடு, வானூர்திகளின் காப்பான வானேற்றுகை யையும் தறையிறக்கத்தையும் பாதுகாப்பதற்கு அவ்விடப்பரப்பி னுள் பாதுகாக்கப்பட்ட வலயங்களை உருவாக்குதல், வானேறு கைக்கும் அணுகுகைக்குமாக வானிடை வெளியிலான காப்பு, சூழற் பாதுகாப்பு மற்றும் வானூர்தி நிலையத்துக்கு வெளியே யுள்ள மூலங்களிலிருந்து இலத்திரன் அல்லது வேறு தலையீட் டுக்கெதிராகக் குடியியல் வான்செலவைப் பாதுகாத்தல் என்பன தொடர்பான அறிவுறுத்தல்களை, பணிப்புகளை அல்லது நடவடிக்கைமுறைகளை வழங்குதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பினுள் எவையேனும் கட்டிடங்களை அல்லது வேறு கட்டமைப்புகளை நிர்மாணித்தல் தொடர்பாகவும் ஏலவேயுள்ள கட்டிடங்களுக்கு அல்லது வேறு கட்டமைப்புகளுக்குத் திருத்தங் களைச் செய்தல் தொடர்பாகவும் ஒரு வானூர்தி நிலையத்தின் அல்லது வான்மார்க்கத்தின் அயலில் துல்லியமான வெளிச்ச மிடுதலும் அடையாளங்களிடுதலும் தொடர்பிலும் இணங்கி யொழுகப்படவேண்டிய தேவைப்பாடுகளை எடுத்துரைக்கின்ற அறிவுறுத்தல்களை, பணிப்புகளை மற்றும் நடவடிக்கை முறை களை வழங்குதல் வேண்டும்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எப்படியிருப்பினும், ஆளெவரும் அல்லது அதிகார சபையெதுவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப் படும் அனுபதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, பாதுகாக்கப்பட்ட ஓர் இடப்பரப்பினுள், ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேறு கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான அல்லது ஏலவேயுள்ள ஏதேனும் கட்டிடத்துக்கு அல்லது கட்டமைப்புக்கு எவையேனும் திருத்தங்களை நிறைவேற்றுவதற்கான அனுமதியை வழங்குதலாகாது என்பதுடன், அத்தகைய அனுமதிப்பத்தி ரத்தைப் பெறாமல் ஏதேனும் கட்டிடம் நிர்மாணிக்கப்படுமிடத்து, அல்லது ஏதேனும் திருத்தம் நிறைவேற்றப்படுமிடத்து, சொந்தக் காரரின் செலவில் விடயத்துக்கேற்ப, அத்தகைய கட்டிடத்தை அல்லது கட்டிடத்துக்கான திருத்தத்தை இடித்தழிப்பதற்கு அதிகாரசபையானது தத்துவமுடையதாதல் வேண்டும்.

*பாதுகாக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் உள்ள காணியைக் கொள்ளுதல்.*

**24.** (1) அரச காணி தவிர்ந்த, பாதுகாக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் உள்ள ஏதேனும் காணி இச்சட்டத்தின்கீழான ஏதேனும் நோக்கத்துக்காக அதிகாரசபையினால் தேவைப்படு கின்றவிடத்தும், அமைச்சர் உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்கு மிடத்தும், கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காணி, காணி கொள்ளுதற் கட்டடத்தை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்காக, பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு அதி காரசபைக்குக் கைமாற்றவும் படலாம்.

(2) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்காகக் காணியைக் கொள்வதற்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை விடயத்துக்கேற்ப, அதிகாரசபையின் நிதியத்தி லிருந்து அல்லது இச்சட்டத்தின் 108 ஆம் பிரிவினால் தாபிக் கப்பட்ட குடியியல் வான்செலவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*உரிமம் வைத்திருப்போரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப் படுதல்.*

**25.** இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எந்தச் சேவை வழங்கு நருக்கு உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுகின்றதோ அந்தச் சேவை வழங்குநர் ஒருவர், இச்சட் டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாகவுள்ளவையும் விடயத்துக் கேற்ப, அமைச்சரினால் அல்லது பணிப்பாளர் தலைமையதி பதியினால் அதற்கென வழங்கப்படக்கூடியவாறானவுமான எவையேனும் பணிப்புகளுக்கமைய, அத்தகைய உரிமத்தின்கீழ்

அச்சேவை வழங்குநரினால் வழங்கப்படும் வான்வழிச் சேவை களைப் பயன்படுத்துவோருக்கு அத்தகைய அறிவுறுத்தல்களை விடுத்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பது டன், அத்தகைய அறுவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய வான்வழிச் சேவையைப் பயன்படுத்துகின்ற அத்த கைய எல்லா ஆட்களினதும் கடமையாதலும் வேண்டும்.

*உரிமங்களை இடை நிறுத்துதலும் இல்லா தொழித்தலும்.*

**26.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் சேவை வழங்குநரொரு வருக்கு வழங்கப்படும் உரிமமொன்று, அத்தகைய உரிமத்தை வழங்கிய, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் —

(அ) (i) உரிமத்தின் நியதிநிபந்தனைகளுக்கு ;

(ii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு ; அல்லது

(iii) விடயத்துக்கேற்ப, அமைச்சரினால், அதிகார சபையினால் அல்லது பணிப்பாளர் தலைமை யதிபதியினால் வழங்கப்படும் எவையேனும் அறிவுறுத்தல்களுக்கு அல்லது பணிப்புகளுக்கு,

இணங்கியொழுகாமை அல்லது இணங்கியொழுக மறுக்கின்றமை என்ற ஏதுவின்மீது —

(ஆ) செலுத்தப்படத் தேவைப்படுத்தப்பட்ட எவை யேனும் கட்டணங்களை அல்லது இறுப்புக்களைச் செலுத்தாமை என்ற ஏதுவின்மீது ; அல்லது

(இ) உரிமத்தின்கீழ் வழங்கப்படும் சேவையின் தங்கு தடையற்ற தொழிற்பாட்டை அல்லது அத்தகைய தொழிற்பாட்டின் காப்பைப் பாதிக்கக்கூடியவை யான, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய வேறு காரணங்க ளின் மீது,

இடைநிறுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஓர் இடைநிறுத்துகை மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கானதாக இருத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்தச் சேவை வழங்குநரொருவரின் உரிமம் இடைநிறுத்தப்படுகின்றதோ அல்லது இல்லாதொழிக்கப்படுகின்றதோ அந்தச் சேவை வழங்குநர், அத்தகைய இடை நிறுத்துகைக்கு அல்லது இல்லாதொழிப்பதற்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின்மீது அவரது முடிவு முற்றானதும் முடிவானதுமாக இருத்தலும், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அதற்கெதிராக மேன்முறையீடு செய்யப்படமுடியாததாக இருத்தலும் வேண்டும்.

*உரிமமொன்றின் இடைநிறுத்துகையின்மீது அல்லது இல்லாதொழிப்பின் மீது கைமாற்றப்படும் ஆதனத்தின் மீதான பயன்.*

**27.** சேவை வழங்குநரொருவருக்கு வழங்கப்படும் உரிமமொன்று இடைநிறுத்தப்படும் காலப்பகுதியின்போது, அத்தகைய சேவை வழங்குநர், இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சேவை வழங்குநருக்குக் கிடைக்கும்படியாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை அணுகுதலாகாது என்பதுடன், உரிமம் ஒன்று இல்லாதொழிக்கப்படுமிடத்து, அத்தகைய சேவை வழங்குநருக்குக் கிடைக்கும்படியாக்கப்பட்ட எல்லா ஆதனமும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அதிகாரசபையானது, இல்லாதொழிக்கப்பட்ட உரிமமானது எந்த வான்வழிச் சேவை தொடர்பில் வழங்கப்பட்டிருந்ததோ அந்த வான் வழிச் சேவையை வழங்குவதற்காக வேறெந்தச் சேவை வழங்குநருக்கு அதன் பின்னர் உரிமமொன்று வழங்கப்படுகின்றதோ அந்த வேறெவரேனும் சேவை வழங்குநருக்கு அந்த ஆதனத்தைக் கிடைக்கும்படியாக்கலாம்.

*உரிமமொன்று இடைநிறுத்தப்படும்போது அல்லது இல்லாதொழிக்கப்படும்போது வான்வழிச் சேவைகளை வழங்குதல்.*

**28.** (1) அதிகாரசபையானது, எந்தச் சேவை வழங்குநரின் உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அந்தச் சேவை வழங்குநரினால் வழங்கப்பட்ட வான்வழிச் சேவைகளின் தொடர்ச்சியை அத்தகைய இடைநிறுத்தற் காலப்பகுதியின்போது, அல்லது உரிமமொன்று இல்லாதொழிக்கப்படுவதன் விடயத்தில் அத்தகைய வான் வழிச் சேவையினை வழங்குவதற்காக வேறெவரேனும் சேவை வழங்குநருக்குப் புதிய உரிமமொன்று வழங்கப்படும்வரை பேணுவதற்குத் தேவையான அல்லது அவசியமான எல்லாவற்றையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது வான்வழிச் சேவைகளை வழங்குவதில் எந்தச் சேவை வழங்குநரின் உரிமம் விடயத்துக்கேற்ப, இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அல்லது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சேவை வழங்குநரின் ஊழியரொருவரினது உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் பங்கமின்றியும் அவை தொடர்பான தொழில் ஒப்பந்தமொன்றில் முரணாக அடங்கியுள்ள எது எவ்விதமிருப்பினும், அத்தகைய எவரேனும் ஊழியரின் சேவைகளைப் பெறலாமென்பதுடன், அவசியமான விடத்து, வேறெவரேனும் சேவை வழங்குநரின் சேவைகளையும் பெறலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான சேவைகளைப் பெறுவதற்காகச் செய்யப்படத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு அல்லது இறுப்பு, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அதன் நிதியத்திலிருந்து அல்லது இச்சட்டத்தின் 108 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட குடியியல் வான்செலவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கு அதிகாரசபை தத்துவமுடையதாகவிருத்தல்.

**29.** இச்சட்டத்தின் இப்பாகத்தினது முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ளது எதுவும், 30 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறாக ஏதேனும் வகுதியினவான வான்வழிச் சேவைகளை வழங்குவது உசிதமானதென அல்லது அவசியமானதென அதிகாரசபை கருதுகின்றவிடத்து, அதிகாரசபையே அவ்வாறு செய்வதனைத் தடைசெய்தலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வான்வழிச் சேவையானது, எச்சேவை தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அச்சேவையொன்றாகவிருக்குமிடத்து, அதிகாரசபையானது, பணிப்பாளர் தலைமையதிபதியின் ஒருப்பாட்டுடன் மட்டுமே அத்தகைய சேவையை வழங்குதல் வேண்டும்.

வான்வழிச் சேவையின் வரைவிலக்கணம்.

**30.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, “வான்வழிச் சேவைகள்” என்பது -

(அ) வானூர்தி நிலையங்களைப் பேணுதலும், தொழிற் படுத்தலும், சீராக்குதலும் அத்தகைய வானூர்தி நிலையங்களில் வானூர்தி நிலைய வசதிகளை வழங்குதலும் ;

(ஆ) வானூர்தி நிலையங்களில் தேடுகை, மீட்பு, தீயணைப் புச் சேவைகளை வழங்குதலும், பேணுதலும் ;

(இ) வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குதலும் பேணுதலும் ;

(ஈ) வான் நடமாட்டச் சேவைகளை வழங்குதல் ;

(உ) வான்வழித் தகவற் சேவைகளை வழங்குதல் ;

(ஊ) வான்வழித் தொடர்புச்சேவைகளை வழங்குதல் ;

(எ) தொடர்பு, வான்கலமோட்டல் அல்லது கூர்ந்தவதானத்துக்கான வான்வழி உதவுகருவிகளை வழங்குதல் ;

(ஏ) வானூர்திகளுக்கு வான்செலவு எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி வழங்கல் தொடர்பான சேவைகளை வழங்குதல் ;

(ஐ) சுத்திகரிப்புச் சேவையுட்பட, நடைபயிற்றுதளம் மீது வானூர்திகளை அனுப்புவதற்கான உதவியை அல்லது சாதனங்களை வழங்குதல் ;

(ஒ) வானூர்திகளுக்குத் தரைக் கையாளுகை வசதிகளை அல்லது சேவைகளை வழங்குதல் ;

(ஓ) வானூர்திகளுக்கு உணவளிப்புச் சேவைகளை வழங்குதல் ; அத்துடன்

(ஔ) மேலே குறித்துரைக்கப்பட்ட சேவைகள் தவிர, வானூர்தியொன்றுக்கு வேறேதேனும் சேவையை வழங்குதல்,

என்று பொருளாகும்.

## அத்தியாயம் III

### குடியியல் வான்செலவை ஒழுங்குபடுத்துதல்

*வெளிநாட்டு இராணுவ மற்றும் அரச வானூர்திகளின் பிரவேசம்.*

**31.** (1) வெளிநாட்டு இராணுவ அல்லது அரச வானூர்தியெதுவும், அதிகாரசபையின் விசேட அனுமதி அல்லது அதிகார வளிப்பின்றி இலங்கையின் ஆள்புலத்தினுட் பிரவேசித்தலாகாது.

(2) வெளிநாட்டுக் குடியியல் வானூர்தியெதுவும், பணிப்பாளர் தலைமையதிபதியின் விசேட அனுமதி அல்லது அதிகார வளிப்பின்றி இலங்கையின் ஆள்புலத்தினுட் பிரவேசித்தலாகாது.

(3) இப்பிரிவின்கீழ், விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் ஒவ்வோர் அதிகாரவளிப்பும் அல்லது அனுமதியும் பற்றி அமைச்சருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

*பாதுகாப்பு அமைச்சரின் கலந்தாலோசனையுடன் தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.*

**32.** குடியியல் வானூர்திகளின் காப்பும் பாதுகாப்பும் தொடர்பாக இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அமைச்சரானவர், பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அரச மற்றும் இராணுவ வானூர்திகளின் தொழிற்பாட்டை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

*அவசரகால நிலைமையின் விடயத்தில் விசேட தத்துவங்கள்.*

**33.** (1) சமவாயத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகி உள்ளபடியானதோ உடனிகழவுள்ளதானதோ ஆன ஆயுதப் போராட்டமொன்றின்போது அல்லது ஏதேனும் தேசிய அவசர நிலைமையின் விடயத்தில், அதுபற்றி அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்து, பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், பொதுவான அல்லது சிறப்பான கட்டளைமூலம், ஒன்றின் முழுமையாகவோ அல்லது அக்கட்டளையின் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவோ இலங்கையின் ஆள்புலத்தில் அல்லது

அதன்மேலாக அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் எல்லா அல்லது எவையேனும் விவரணத்திலான வானூர்திகளின் வான்கலமோட்டலை ஒழுங்குபடுத்தலாம் அல்லது தடைசெய்யலாம் ; அத்துடன் அதன் பின்னர் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் ஏதேனும் பின்னரான கட்டளைமூலம், ஆயுதந்தாங்கிய படையினருக்கு ஏதேனும் வானூர்தி நிலையத்தை, தரையிறங்கு நிலத்தை, வானூர்தியை, வானூர்தி உற்பத்திசெய்யும் அல்லது பேணும் வசதியை, அவற்றின்கண் அல்லது அவற்றின்மீது காணப்படும் இயந்திரங்கள், எந்திரத் தொகுதிகளுடனும் பொருட்களுடனும் அல்லது சாமான்களுடனும் சேர்த்து உடைமையிலெடுத்து பயன்படுத்துவதற்காகவும், ஏதேனும் வானூர்தி நிலையத்தை, பறத்தற் பயிற்சிப் பாடசாலையை அல்லது தரையிறங்கு நிலத்தைப் பயன்படுத்துவதனை, நிறுவுவதனை, கட்டுவதனை, பேணுவதனை அல்லது தாபிப்பதனை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அல்லது தடைசெய்வதற்காகவும் ஆன அத்தகைய நோக்கத்துக்காக மட்டும் அங்கீகரிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒன்றின் தொழிற்பாடு காரணமாக நேரடியான இழப்பை உறுகின்ற எவரேனுமாள் அந்நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய பணங்களிலிருந்து பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரிடமிருந்து நட்டஈடு பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அக்கறைகொண்டுள்ள திறத்தவர்கள் உடன்படத் தவறுகையில் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத்தொகை அத்தகைய திறத்தவர்களுக்கிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட வேண்டிய நடுத்தீர்ப்பாளரொருவரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இலங்கையின் ஆள்புலத்தினுள் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினுள் பறப்பதனைத் தடை செய்கின்ற, இப்பிரிவின் கீழான பொதுவான கட்டளையொன்றின் தொழிற்பாடு காரணமாக நட்டஈடெதுவும் செலுத்தப்படற்பாலதாகாது.

**34.** எந்த ஆளின் வான்செலவு ஆளணியினரொருவரென்ற தன்மையில் அவரிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட கடமை நிறைவேற்றும் அரசிலுள்ள குடியியல் வானூர்தித் தொழிற்பாடுகளின் காப்பின்மீது தாக்கமொன்றைக் கொண்டுள்ளதோ அந்த ஆளெவரும், எந்த உளவியலூக்கம் தரும் பதார்த்தம் காரணமாக மனிதச் செயற்பாடு பாதிக்கப்படுமோ அந்த ஏதேனும் உளவியலூக்கம் தரும் பதார்த்தத்துக்கு ஆட்பட்டிருக்கையில் அத்தகைய கடமையைப் புரிதலாகாது அல்லது அவரது கடமைகளின் காப்பான செயற்பாட்டை ஆபத்துக்குள்ளாகக்கூடிய வேறேதேனும் பதார்த்தத்தை பயன்படுத்துதலாகாது.

*வான்செலவு ஆளணியினர் மீதான மட்டுப்பாடுகள்.*

**35.** பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், ஏதேனும் வானூர்தி பறத்தகு ஆனது, அது தேவையான ஆவணப்படுத்துதல்களை கொண்டுள்ளது மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு அல்லது அதன்கீழ் வழங்கப்படும் எவையேனும் தொழிற்படுத்தும் நியமங்களுக்கு இணங்கத் தொழிற்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, அத்தகைய வானூர்தி இலங்கையில் இருக்கும்போது அதனை மட்டுப்பாடின்றி அணுகக் கூடியவராதல் வேண்டும்.

*வானூர்தியொன்றைப் பரிசோதித்தல்.*

**36.** பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள் —

*பணிப்பாளர் தலைமையதிபதி ஒரு வானூர்தி பறப்பைத் தடுத்தல்.*

(அ) வானூர்தியானது பறத்தகு அற்றது ;

(ஆ) பறப்பைத் தொழிற்படுத்துவதற்கு இயக்கு தொகுதியினர் தகைமையற்றுள்ளார் அல்லது உடல்ரீதியாக அல்லது உளரீதியாக இயன்றோரல்லர் ;

(இ) தொழிற்படுத்துகை ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு கண்கூடான அபாயத்தை விளைவிக்கும் ; அல்லது

(ஈ) வானூர்தியானது அங்கீகரிக்கப்பட்ட அனுப்பி வைத்தல் நடவடிக்கைமுறையைக் கொண்டிருக்க வில்லை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அனுப்பிவைத் தல் நடவடிக்கைமுறைகளுக்கிணங்க அனுப்பிவைக்கப் படவில்லை,

என நம்புவதற்கு அவருக்கு போதிய காரணங்கள் உள்ள நிலைமைகளில், வானூர்தியைத் தொழிற்படுத்தாதிருக்குமாறு வானூர்தியின் தொழிற்படுத்துநரை அல்லது இயக்குதொகுதி யினரைப் பணிப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிலைமைகளில் வானூர்தியை அல்லது இயக்கு தொகுதியினரை தடுத்துவைப்பதற்கு அவசிய மானவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்த லும் வேண்டும்.

ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கு அச்சுறுத்தலை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**37.** (1) குறிப்பிட்ட ஏதேனும் வானூர்தியின் அல்லது அவ் வகுப்பைச் சேர்ந்த எல்லா வானூர்திகளினதும் தொழிற்பாடு, அல்லது குறிப்பிட்ட ஏதேனும் வானூர்தி ஆக்கக்கூறின் அல்லது அவ்வகுப்பைச் சேர்ந்த ஏதேனும் ஆக்கக்கூறின் அல்லது ஏதேனும் வானூர்தி நிலையத்தின் பயன்பாடு, அல்லது ஏதேனும் வான் வழிச் சேவையின் வழங்குகையானது எவரேனும் ஆளுக்கு அல்லது எவரேனுமாளின் ஆதனத்துக்கு ஆபத்து விளைவிக்கலாம் என்றும் அத்தகைய அச்சுறுத்தலை அல்லது ஆபத்தை தடுப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்றும் பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமான ஏதுக்களின்மீது நம்புமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தில் அல்லது சான்றிதழில் அடங்கியிருப்பது எவ்வாறிருப்பினும் —

(அ) அத்தகைய குறிப்பிட்ட வானூர்தியின் அல்லது அவ்வகுப்பைச் சேர்ந்த வானூர்திகளின் அல்லது அத்தகைய வானூர்தி நிலையத்தின் தொழிற்பாட்டை அல்லது அத்தகைய வான்வழிச் சேவையின் வழங்கு கையை இடைநிறுத்தலாம், தடைசெய்யலாம் அல்லது அவற்றின்மீது நிபந்தனைகளை விதிக்கலாம் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் குறிப்பிட்ட வானூர்தி ஆக்கக்கூறின் அல்லது அவ்வகுப்பைச் சேர்ந்த எவையேனும் ஆக்கக்கூறுகளின் பயன்பாட்டை இடைநிறுத்தலாம், தடைசெய்யலாம் அல்லது அதன்மீது நிபந்தனைகளை விதிக்கலாம் ; அல்லது

(இ) அவற்றின் தொழிற்பாட்டை அல்லது பயன்பாட்டைத் தடுப்பதற்கென குறிப்பிட்ட வானூர்தியைத் தடுத்துவைக்கலாம் அல்லது குறிப்பிட்ட வானூர்தி ஆக்கக்கூறைக் கைப்பற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் தடுத்துவைத்தல் அல்லது கைப்பற்றுதல், விடையத்திற்கேற்ப, வானூர்தியின் அல்லது ஆக்கக்கூறின் சொந்தக்காரருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு அல்லது சேவைவழங்குநருக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### வானூர்தியைப் பதிவுசெய்தலும் அடையாளமிடுதலும்

**38.** வானூர்தியொன்று – *வானூர்திகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய பறத்தலாகாது.*

(அ) இலங்கையில் ;

(ஆ) சமவாயத்துக்கான திறத்தவரொருவராகவுள்ள அரசொன்றில் ; அல்லது

(இ) எந்நாட்டுடன், வானூர்திகள் இலங்கையின் ஆள்புலத்தில் அல்லது அதன்மீதும் பறத்தற்கு ஏற்பாடுசெய்கின்ற இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்று வலுவிலிருக்கின்றதோ அந்த நாடொன்றில்,

அது பதிவுசெய்யப்பட்டாலொழிய, இலங்கையின் ஆள்புலத்தில் அல்லது அதன்மீது பறத்தலாகாது.

தேர்வாய்வு அல்லது பரீட்சைப் பறப்புகள்.

**39.** முப்பத்தெட்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவுசெய்யப்படாத வானூர்தியொன்று, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழ் இலங்கை ஆள்புலத்தில் அல்லது அதன்மீது பறக்கப்படலாம். ஏதேனும் தேர்வாய்வு அல்லது பரீட்சை நோக்கத்திற்காக அல்லது அது சம்பந்தமாக அல்லது வேறு எந்த நோக்கத்துக்காக வானூர்தியைப் பதிவுசெய்யாமல் பறக்க அனுமதிக்கலாமெனப் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்குத் தோன்றுகின்றதோ அந்த வேறேதேனும் நோக்கத்துக்காக அவர் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம் ; ஆயின், அத்தகைய ஏதேனும் விடயத்தில், வானூர்தியானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்திற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது வரையறைகளுக்கு இணங்கப் பறக்கப்படுதல் வேண்டும்.

வானூர்தியைப் பதிவு செய்தல்.

**40.** (1) வேறேதேனும் அரசின் வானூர்தி இடாப்பொன்றில் தற்போது பதியப்படாத ஏதேனும் வானூர்தி—

(அ) இலங்கைப் பிரசையொருவரினால் அல்லது பிரதான தொழிலிடத்தை இலங்கையில் கொண்டுள்ளதும், இலங்கைச் சட்டங்களின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதுமான கூட்டிணைப்புக் குழுவொன்றினால் அது சொந்தமாக வைத்திருக்கப்படுமிடத்து ;

(ஆ) அரச வானூர்தியொன்றின் விடயத்தில், வானூர்தியானது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுமிடத்து ;

(இ) குத்தகைக்கெடுக்கப்பட்ட வானூர்தியொன்றின் விடயத்தில், அதன் பிரதான தொழிலிடத்தை இலங்கையில் கொண்டுள்ளதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் நடப்பிலுள்ளதும் தோதானதுமான வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை உடையதுமான தொழிற்படுத்துநரொருவரினால் அது புறநீங்கலாகத் தொழிற்படுத்தப்படுமிடத்து ; அல்லது

(ஈ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட எவரேனு மாளினால் அது சொந்தமாக வைத்திருக்கப்படு மிடத்து,

இலங்கையில் பதிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையதாதல் வேண் டும்.

(2) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தி ஒன்றின் சொத்தாண்மையானது அதன் பதிவுக்குப் பின்னர் மாற்றப்படு மிடத்து, அத்தகைய மாற்றம் பற்றிப் பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு உடனடியாக அறிவித்தலும், பணிப்பாளர் தலைமை யதிபதியிடம் பதிவுச்சான்றிதழை ஒப்படைத்தலும் 41 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

பதிவுச் சான்றித ழொன்றுக்கான விண்ணப்பமும் அதன் வழங்குகையும்.

**41.** (1) நாற்பதாம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தகவுடைய வானூர்தியொன்றின் சொந்தக்காரர் அல்லது தொழிற் படுத்துநர் அத்தகைய வானூர்தியை இலங்கையில் பதிவுசெய்வ தற்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவலின்மீது, அந்நோக்கத் துக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தேவைப்பாடுகளுடனும் வானூர்தி இணங்கியொழுகுகின்றதென அவர் திருப்திப்படுமிடத்து, வானூர்தியைப் பதிவுசெய்யலாம்.

(2) வானூர்தியொன்று இலங்கையில் பதிவுசெய்யப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது அத்தகைய வானூர்தி தொடர்பில் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அத்த கைய வானூர்திக்கான தேசியத்தையும் அதற்கென்றேயான பதிவடையாளமொன்றையும் குறித்தளித்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழொன்று ஓராண்டுக் காலப்பகுதிக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும் ; ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, தனது தற்றுணிபில் ஓராண்டுக்குக் கூடுதலான காலப்பகுதிக்குச் செல்லுபடியான சான்றிதழொன்றை வழங்க லாம்.

(4) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, இடைக்கால வழிமுறையாக, ஏதேனும் வானூர்தியை —

(அ) பதிவு நோக்கத்துக்காக இலங்கையினுள் கொண்டுவர விருப்பின் அல்லது ;

(ஆ) தேர்வாய்வு அல்லது பரீட்சை நோக்கங்களுக்காக ; அல்லது

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு ஏதேனும் நோக் கத்துக்கும் அதற்குப் பயன்படுத்துவதற்காகவும் ஏதே னும் வானூர்தியை இலங்கைக்குக் கொண்டுவர விருப்பின், அவ்வானூர்தி தொடர்பில் இடையேற் பாடான பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம்.

இலங்கையின் குடியியல் வானூர்தி இடாப்பு.

**42.** (1) "இலங்கையின் குடியியல் வானூர்தி இடாப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான பதிவேடொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டுமென்பதுடன், அதில், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லா வானூர்திகள் தொடர்பான விபரங்களும் விதித்துரைக் கப்படக்கூடியவாறான வேறேதேனும் தகவலும் பதியப்படுதலும் வேண்டும்.

(2) இலங்கையின் குடியியல் வானூர்தி இடாப்பு, விதித் துரைக்கப்பட்ட கட்டணமொன்றை அதிகாரசபைக்குக் கொடுப் பனவு செய்வதன்மீது, பொதுமக்களினால் பார்வையிடப்படுவ தற்குக் கிடைக்கும்படியாக்கப்படுதல் வேண்டும்.

(3) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்தி குறித்து இலங்கையின் குடியியல் வானூர்தி இடாப்பில் அடங்கியுள்ள தகவல், அத்தகைய வானூர்தியின் சொத்தாண்மைபற்றி முதற் றோற்றச் சான்றாதல் வேண்டுமென்பதுடன், உண்மையான பொழிப்பு எனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்படும் அத்தகைய இடாப்பிலிருந் தான பொழிப்பொன்று அதன்கண் கூறப்பட்ட உள்ளீடுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாக அதன்மீது செயலாற்றப்படுதலும் வேண்டும்.

*பதிவுச் சான்றிதழை இல்லா தாக்குதல்.*

**43.** (1) நாற்பத்தியோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ், பின்வரும் ஏதுக்களுள் ஒன்றன்மீதோ அல்லது பலவற்றின்மீதோ பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லா தாக்கப்படலாம் :—

(அ) வானூர்தியொன்று பதிவுசெய்யப்பட்ட பின்னர் அதன் சொத்தாண்மையிலான மாற்றம்பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கத் தவறுதல் ;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட வானூர்தியின் அழிவு அல்லது அத்தகைய வானூர்தியின் கட்டுமானத்தண்டுக்கு ஏதேனும் அழிவு ஏற்படுத்தப்படுதல் ; அல்லது

(இ) பதிவானது மோசடியானமுறையில் அல்லது பொய்யான அல்லது பிழையான தகவலைச் சமர்ப்பித்ததன் மூலம் பெறப்பட்டதென நம்புவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குப் போதிய சான்று இருத்தல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஏதுவின் மீது பதிவொன்று இல்லாதாக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய எல்லாத் தகவலையும் இலங்கையின் குடியியல் வானூர்தி இடாப்பில் பதியப்படச் செய்தல் வேண்டுமென்பதுடன், அவ்வானூர்தி தொடர்பான பதிவுச்சான்றிதழை அப்போதைக்கு வைத்திருப்பவர், அத்தகைய சான்றிதழைப் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் உடனடியாக ஒப்படைக்குமாறு தேவைப்படுத்தப்படுதலும்வேண்டும்.

*பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தல்.*

**44.** பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவரொருவர், அத்தகைய சான்றிதழ் காலாவதியாவதற்கு ஒரு மாதத்துக்குக் குறைவுறாது முன்னராக விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய படிவத்தில் சான்றிதழின் புதுப்பித்தலொன்றுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்படும் புதுப்பித்தற் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மீது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக மேலும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு அல்லது அத்தகைய குறைவான காலப்பகுதிக்குச் சான்றிதழைப் புதுப்பிக்கலாம்.

*தேசியத்தையும் பதிவடை யாளங்களையும் வெளிக்காட்டி வைத்தல்.*

**45.** பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் மறுவாறு அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு வானூர்தியும் விதித்துரைக்கப்பட்ட முறையில், அதன் தேசியத்தையும் பதிவடையாளத்தையும் கொண்டு செல்லுதலும் வெளிக்காட்டி வைத்திருத்தலும் வேண்டும்.

*அரச அடையாளங் களையும் குடியியல் வான் சிறப்புச் சின்னங் களையும் பயன்படுத்து தல்.*

**46.** (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தியொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்டவை தவிர அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப் பட்டவாறு அல்லது அனுமதிக்கப்பட்டவாறு தவிர, அதன் வெளிப்புற மேற்பரப்பின் ஏதேனும் பாகத்தில் ஏதேனும் விளம்பரத்தை அல்லது ஏதேனும் உருவை அல்லது எவையேனும் எழுத்துக்களைக் கொண்டிருத்தலாகாது.

(2) வானூர்தித் தொழிற்படுத்துநரின் பெயரும் சின்னமும் இலங்கையின் தேசியக் கொடியும், அவை பிரித்தறியக் கூடியன வாகவிருக்கும் அத்தகைய முறையிலும், விடயத்துக்கேற்ப, ஏதேனும் இராணுவ வானூர்தியினால் அல்லது அரச வானூர்தியினால் பயன்படுத்தப்படும் அடையாளங்களுடன் மாறுபட்டு மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம்கொண்டிராத அத்தகைய முறையிலும் (அதன் அமைவிடம், அளவு, வடிவம், அத்துடன் நிறம் என்பன வானூர்தியின் தேசியத்தையும் பதிவடையாளங்களையும் இலகுவாகக் கண்டறிவதோடு தலை யிடாதிருப்பதுடன், அவற்றுடனான மாறுபாட்டு மயக்கத்தை ஏற்படுத்த முடியாதிருப்பின்) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்தியில் வெளிக்காட்டி வைக்கப்படலாம்.

(3) இலங்கையின் குடியியல் வான் சிறப்புச் சின்னம், பணிப் பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அங்கீகாரத்துடன் தவிரவும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் அன்றி ஏதேனும் வானூர்தியில் பறக்கப்படுதலோ, பூச்சிடப்படுதலோ அல்லது வேறு வகையில் வெளிக்காட்டி வைக்கப்படுதலோ ஆகாது.

(4) வானூர்தியொன்று, பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, பதிவுச் சான்றிதழில் சுட்டிக் காட்டப்பட்டவாறு அதன் பிரதான இடம் அல்லது நிலையம் தவிர்ந்த ஏதேனுமிடத்தில் தரிக்கப்படுதலோ,கொண்டுசெல்லப் படுதலோ அல்லது இட்டுவைக்கப்படுதலோ ஆகாது.

## அத்தியாயம் V

### வானூர்திகளின் பறதகு நிலையும் சாதனங்களும்

அனுமதிப் பத்திரமின்றி வானூர்திகளை உற்பத்தி செய்தல், பொருத்துதல் முதலிய வற்றின் மீதான தடை.

**47.** (1) ஆளெவரும் அல்லது ஆட்கள் குழுவெதுவும், பணிப் பாளர் தலைமையதிபதிக்கு, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும், விதித்துரைக்கப்பட்ட கட்ட ணக் கொடுப்பனவின்மீதும், அத்தகைய எவரேனுமாளினால் அல்லது ஆட்கள் குழுவினால் பெறப்படக்கூடிய பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன் றின் மீதுதவிர, ஏதேனும் வானூர்தியை அல்லது வானூர்தி யொன்றின் ஏதேனும் பாகத்தை இறக்குமதி செய்தலோ, வடிவ மைத்தலோ, உற்பத்திசெய்தலோ, பொருத்துதலோ, திரிபுபடுத்து தலோ, பழுதுபார்த்தலோ, முற்றுமுழுதாகத் திருத்துதலோ அல்லது பேணுதலோ அல்லது இறக்குமதி செய்வதற்கு, வடிவமைப்பதற்கு உற்பத்தி செய்வதற்கு, பொருத்துவதற்கு, திரிபுபடுத்துவதற்கு, பழுதுபார்ப்பதற்கு, முற்றுமுழுதாகத் திருத்துவதற்கு அல்லது பேணுவதற்கு பிரயத்தனம் செய்தலோ ஆகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, விதம், வடிவமைப்பு, உற்பத்தி, பொருத்துகை, திரிபுபடுத்துகை, பழுதுபார்ப்பு, முற்று முழுதான திருத்தம் அத்துடன் பேணுகை என்பவற்றுக்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சாதனங்கள், வசதிகள், பொருட்களின், தேவைப்பாடுகள், போதுமாந்தன்மை, பொருத்த மாந்தன்மை என்பன பற்றியும், வேலையில் ஈடுபட்டுள்ளவர் களின் அல்லது அதன்கண் அறிவுறுத்தல்கள் விடுப்போரின் திறமை பற்றியும் திருப்திப்படுவதன்மேல் ஏதேனும் வானூர்தியை, வானூர்தி எஞ்சின்களை உந்துகாற்றாடிகளை, உபகரணங்களை அல்லது ஆக்கக்கூறுகளை இறக்குமதி செய்வதற்கு, வடிவமைப் பதற்கு, உற்பத்திசெய்தற்கு பொருத்துவதற்கு, திரிபுபடுத்துவதற்கு, பழுதுபார்ப்பதற்கு, முற்றுமுழுதாகத் திருத்துவதற்கு அத்துடன் அவற்றின் பேணுகையைக் கவனிப்பதற்கு ஒரு விண்ணப்பகார ருக்கு ஓர் அனுதிப்பத்திரம் வழங்குதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஓர் அனுமதிப் பத்திரம், பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரம், விடயத்துக்கேற்ப, எந்த

ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் குழு, அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் அவரது அல்லது அதன் கடமையாதலும் வேண்டும்.

47 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுவதன் விளைவு.

**48.** (1) நாற்பத்தியேழாம் பிரிவின் தேவைப்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழான தவறொன்று புரியப்படுகின்றதென நம்புவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு நியாயமான காரணமுள்ளவிடத்து, அவர் அல்லது அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் வேறெவரேனும் அலுவலர், தவறு எவ் வளவுகளில் புரியப்பட்டதென நம்பப்படுகின்றதோ அவ் வளவுகளிலும் பிரவேசித்து, அத்தகைய தவறைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்படும் எல்லாக் கருவிகளுடனும் சாதனங்களுடனும் சேர்த்து, விடயத்துக்கேற்ப, ஏதேனும் வானூர்தியை, ஏதேனும் வானூர்தியின் பாகத்தை அல்லது ஏதேனும் வடிவமைப்பைக் கைப்பற்றலாம் அத்துடன் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட எதுவும் பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றமானது, நீதிமன்றம் பணிக்கக்கூடியாவாறான அத்தகைய முறையில் அவற்றை இழப்பிப்பதற்காக அல்லது அழிப்பதற்காகத் தோதான கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(4) குற்றஞ்சாட்டப்பட்டவர் தவறிலிருந்து விடுக்கப்படும் பட்சத்தில், நீதிமன்றமானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட எதனதும் உடனடியான விடுவிப்புக்குக் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, அவ்வாறு கைப்பற்றப்பட்ட எதுவும் அவரது கட்டுக்காப்பில் இருக்கையில் சேதம் விளைவிக்கப்பட்டதற்காக, அத்தகைய சேதம் அவரது அசட்டை காரணமாக ஏற்பட்டதென எண்பிக்கப்பட்டாலொழிய பொறுப்பிலிருந்து விலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரும், இப்பிரிவின் நோக்கத்துக்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் “சமாதான அலுவலர்களாக”க் கருதப்படுதல் வேண்டும்.

*பறத்தகு நிலையிருத்தல் பற்றிய சான்றிதழின்றி இலங்கைக்கு மேலாகப் பறத்தலைத் தடை செய்தல்.*

**49.** வானூர்தியெதுவும், இலங்கையின் ஆள்புலத்தில் அல்லது ஆள்புலத்துக்கு மேலாக, அத்தகைய வானூர்தி பதிவுசெய்யப்பட்டுள்ள நாட்டின் தோதான அதிகாரியினால் உரியமுறையில் வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழொன்று, அல்லது ஏற்புடையதாகவுள்ளவிடத்து, தொழிற்படுத்துநரின் அரசிலுள்ள தோதான அதிகாரியினால் வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட சான்றிதழொன்று அதுதொடர்பில் வலுவில் இருந்தாலொழியவும் அத்துடன் அத்தகைய சான்றிதழ் எந்த நிபந்தனைகளுக்கமைய (எவையேனுமிருப்பின்) வழங்கப்பட்டதோ அல்லது செல்லுபடியாக்கப்பட்டதோ அந்த நிபந்தனைகள் உரியமுறையில் இணங்கியொழுகப்பட்டு, அத்தகைய சான்றிதழ் எத்தேவைப்பாடுகளின்கீழ் வழங்கப்பட்டதோ அல்லது செல்லுபடியாக்கப்பட்டதோ அத்தேவைப்பாடுகள், சமவாயத்தின்கீழ் காலத்துக்காலம் தாபிக்கப்படக்கூடிய ஆகக்குறைந்த நியமங்களுக்குச் சமமாக அல்லது மேலாக இருந்தாலொழியவும், பறத்தலோ அல்லது பறப்பதற்குப் பிரயத்தனஞ் செய்தலோ ஆகாது.

*பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழை வழங்குதல்.*

**50.** (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்தி தொடர்பில் பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழ், விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தேர்வாய்வு அல்லது பரீட்சை நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழொன்றின்றி இலங்கையின் ஆள்புலத்தினுள் வானூர்தியொன்று பறப்பதனை அனுமதிக்கலாம், ஆயின், அத்தகைய சந்தர்ப்பத்தில், வானூர்தியானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது வரையறைகளுக்கு இணங்கவன்றி வேறுவகையாகப் பறத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய சான்றிதழிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டுமென் பதுடன், அது, எச்சந்தர்ப்பத்திலும், அத்தகைய சான்றிதழ் வழங் கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சுதலுமாகாது. அதற் கென பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ்செய்யப் படுவதன் மீது, வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் அதன் செல்லுபடிக் காலப்பகுதியின் முடிவில் புதுப்பிக்கப்படலாம்.

(4) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் வானூர்தியில் பறப்பதனை காப்பற்றதாக்கும் ஏதேனும் குறைபாடு காணப்படு மிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, குறைபாடு சீர்படுத்தப் படும் அத்தகைய காலம்வரை பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழை இடைநிறுத்தி வைக்கலாம், வானூர்தியானது நிரந்தரமாகப் பறத்தகு நிலையில்லை எனக் கருதப்படுமிடத்து பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழை பணிப்பாளர் தலைமையதிபதி இல்லாதாக்குதல் வேண்டும். சான்றிதழானது இல்லாதாக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியிடம் உடனடியாக அச்சான்றிதழைக் கையளித்தல் அத்தகைய சான்றிதழை வைத்திருப்பவரின் கடமை யாதல் வேண்டும்.

பறக்கு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழ் களைச் செல்லுபடி யாக்குதல்.

**51.** வானூர்தியொன்றின் சொந்தக்காரரினால் அல்லது தொழிற்படுத்துநரினால் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப் பத்தின்மீது வேறேதேனும் நாட்டினால் வழங்கப்பட்ட பறக்கு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழொன்றை, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, மூன்று மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்குச் செல்லுபடி யாக்குவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி தத்துவமுடைய வராதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### தேடுகை, மீட்பு தொழிற்பாடுகளும், விபத்துக்களும் சம்பவங்க ளும் பற்றிய நுண்ணாய்வும்

தேடுகை, மீட்புத் தொழிற் பாடுகள்.

**52.** இடர்பாட்டுக்குள்ளான வானூர்தியொன்றுக்கு அளிக்கப்பட வேண்டிய அவசியமான உதவி பற்றிய வழிமுறைகளை வழங்குதலுக்கும் ஒருங்கிணைத்தலுக்குமான நடவடிக்கைமுறை,

அதற்கென ஆக்கப்படும் விதிகளின் மூலம் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாதல் வேண்டும். அது தொடர்பாக ஏற்புடைத்தற்பாலனவான நிவிவழக்கங்களை அது அடிப்படை யாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**53.** (1) அமைச்சர் அல்லது அமைச்சரினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், எந்நேரத்திலேனும், ஏதேனும் வான்வழித் தேடுகையை அல்லது மீட்புத் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதற்கென, விடயத்துக்கேற்ப, அதன் சொந்தக்காரரிடமிருந்து அல்லது தொழிற்படுத்துநரிடமிருந்து ஏதேனும் குடியியல் வானூர்தியைத் தேவைக்கெடுக்கலாம் என்பதுடன், அத்தகைய வான்வழித்தேடுகை அல்லது மீட்புத் தொழிற்பாடுகளில் உதவி புரிவதற்கு எந்த ஆளின் சேவைகள் அத்தியாவசியமானதோ அந்த எவரேனும் ஆளின் சேவைகளையும் கோரலாம். வான்வழித் தேடுகை, மீட்புத் தொழிற்பாடுகளுக்காக வானூர்திகளைத் தேவைக்கெடுத்தலும், பறப்பு இயக்கு தொகுதியினரைக் கோருதலும்.

(2) எவையேனும் வானூர்திகளின் தேவைக்கெடுத்தல் தொடர்பிலான நட்டஈடும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த ஆட்களின் சேவைகள் கோரப்பட்டனவோ அந்த ஆட்களுக்கான கொடுப்பனவும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியாவாறன அத்தகைய வீதத்தில் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

(3) ஏதேனும் வானூர்தித் தேடுகை அத்துடன் எவையேனும் மீட்புத் தொழிற்பாடுகள், எவரேனுமாளின் அசட்டையான அல்லது வேறு சட்டவிரோதமான செயலினால் அல்லது செய்யாமையினால் விளைவிக்கப்படும் ஏதேனும் சம்பவம் தொடர்பாக அரசினால் பொறுப்பேற்கப்படுமிடத்து, சம்பந்தப்பட்ட வானூர்தி வெளிநாட்டு வானூர்தியொன்றாகவுள்ளது, அத்துடன் சம்பந்தப்பட்ட சேவைகள் இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லாமல் வேறெங்கேனும் அளிக்கப்பட்டன என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய தொழிற்பாடுகள் சம்பந்தமாக அரசினால் உறப்படும் செலவுகள் முழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை அமைச்சர் அத்தகைய ஆளிடமிருந்து அறவிடலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு அல்லது அறிவுறுத்தலுக்குச் சட்ட முறையான காரணமின்றி இணங்கியொழுக மறுக்கின்ற அல்லது தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*வானூர்தி விபத்து அல்லது சம்பவம் பற்றிய நுண்ணாய்வுகள்.*

**54.** (1) அதிகாரசபையானது, விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க, ஏதேனும் விபத்து அல்லது சம்பவம் தொடர்பான நிகழ்வுகளையும், நிலைமைகளையும் சூழ்நிலைகளையும், அதற்கான உத்தேசக் காரணியையும் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய விபத்து அல்லது சம்பவம் இலங்கையின் ஆள்புலத்தினுள் ஏற்பட்டிருக்குமிடத்து அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் வானூர்தி தொடர்பிலாதனதாக இருக்குமிடத்து, வான்கலமோட்டலி லிருந்து அல்லது அதன் போது எழுகின்ற அவ்விபத்து அல்லது அச்சம்பவம் பற்றி நுண்ணாய்வொன்றைத் தொடங்குதல் வேண்டும்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஒழுங்கு விதிகளை விதித்துரைப்பதில், விடயத்துக்கேற்ப, வானூர்தி விபத்துக்கள் அல்லது சம்பவங்கள் பற்றிய நுண்ணாய்வுகள் தொடர்பாக ஏற்புடையப்படற்பாலனவான நிவி வழக்கங்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

*வானூர்தி விபத்து நுண்ணாய்வுச் சபையை நியமித்தல்.*

**55.** (1) ஐம்பத்திநான்காம் பிரிவின்கீழான நுண்ணாய்வொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, (இதனகத்துப்பின்னர் இவ்வத்தியாயத்தில் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விடயத்துக்கேற்ப, ஒவ்வொரு வானூர்தி விபத்து அல்லது சம்பவம் தொடர்பாக வானூர்தி விபத்து நுண்ணாய்வுச் சபையொன்றை அதிகாரசபையானது நியமித்தல் வேண்டும். அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களை அது கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் ஒருவர், அதன் பிரதான நுண்ணாய்வாளராகவும் செயலாற்றுவார்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சபையொன்றை நியமிக்கும்போது, நுண்ணாய்வொன்றை நடத்துவதில் சபையுறுப்பினர்களினால் இணங்கியொழுகப்படவேண்டிய நியதி நிபந்தனைகளை விதித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் சபையின் பணிகள், அது எந்த விபத்தை அல்லது சம்பவத்தை நுண்ணாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டதோ அத்தகைய விபத்தின் மீதான அல்லது சம்பவத்தின் மீதான இறுதி அறிக்கை அதிகாரசபைக்குச் சமர்பிக் கப்பட்டதன் மேல் இல்லாதொழிதல் வேண்டும்.

(4) அத்தகைய விபத்து அல்லது சம்பவம் எந்த அரசில் ஏற் பட்டதோ அந்த அரசினால், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்தி தொடர்பில் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் நுண்ணாய் வில் பிரதிநிதித்துவம் வகிக்கப்படுவதற்கு அதிகாரசபையானது ஒழுங்குசெய்யலாம்.

இரகசியம் பேணு வதற்கான வெளிப் படுத்துகை.

**56.** (1) சபையுறுப்பினர் ஒவ்வொருவரும், தமது கடமைகளை ஏற்கமுன்னர், நுண்ணாய்வில் வெளிவிடப்பட்ட எல்லாத் தகவல் கள் தொடர்பிலும் அவர் அல்லது அவள் கண்டிப்பாக இரகசியத் தைக் கடைப்பிடிப்பாரென உறுதிகூறி வெளிப்படுத்துகையொன் றைக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகையினால் பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர அத்தகைய ஏதேனும் தகவலை வெளிவிட மாட்டாரென அல்லது வெளிவிட மாட்டாளென உறுதிகூறுதலும் வேண்டும் :—

(அ) சட்டநீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது ;

(ஆ) சபையுறுப்பினரொருவராகக் கடமைகளைப்புரிகையில் ; அல்லது

(இ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல் லது விதிக்கு இணங்கியொழுகுவதற்காக.

(2) சபையினாற் கையாளப்படவேண்டிய எல்லா நுண்ணாய்வு களும் அந்தரங்கமாக நடத்தப்படல் வேண்டும்.

**57.** (1) சபையானது, ஒரு விபத்து அல்லது சம்பவம் பற்றிய நுண்ணாய்வொன்றின்போது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

*சாட்சிக்காரர்களைக் கட்டளை விட்டழைத்து விசாரணை செய்தலும் காண்பி பொருட்களைப் பரிசோதனை செய்தலும்.*

(அ) அது அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய எல்லா ஆட்களையும் அதன் பிரதான நுண்ணாய்வாளரின் கைப்படக் கட்டளைவிட்டழைத்தலும், அதன் முன்னர் அழைத்தலும், விசாரணை செய்தலும் ;

(ஆ) சபையானது இயைபானதெனக் கருதக்கூடிய ஏதேனும் கேள்விக்குப் பதிலளிக்கும்படி அல்லது ஏதேனும் தகவலை கொடுத்துதவும்படி அல்லது எவையேனும் புத்தகங்களை, பத்திரங்களை, ஆவணங்களை அல்லது பொருட்களைக் காண்பிக்கும்படி கட்டளைவிட்டழைவிக்கப்பட்ட எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலும், நுண்ணாய்வுகள் பூர்த்திசெய்யப்படும்வரை அத்தகைய எவையேனும் புத்தகங்களை, பத்திரங்களை, ஆவணங்களை அத்துடன் பொருட்களை வைத்திருத்தலும் ;

(இ) அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய எல்லா ஆட்களிடமிருந்தும் கூற்றுக்களை எடுத்தலும் அவரினால் அளிக்கப்பட்ட கூற்றின் உண்மை பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்து கையொப்பமிடும்படி அத்தகைய எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துதலும் ;

(ஈ) விபத்தில் சம்பந்தப்பட்ட ஏதேனும் வானூர்தியையும் விபத்து ஏற்பட்ட இடத்தையும் பரிசோதனை செய்வதற்கான அணுகுகையைக் கொண்டிருத்தலும், அந் நோக்கத்துக்காக, அத்தகைய ஏதேனும் வானூர்தியை அல்லது அதன் சாதனத்தின் ஏதேனும் பாகத்தை, பரிசோதனை முடிவுறாதிருக்கும்வரை, மாற்றாமல் பேணிக்காக்கும்படி தேவைப்படுத்துதலும் ;

(உ) வானூர்தியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது அதன்கண் அடங்கியுள்ள எதனையும் பரிசோதனை செய்தலும், அகற்றுதலும், பரீட்சையிடுதலும்

அதனைப் பேணிக்காப்பதற்கான வழிமுறைகளை எடுத்தலும், அத்துடன் அதனை வேறுவகையில் கையாளுதலும் ;

(ஊ) நுண்ணாய்வின் நோக்கங்களுக்காகத் தேவையெனத் தோன்றுமிடத்து ஏதேனும் இடத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் பிரவேசித்தலும் அதனைச் சோதனையிடுதலும் ; அத்துடன்

(எ) சான்றைப் பேணிக்காப்பதற்கான எல்லா வழிமுறைகளையும் எடுத்தலும்.

(2) ஐம்பத்திநான்காம் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் தொடங்கப்பட்ட நுண்ணாய்வொன்று, வேறேதேனும் சட்டத்தின் கீழ் ஏதேனும் பொலிசு, நீதிநிருவாக அல்லது வேறு நுண்ணாய்வுக்கு இடமளிக்கும் ஏதேனும் தத்துவத்தை மதிப்புக் குறைப்பதாக எவ்வகையிலும் கருதப்படுலாகாது ; ஆயின், சபையானது, இயைபான சான்றைப் பரிசோதனை செய்வதில் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஒரு விபத்திற்கு அல்லது சம்பவத்திற்கு உட்பட்ட வானூர்தியொன்றின் ஏதேனும் பாகத்தை அல்லது அதன் எவையேனும் ஆவணங்களை அல்லது வேறு பொருட்களை அதிகாரமளிக்கப்படாத எவரேனுமாள் அகற்றுதல் அல்லது தனது கட்டுக்காப்பில் வைத்திருத்தல், ஏனைய சான்றுடன் தலையிடுதல் அல்லது அவ்வானூர்திப் பயணிகளின் அல்லது இயக்கு தொகுதியினரின் எவையேனும் உடைமைப் பொருட்களை அல்லது சரக்கை அகற்றுதல் அல்லது அவரது அல்லது அவளது கட்டுக்காப்பில் வைத்திருத்தல் தவறொன்றாதல் வேண்டும்.

(4) சமவாயத்துக்கான திறத்தவரொருவராகவுள்ள அரசொன்றில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தியொன்றுக்கு இலங்கையின் ஆள்புலத்தினுள் ஏதேனும் விபத்து ஏற்பட்டு எவரேனுமாள் இறக்குமிடத்து அல்லது ஏதேனும் பாரதூரமான ஊறு அவரினால் உறப்படுமிடத்து அல்லது வானூர்தியானது கணிசமான அளவு சேதத்தை உறுமிடத்து, அதிகாரசபையானது, பதிவக அரசின் அல்லது ஏற்புடையதாகுமிடத்து, தொழிற்படுத்துநரினது

அரசின், வானூர்தியை உற்பத்தி செய்தவரினது அரசின், விபத்துக்குட்பட்டோரின் தேசியங்களினது அரசுகளின், அத்துடன் தோதானதென அதிகாரசபையினால் கருதப்படும் வேறேதேனும் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதியைப் பார்வையாளராகப் பங்குபற்றுமாறு அதிகாரமளித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அதிகாரசபையானது, அமைச்சரின் கலந்தாலோசனையுடன், நுண்ணாய்வின் உள்ளபடியான செயலாற்றுகையைப் பதிவக அரசின் அல்லது ஏற்புடையதாயின், தொழிற்படுத்துநரினது அரசின் அல்லது அதிகாரசபையினால் தோதானதெனக் கருதப்படுகின்ற வேறேதேனும் அரசின் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட நுண்ணாய்வாளருக்கு அல்லது நுண்ணாய்வாளர்களுக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய பணியை அவர் இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அத்துடன் அதன்கீழ் செய்யப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு இணங்கவும் அதிகாரசபையின் மேற்பார்வையின்கீழும் புரிதலும் வேண்டும். அத்தகைய கையளிப்புச் செய்யப்படும்பட்சத்தில், அதிகாரசபையானது, அதற்கு இயன்றதாகவுள்ள அளவுக்கு, அத்தகைய நுண்ணாய்வுகளுக்கு வசதியளித்தல் வேண்டும்.

(6) நுண்ணாய்வொன்றில் சாட்சிக்காரரொருவராகக் கட்டளை விட்டழைக்கப்பட்ட ஆளெவரும் —

(அ) அழைப்புக்கட்டளையொன்றுக்குக் கீழ்ப்படியாதிருத்தலாகாது ;

(ஆ) சாட்சிக்காரராகச் சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதியுரையளிப்பதற்கு மறுத்தலாகாது ;

(இ) அவர் அல்லது அவள் பதிலளிப்பதற்குச் சட்டமுறையாகத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கேள்விக்குப் பதிலளிக்கத் தவறுதலாகாது ; அல்லது

(ஈ) அவர் அல்லது அவள் காண்பிப்பதற்குச் சட்டமுறையாகத் தேவைப்படுத்தப்படும் எவையேனும் ஆவணங்களை அல்லது வானூர்தியொன்றின் பாகத்தை அல்லது ஆக்கக்கூறைக் காண்பிக்க மறுத்தலாகாது அல்லது தவறுதலாகாது.

(7) இவ்வத்தியாயத்தின்கீழ் எவையேனும் தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிக்கையில், சபைக்கு அல்லது அதிகாரசபையின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற எவரேனு மாளுக்கு முட்டுக்கட்டையிடுதல் அல்லது தடங்கல் செய்தல் தவறொன்றாதல் வேண்டும்.

இலங்கைக்கு வெளியேயான விபத்துக்கள்.

**58.** (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்திக்கு இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே ஏதேனும் விபத்து அல்லது சம்பவம் ஏற்படுமிடத்தும் எவரேனுமாள் இறக்குமிடத்தும் அல்லது பாரதூரமான உடலூறை உறுமிடத்தும் அல்லது வானூர்தி கணிசமான அளவு சேதத்தை உறுமிடத்தும், அதிகார சபையானது, விபத்து எந்த நாட்டில் ஏற்படுகின்றதோ அந்த நாட்டினால் நடாத்தப்படக்கூடிய ஏதேனும் நுண்ணாய்வில் அல்லது விசாரணையில் பங்குபற்றுமாறு அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும் அல்லது அத்தகைய விபத்துடன் அல்லது சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம்பற்றி நுண்ணாய்வொன்றை நடத்துமாறு சபைக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்திக்கு இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே ஏதேனும் விபத்து ஏற்படு மிடத்தும், எவரேனுமாள் இறக்குமிடத்தும் அல்லது பாரதூர மான உடலூறை உறுமிடத்தும் அல்லது வானூர்தி கணிசமான அளவு சேதத்தை உறுமிடத்தும், பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே எந்த நாடு நுண்ணாய் வொன்றை அல்லது விசாரணையொன்றை நடாத்துகின்றதோ அந்த நாட்டுக்குத் தனதுடைமையில் உள்ள அத்தகைய நுண்ணாய்வை நடாத்துவதற்கு இயைபான எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதல் வேண்டும்.

சபையானது அறிக்கை யொன்றைத் தயாரித்தல்.

**59.** (1) நுண்ணாய்வொன்று முடிவுற்றதன்மேல், சபையானது, ஆயுளைப் பேணிக்காக்கும் அத்துடன் எதிர்காலத்தில் இதே போன்ற சம்பவங்களைத் தவிர்க்கும்நோக்குடன், செய்வதற்கு அது தகுதியென எண்ணுகின்ற எவையேனும் அவதானிப்புகளும் விதப்புரைகளும் உட்பட, விடயத்தின் சூழ்நிலைகளையும் விபத்துக் கான அல்லது சம்பவத்துக்கான உத்தேசக் காரணி அல்லது காரணிகள் பற்றிய முடிவையும் கூறுகின்ற அறிக்கையொன்றை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகையமுறையில் தயாரித்தல் வேண்டும். அறிக்கையானது அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையானது

அத்தகைய அறிக்கை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அது தகுதியானதென எண்ணுகின்றவாறான அத்தகையமுறையில் வெளியிடச்செய்யலாம்.

(2) ஏதேனும் வெளிநாட்டு வானூர்தி தொடர்பான நுண்ணாய்வொன்றின் விடயத்தில், அதிகாரசபையானது, ஆகக்குறைந்த தாமதத்துடன் அறிக்கையின் பிரதியொன்றையும், அத்துடன் சேர்த்து, அத்தகைய முடிவெடுப்புக்கள் எந்தச் சான்றையும் ஏனைய அத்தியாவசியமான தகவலையும் அடிப்படையாகக் கொண்டிருந்தனவோ அந்தச் சான்றும் அத்தியாவசியமான தகவலும் பற்றிய சுருக்கமொன்றையும் பதிவக அரசுக்கும், ஏற்புடையதாகுமிடத்து தொழிற்படுத்துநரின் அரசுக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும் ; ஆயின், விசாரணையில் பங்குபற்றுகின்ற அங்கீகாரம்பெற்ற அவதானிப்பாளரொருவரை அவ்வரசு உடையதாகவிருந்த அத்தகைய விடயங்களில் அந்த அறிக்கையானது அவ்வரசைப் பாதிக்கின்ற அல்லது பாதிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட கருமங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவிருக்கலாம்.

*அதிகாரசபையானது குறித்தசில பதிவேடுகளைக் கிடைக்கும்படியாக்காதிருத்தல்.*

**60.** அதிகாரசபையானது அல்லது சபையானது, விபத்து அல்லது சம்பவம் பற்றிய நுண்ணாய்வின் நோக்கம் தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்துக்காகப் பின்வரும் பதிவேடுகளை, அவற்றின் வெளிவிடுகையானது, அந்த நுண்ணாய்வின்மீது அல்லது வேறேதேனும் எதிர்கால நுண்ணாய்வின்மீது அத்தகைய நடவடிக்கை கொண்டிருக்கக்கூடிய பாதகமான உள்நாட்டு அத்துடன் சர்வதேசத் தாக்கத்தை விஞ்சி நிற்கின்றதென இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றம் தீர்மானித்தாலொழிய, கிடைக்கும்படியாக்குதலாகாது :—

(அ) சபையின் நுண்ணாய்வின்போது அதனால் எடுக்கப்பட்ட எல்லாக் கூற்றுக்களும் ;

(ஆ) விபத்திற்கு அல்லது சம்பவத்திற்கு உட்பட்டிருந்த ஆட்களிடையேயான எல்லாத் தொடர்புகளும் ;

(இ) விபத்திற்கு அல்லது சம்பவத்திற்கு உட்பட்ட ஆட்கள் தொடர்பான மருத்துவ அல்லது தனிப்பட்ட தகவல் ;

(ஈ) வானூர்திச் செலுத்திடக்குரற் பதிவுகளும், பறத்தல் தரவுப் பதிவுகளும், அத்துடன் அத்தகைய பதிவுகளிலிருந்தான மாற்றுப் பிரதிகளும் ; அத்துடன்

(உ) பறத்தற் பதிவுத் தகவலுட்பட, தகவலை நுனித்தாய்வதில் கூறப்பட்ட அபிப்பிராயங்கள்.

*சபையுறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் முதலியன.*

**61.** ஐம்பத்தைந்தாம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் சபையுறுப்பினர்கள், அத்தகைய உறுப்பினர்களாக அவர்கள் செயலாற்றும் வரை, தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட் படப் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தின் கீழான ஒவ்வொரு நுண்ணாய்வும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நோக்கத்துக்காகவும் "நீதிநிருவாக நடவடிக்கை" ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதி பரிகரிப்பு நடவடிக்கைகளை எடுத்தல்.*

**62.** பணிப்பாளர் தலைமையதிபதி, இடைக்கால அல்லது இறுதியான நுண்ணாய்வொன்றின் முடிவெடுப்புக்களின் அடிப்படையின்மீது, வான்செலவுக்காப்பு, கிரமத்தன்மை அல்லது திறமை என்பவற்றின் நலன்கருதி, அல்லது இதையொத்த சம்பவங்கள் அல்லது விபத்துக்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதனைத் தடுப்பதற்கு அவசியமென அவர் கருதுகின்ற உடனடியான பரிகரிப்பு நடவடிக்கைகளையும் சீர்படுத்தல் நடவடிக்கையையும் எடுத்தல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### வான்செலவு ஆளணியினரும் பயிற்சி நிறுவனங்களும்.

*ஆளணியினரால் உரிமங்கள் முதலியன பெறப்படுவதற்கான ஒழுங்கு விதிகளை ஆக்குதல்.*

**63.** (1) குடியியல் வான்செலவுச் செயற்பாடுகளின் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, சமவாயத்தின்கீழ் இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகி, அமைச்சர், ஒழுங்குவிதிகள்மூலம், விதித்துரைக்கப்படும் குடியியல் வான்செலவுச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதுடன் சம்பந்தப்பட்டுள்ள அல்லது தொடர்புபட்டுள்ள எல்லா ஆளணியினருக்கும் அல்லது நிறுவனங்களுக்கும் அளிக்கப்படவேண்டிய உரிமங்கள், வகைமதிப்பு, தகுதிச் சான்றிதழ்கள் அல்லது அனுமதிப்பத்திரங்கள் என்பனவற்றின் வழங்குகையை விதித்துரைத்தல் வேண்டும்.

(2) எந்தச் செயற்பாடுகளுக்கு உரிமம், வகைமதிப்பு, தகுதிச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்பட வேண்டுமோ அந்தச் செயற்பாடுகள், திருப்தி செய்யப்படவேண்டிய தகைமைகளும் வேறு தேவைப்பாடுகளும், விண்ணப்ப நடவடிக்கைமுறை, இணங்கியொழுகப்படவேண்டிய நியதிநிபந்தனைகள், செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள், அத்தகைய ஏதேனும் உரிமத்தை, வகைமதிப்பை, சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்கு அளிக்கப்படவேண்டிய சிறப்புரிமைகள், அத்தகைய உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தைத் திருத்துவதற்கும், இடைநிறுத்துவதற்கும், இல்லாதொழிப்பதற்குமான ஏதுக்கள், அத்துடன் அவற்றைப் புதுப்பித்தல் என்பவற்றை (1) ஆம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதிகள் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) ஓர் உரிமத்தில், வகைமதிப்பில், தகுதிச் சான்றிதழில் அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஏதேனும் குடியியல் வான்செலவுச் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காக அவ்வுரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச் சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படும் ஆளெவரும், விடயத்துக்கேற்ப, அதற்கான தோதான உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச் சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தைப் பெறாமல் அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடுதலாகாது.

(4) ஈடுபடுத்தப்படும் ஆள், விடயத்துக்கேற்ப, செல்லுபடியான உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கின்றாரென அவ்வாறு ஈடுபடுத்தும் ஆள் ஐயத்துக்கிடமின்றித் திருப்திப்பட்டாலொழிய, ஆளொருவர், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஓர் உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச் சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தைத் தேவைப்படுத்துகின்ற ஏதேனும் செயற்பாட்டில் வேறெவரேனுமாளை ஈடுபடுத்துதலாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள், திறத்தவராகவுள்ள ஓர் அரசினால் வழங்கப்படும் ஓர் உரிமத்தை,

வகைமதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தைச் செல்லுபடியானதாக்குவதற்கும் ஏற்பாடு செய்யலாம் ; ஆயின், அத்தகைய உரிமம், வகைமதிப்பு, தகுதிச்சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் எந்தத் தேவைப்பாடுகளின்கீழ் சமவாயத்துக்குத் திறத்தவராகவுள்ள அந்த அரசினால் வழங்கப்பட்டதோ அந்தத் தேவைப்பாடுகள், விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான நியமங்களைச் செயற்படுத்துவதற்காக விதித்துரைக்கப்படும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படும் தேவைப்பாடுகளுக்குச் சமமானவையாக அல்லது அவற்றுக்கு மேற்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

*ஓர் உரிமத்தை, வகைமதிப்பை அல்லது தகுதிச்சான்றிதழ்களை, அல்லது அனுமதிப் பத்திரத்தை வழங்குதலும், இடைநிறுத்துதலும், இல்லாதொழித்தலும்.*

**64.** அறுபத்திமூன்றாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோர் உரிமமும், வகைமதிப்பும், தகுதிச்சான்றிதழும், அனுமதிப்பத்திரமும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்படும் வேறெவரேனும் ஆளினால் அவரது சார்பில் வழங்கப்படல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது சார்பில் செயலாற்றுகின்ற அத்தகைய வேறு ஆள், அத்தகைய ஏதேனும் உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை, அப்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காரணங்களுக்காகத் திருத்துவதற்கு, இடைநிறுத்துவதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்குத் தத்துவமுடையவராதலும் வேண்டும்.

*உடல்சார் அல்லது உளஞ்சார் ஆற்றல் குறைபாடு.*

**65.** (1) பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் உரிமமொன்றை, வகைமதிப்பொன்றை, தகுதிச்சான்றிதழொன்றை அல்லது அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கும் ஆளெவரும், அவரது கடமைகளின் காப்பான புரிகையைப் பங்கப்படுத்தக்கூடிய ஒரு நோயை அல்லது சோர்வு உட்பட வேறு உடல்சார் அல்லது உளஞ்சார் ஆற்றல் குறைபாட்டை அவர் உற்றுள்ளாரென அவர் அறியவந்தால் அத்தகைய உரிமம் வகையளிப்பு, தகுதிச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் எச்செயற்பாடுகளுக்காக வழங்கப்படுகின்றதோ அச்செயற்பாடுகளைப் புரிதலாகாது.

(2) தொழிற்படுத்துநரொருவரின் எவரேனும் ஊழியர், அவரது கடமைகளின் காப்பான புரிகையைப் பங்கப்படுத்தக் கூடிய சாத்தியங்கொண்ட, சோர்வு உட்பட்ட ஏதேனும் உடல்சார் அல்லது உளஞ்சார் ஆற்றல் குறைபாட்டை உற்றுள்ளாரென அத்தகைய தொழிற்படுத்துநர் அறியவருமிடத்து, அத்தகைய கடமைகளை அத்தகைய ஊழியர் தொடர்ந்து நிறைவேற்றுவதனைத் தடுப்பதற்கு உடனடியாக அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் அத்தகைய தொழிற்படுத்துநரின் கடமையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஆளொருவரினால் மீறப்படுதலானது இச்சட்டத்தின் கீழான தவறொன்றாதல் வேண்டுமென்பதுடன், இருபத்தையாயிரம் விசேட மீளப்பெறுகை உரிமைகளின் இலங்கை ரூபாக்களில் சமமாகவுள்ளதை விஞ்சாத குற்றப்பணமொன்றுடன் தண்டிக்கப்படற்பாலராதலும் வேண்டும், அத்துடன், அத்தகைய தண்டனையுடன் மேலதிகமாக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்படுட்டுள்ள ஏதேனும் உரிமம், வகைமதிப்பு, தகுதிச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாதாக்கப்படுவதற்கும் இலக்காதல் வேண்டும்.

(4) சோர்வு ஏற்படுவதற்கெதிரான பாதுகாப்பாக, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்கு ஏற்புடையனவான கடமை மற்றும் ஓய்வுக் காலப்பகுதிகள் மீதான வரையறை சம்பந்தமான பணிப்புகளை வழங்குவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல், அத்தகைய உரிமத்தை, வகைமதிப்பை, தகுதிச் சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரினது கடமையாதலும் வேண்டும். ஏதேனும் உரிமம், வகைமதிப்பு, தகுதிச்சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரை அவ்வாறு வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதைத் தடுக்கும் எவரேனும் தொழில்தருநர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி உசிதமானதென அல்லது அவசியமானதெனக் கருதுமிடத்தெல்லாம், அவர் இச்சட்டத்தின்

இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உரிமத்தை, வகை மதிப்பை, தகுதிச் சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரேனுமாளை எந்நேரத்திலும் மருத்துவச் சோதனைக்கு உட்படுமாறு தேவைப்படுத்துவதற்குத் தத்துவ முடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தேவைப் பாட்டுக்கு இணங்கியொழுகுவது அத்தகைய ஆளின் கடமையாத லும் வேண்டும். இணங்கியொழுகுவதற்கு மறுத்தல் இச்சட்டத்தின் கீழான தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, நீதிமன்றமொன்றினால் அத்த கைய தவறுக்காக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை, வகை மதிப்பை, தகுதிச்சான்றிதழை அல்லது அனுமதிப்பத்திரத்தை இல்லாதாக்குவதற்குத் தத்துவமுடையவராதலும் வேண்டும்.

*வான்செலவுப் பயிற்சி நிறுவனங்கள்.*

**66.** (1) தகுதிச் சான்றிதழொன்று அல்லது உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று 63 ஆம் பிரிவின்கீழ் விதித் துரைக்கப்பட்ட எந்தச் செயற்பாடுகளுக்காகத் தேவைப்படு கின்றதோ அந்தச் செயற்பாடுகள் தொடர்பிலான அத்தகைய பயிற்சிநெறிகளை வழங்குவதற்கு, பணிப்பாளர் தலைமையதிபதி, நெறி உள்ளடக்கத்தின் போதுமாந்தன்மை, பயிற்சிச் சாதனங் களினதும் வசதிகளினதும் பொருத்தமாந்தன்மை, அத்துடன் போதனையாளர்களின் திறமை என்பனபற்றி அவர் திருப்திப்படு மிடத்து, எவரேனுமாளுக்கு அல்லது நிறுவனத்துக்கு விடயத்துக் கேற்ப உரிமமொன்றை அல்லது அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு அதிகாரமுடையவராதல் வேண்டும்.

(2) தொழிலுக்கமர்த்தப்படவேண்டி போதனையாளர்களின் தகைமை, பயிற்சிநெறிகளை வழங்குவதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழான உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கப்பெறு வதற்குத் தகைமை கொண்டிருப்பதற்கெனக் கிடைக்கக்கூடியன வாக இருக்கவேண்டிய சாதனங்களினதும் ஏனைய வசதிகளி னதும் தன்மை அத்துடன் அத்தகைய உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காகவும், புதுப்பிப்பதற் காகவும், திருத்துவதற்காகவும் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் என்பன விதித்துரைக்கப்படுகின்றவாறாக இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரம் ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, அதன்பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் ஓராண்டை விஞ்சாத மேலதிகக் காலப் பகுதிக்குப் புதுப்பிக்கவும்படலாம். பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனுமொரு காரணத்துக்காக அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக, வழங்கப்படும் ஏதேனும் உரிமத்தை அல்லது அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

## அத்தியாயம் VIII

### வானூர்தித் தொழிற்பாடு

ஆவணங்களும், சாதனங்கும், தொழிற்படுத்து கின்ற இயக்கு தொகுதியினரின் எண்ணிக்கையும் விவரணமும்.

**67.** (1) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்தியெதுவும், இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழும் 50 ஆம் பிரிவின் கீழும் முறையே வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழையும், அத்தகைய ஆகக்குறைந்த சாதனங்களையும் இயக்குதொகுதியினரையும், இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்டவாறு வானூர்தியின்கண் கொண்டு செல்லப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் வேறேதேனும் ஆவணங்களையும் அதில் கொண்டு சென்றாலொழிய, இலங்கையின் ஆள் புலத்தினுள் அல்லது ஆள்புலத்துக்கு வெளியே பறத்தலாகாது.

(2) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தியொன்று தவிர்ந்த வானூர்தியெதுவும் அவ்வானூர்தியின் பதிவின்மீது வழங்கப்படும் உரிமத்தை அல்லது சான்றிதழை, ஆகக்குறைந்த சாதனங்களையும் இயக்கு தொகுதியினரையும், அத்துடன் வானூத்தியின் பதிவக அரசின் அல்லது தொழிற்படுத்துநரினது அரசின் சட்டத்தினால் வானூர்தியினங்கள் கொண்டு செல்லப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அல்லது இவை இரண்டும் இல்லாதபட்சத்தில் சமவாயத்தின் 29 ஆம் உறுப்புரையினால் அதன்கண் கொண்டு செல்லப்படுவதற்குத் தேவைப்படுத் தப்படுகின்றவாறான வேறெவையேனும் ஆவணங்களை அதில் கொண்டு சென்றாலொழிய, இலங்கையின் ஆள்புலத்தினுள் பறத்தலாகாது.

(3) இப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும் ஒவ்வொரு வானூர்தியினதும் இயக்கு தொகுதியினரின் உறுப்பினர்கள், வானூர்தியின் பதிவக அரசினால் அல்லது ஏற்புடையதாகுமிடத்து தொழிற் படுத்துநரின் அரசினால் வழங்கப்படும் அல்லது செல்லுபடியாக்கப்படும் விதித்துரைக்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்களை, உரிமங்களை, வகைமதிப்பை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(4) அமைச்சரானவர், வானூர்திகள், எஞ்சின்கள், உந்துருளிகள், சாதனம் அல்லது வானூர்திகளைப் பேணுவதிலும் தொழிற் படுத்துவதிலும் சம்பந்தப்பட்டுள்ள ஆளணியினர் தொடர்பில் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் சம்பவக்குறிப்பேடுகளின் வகைகளையும் அவற்றின் பேணுகை தொடர்பாக ஏற்புடைத்தற்பாலனவான தேவைப்பாடுகளையும் விதித்துரைத்தல் வேண்டும்.

**68.** (1) அமைச்சரானவர் இயைபான நிவி வழக்கங்களுக்கு இணங்கியொழுகி, வானூர்யொன்று நகர்த்தப்படக்கூடிய அல்லது பறக்கப்படக்கூடிய முறையையும், வானூர்தியொன்றினால் அல்லது ஆட்களினால் காட்டப்படவேண்டிய வெளிச்சங்களையும் அல்லது செய்யப்படவேண்டிய வேறு சைகைகளையும், வானூர்தி நிலையங்களில் வெளிச்சமிடுதலையும் அவற்றைக் குறியிடுதலையும், அத்துடன் பறந்து கொண்டிருக்கும் அல்லது நகர்ந்து கொண்டிருக்கும் வானூர்தியொன்றினது காப்பையும் தரையின் மீது அல்லது நீரின்மீது உள்ள ஆட்களினதும் ஆதனத்தினதும் காப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வேறெவையேனும் ஏற்பாடுகளையும் வான் விதிகள்மூலம் விதித்துரைத்தல் வேண்டும். வான் விதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் விதித்துரைக்கப் படுகின்றவாறான வான்விதிகளுக்கு இணங்கியொழுகுவது ஒரு வானூர்தியை ஏவுகின்ற விமானமோட்டி ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(3) சர்வதேச பறப்பில் ஈடுபடுகின்ற இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வானூர்தியும், அத்தகைய வானூர்தி எவ்விடத்திலிருப்பினும், அந்நாட்டில் வலுவிலுள்ள வான்விதி

களை அநுட்டித்தல் வேண்டுமென்பதுடன், ஆழ்கடலின்மீது அல்லது இறைமை தீர்மானிக்கப்படாத இடப்பரப்புக்களின்மீது பறக்கையில், அநுட்டிக்கப்படவேண்டிய வான் விதிகள் சமவாயத்தின்கீழ் தாபிக்கப்பட்டவையாக இருத்தலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்றவாறு வான்விதிகளை அநுட்டிக்கத் தவறுகின்ற இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்தியொன்றை ஏவுகின்ற விமானமோட்டி, அத்தகைய மீறுகைக்காக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, 64 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியால் வழங்கப்படும் உரிமம், ஒன்றில் இடை நிறுத்தப்படுவதற்கு அல்லது இல்லாதாக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

*அவசர நிலைமையில் ஏவுகின்ற விமான மோட்டியினாலான நடவடிக்கைகள்.*

**69.** (1) அறுபத்தியெட்டாம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏவுகின்ற விமானமோட்டியொருவர் —

(அ) பறந்து கொண்டிருக்கும் வானூர்தியின் காப்பான தொழிற்பாட்டுக்கும், எல்லா பயணிகளினதும் இயக்கு தொகுதியினரினதும் காப்புக்கும் சேமநலத்துக்கும், ஏற்றிச் செல்லப்படும் சரக்கின் காப்புக்கும் பொறுப்பாதல் வேண்டும் ;

(ஆ) ஏவுகையில் இருக்கும்போது வானூர்தியைக் கட்டுப்படுத்துவதற்கும் வானூர்தியிலுள்ள எல்லா ஆட்களிடையேயும் ஒழுக்காற்றைப் பேணுவதற்கும் இறுதி அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் இயைபான எல்லாத் தேவைப்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் வானூர்தித் தொழிற்பாடுகள் தொடர்பாகச் செயற்படுத்துகின்ற நியமங்களுக்கும் இணங்கியொழுகுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஓர் அவசர நிலைமையில், ஏவுகின்ற விமானமோட்டி —

(அ) அவசர நிலைமையானது உயிருக்கு அல்லது ஆதனத்துக்கு ஆபத்து விளைவிக்கக்கூடுமென ;

(ஆ) அவசரநிலைமையைக் கையாள்வதற்கு வேறுபட்டுச் செயற்படுதல் அவசியமாகவுள்ளதென ;

(இ) அவசரநிலைமையைக் குறைப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்குக் கிடைக்கக்கூடிய நியாயமான வழிவகைகள் எவையும் இல்லையென ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு அல்லது வானூர்தித் தொழிற்பாடுகள் தொடர்பான எவையேனும் செயற்படுத்துகின்ற நியமங்களுக்கு இணங்கியொழுகுவதில் உட்படுத்தப்படும் ஆபத்தின் அளவு, அவற்றிலிருந்து வேறுபட்டுச் செயற்படுவதில் உட்படுத்தப்படும் ஆபத்தைப் பார்க்கிலும் அளவில் வெளிப்படையாக அதிகமாகவுள்ளதென,

திருத்தப்படுமிடத்து, இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு, அல்லது வானூர்தித் தொழிற்பாடுகள் தொடர்பான எவையேனும் செயற்படுத்துகின்ற நியமங்களுக்கு இணங்கியொழுகுவதிலிருந்து வேறுபட்டுச் செயற்படலாம்.

(3) ஏவுகின்ற விமானமோட்டி ஒருவர், அவசரநிலைமையொன்றில், (2) ஆம் உட்பிரிவின் கீழான எவையேனும் தேவைப்பாடுகளிலிருந்துவேறுபட்டுச் செயற்படுமிடத்து, அவர் —

(அ) அத்தகைய வேறுபட்டுச் செயற்படுதல் பற்றி இயைபான வான் நடமாட்டக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வேறுபட்டுச் செயற்படுத்தல் பற்றிச் செயல்முறைக்குகந்தவரை விரைவாகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அவரது நடிவடிக்கை தொடர்பான எழுத்திலான அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) ஏதேனும் தேசிய அவசர நிலைமையை, இடுக்கண், இக்கட்டான நிலைமை அல்லது இடர்பாடு ஏற்படும் பட்சத்திலும் உயிர்களையும் அல்லது ஆதனத்தை மீட்கும் அல்லது அத்தகைய சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடிய சாத்தியம் கொண்ட திறத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரேயொரு நோக்கத்துக்காகவும், பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய அவசரநிலைமையை இடுக்கணை, இக்கட்டுநிலையை அல்லது இடர்பாட்டைக் கையாளுவதற்கு அவசியமாகக் கூடுக அந்த அளவுக்கு இச்சட்டத்தினதும் அதன்கீழ் வழங்கப்படும் ஒழுங்குவிதிகளினதும், விதிகளினதும், செயற்படுத்துகின்ற நியமத்தினதும் அல்லது எவையேனும் பணிப்புக்களினதும் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேவைப்பாடுகளின் பிரயோகத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளின் பிரயோகத்தைத் தற்காலிகமாக அவர் இடைநிறுத்தியுள்ள அத்தகைய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விபரங்களைக் கொடுத்து அமைச்சருக்கு எழுத்தில் அறிக்கையிடுதல் வேண்டும். அமைச்சர் அத்தகைய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பித்தலும் வேண்டும்.

வானூர்தித் தொழிற் படுத்துநர் சான்றிதழ்.

**70.** (1) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்தியெதுவும் அல்லது ஏதேனும் குத்தகை, வாடகைக்கமர்த்துகை, பரிமாற்றம் அல்லது இதேபோன்ற ஒழுங்கேற்பாட்டின் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொழிற்படுத்துநரொருவரினால் பயன்படுத்தப்படும் ஏதேனும் வானூர்தி, அத்தகைய

வானூர்தியின் சொந்தக்காரருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அளிக்கப்படும் வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழின் நியதிகளின்கீழும் அவற்றுக் கிணங்கவும் அல்லாது தொழிற்படுத்தப்படுதலாகாது.

(2) வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநரொருவரினால் புரியப்படும், இலங்கையினுள் அல்லது இலங்கையிலிருந்தான வர்த்தக வான் போக்குவரத்து தொழிற்பாடுகள் அத்தகைய வெளிநாட்டு வான் தொழிற்படுத்துநருக்குப் பணிப்பாளர், தலைமையதிபதியினால் அளிக்கப்படும் வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழின் நியதிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும். அத்தகையதொரு சான்றிதழை வழங்குவதில், பணிப் பாளர் தலைமையதிபதி, அத்தகைய வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநருக்கு, அவர் எந்நாட்டில் தொழில்கொண்டு நடத்துகின்றாரோ அந்நாட்டில், செல்லுபடியான வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்று அல்லது அதற்குச் சமமானதொன்று வழங்கப்பட்டுள்ளதென்பதையும் அத்துடன் மேலும், வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர், சமவாயத் திலும், சமவாயத்துக்கான பின்னிணைப்புகளிலும் தரப்பட்டுள்ள நியமங்கள், செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் என்பவற்றுக்கு இசைந்தொழுகி இணைந்தொழுகுகின்றாரென் பதை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய வானூர்தித் தொழிற் படுத்துநர் சான்றிதழை வழங்கிய அதிகாரியினால் போதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழும் வெளிநாட்டு வானூர்தி தொழிற்பாடுத்துனர் சான்றிதழும் அத்தகைய வானூர் தித் தொழிற்படுத்துநர் சான்றிதழுக்கு அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கின்ற விடயத்துக்கேற்ப, தொழிற்படுத்துநரொருவர் அல்லது சொந்தக் காரரொருவர் அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்து நரொருவர், இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு அல்லது

சர்வதேசக் குடியியல் வான்செலவுக்கு அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்துகின்றவிடத்து அல்லது அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்தும் சாத்தியங் கொண்டவராக இருக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதலாகாது.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்படும் கட்டணமொன்றைக் கொடுப்பனவு செய்வதன்மேல், விடயத்துக்கேற்ப, (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைச் செய்முறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அந்நோக்கத்துக்காக ஏற்புடையப்படற்பாலனவான நியமங்களுக்கும் இணைந்துள்ள தேவைப்பாடுகளுக்கும் பயன் கொடுக்கின்ற விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க, அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நுண்ணாய்வை நடாத்துதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழும் வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழும், வழங்கப்படும் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாட்டு அளவுக் குறிப்பீடுகளுக்கும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கும் அமைந்தனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், தொழிற்பாடுகளானவை குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாட்டு அளவுக் குறிப்பீடுகளுடனும், விதித்துரைக்கப்படும் அத்தகைய நியதி நிபந்தனைகளுடனும் கண்டிப்பாக இயைய நிறைவேற்றப்படுவதனையும், அத்தகைய தொழிற்பாடுகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள் செயற்படுத்துகின்ற நியமங்கள், பணிப்புக்கள் என்பவற்றின் கீழான எவையேனும் தேவைப்பாடுகளை அல்லது வேறேதேனும் நாட்டுடன் செய்துகொள்ளப்படும் ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் இலங்கை மீது சுமத்தப்பட்ட எவையேனும் கடப்பாடுகளை மீறாதிருப்பதனையும் உறுதிப்படுத்துவது அத்தகைய சான்றிதழை வைத்திருப்பவரின் கடப்பாடாதலும் வேண்டும்.

(6) வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்று அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்று, அது வழங்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விடயத்திலும் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குப் புதுப்பிக்கவும்படலாம் ; ஆயின், அத்தகைய சான்றிதழை வைத்திருப்பதற்கான தேவைப்பாடுகள், பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்குப் பேணப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் விடயத்துக்கேற்ப, செல்லுபடியான வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழின்றி அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்றின்றி அல்லது அதன் எவையேனும் நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு முரணாக வானூர்தியொன்றைத் தொழிற்படுத்துதலானது, ஒவ்வொரு மீறுகைக்கும் அல்லது மீறுகையின் ஒவ்வொரு நாளுக்கு 10,000 வீமீ உரிமைகளுக்கும் சமமானதை விஞ்சாத இலங்கை ரூபாவிலான குற்றப்பணம் ஒன்றுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

பொறுப்புக் காப்புறுதி.

**71.** (1) இலங்கையினுள், அல்லது சர்வதேச ரீதியில், இலங்கைக்கு, இலங்கையிலிருந்து அல்லது இலங்கையினூடாகத் தொழிற்படுகின்ற வானூர்தித் தொழிற்படுத்துநர் அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், ஒரு விபத்தினால் விளைவிக்கப்படக்கூடிய பயணிகளின் இறப்புக்கான அல்லது உடலூறுக்கானதும், கொண்டுசெல்லப்படும் காலப்பகுதியின்போது ஏற்படும் ஏதேனும் சம்பவம் காரணமாகப் பயணப் பொதிகளின், சரக்கின் அல்லது தபாலின் இழப்புக்கானதும் அல்லது அவற்றுக்கான சேதத்துக்கானதும், அத்துடன் பயணிகளை, பயணப்பொதிகளை, சரக்கை அல்லது தபாலைக்கொண்டு செல்வதிலான தாமதத்துக்கானதுமான அவரது பொறுப்பைப் போதியளவு மேவுகின்ற பொறுப்புக் காப்புறுதியொன்றை எல்லா நேரங்களிலும் வலுவில் வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய ஆள், நிலப்பரப்பின் மீதுள்ள அல்லது வானிலுள்ள மூன்றாம் திறத்தவர்களுக்கு வானூர்தியினால் விளைவிக்கப்படக்கூடிய சேதத்துக்கான அவரது பொறுப்பை மேவுகின்ற செல்லுபடியான, போதியதான காப்புறுதிப்பத்திரத்தையும் வைத்திருத்தலும் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற் படுத்துநர் சான்றிதழை வைத்திருப்பவர் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பொறுப்புக் காப்புறுதி மேவுகையின் போதுமாந்தன்மையைத் தீர்மானிப்பதில் -

(அ) காப்புறுதி செய்யப்பட்ட ஆளின் எல்லா உத்தேச செயற் பாடுகள் தொடர்பிலும் அவரது உள்ளபடியான அத் துடன் எழக்கூடிய கடப்பாடுகளுக்காக காப்புறுதி யானது அனைத்தடங்கிய மேவுகையை வழங்குகின் றதா ;

(ஆ) வானூர்தி பதிவுசெய்யப்படுகின்ற நாட்டின், அல்லது எந்தக் காப்புறுதியாளரின் நிதிசார் பொறுப்பு சரிபார்க் கப்பட்டுள்ளதோ அந்தக் காப்புறுதியாளர் அவரது வதிவிடத்தை அல்லது பிரதான தொழிற்பாட்டை கொண்டுள்ள நாட்டின் சட்டங்களின்கீழ் காப்புறுதி யாளருக்கு அத்தகைய காப்புறுதியைப் பயனுறுத்து வதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதா ; அத்துடன்

(இ) நிலப்பரப்பிலுள்ள அல்லது வானிலுள்ள மூன்றாம் திறத்தவர்களுக்கு வானூர்தியினால் விளைவிக்கப் படும் இறப்பு, உடலூறு அல்லது சேதம் காரணமாக எழக்கூடிய கடப்பாடுகளுக்காக காப்புறுதியானது அனைத்தடங்கிய மேவுகையை வழங்குகின்றதா,

என்பவற்றைக் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட சான்றிதழை வைத்திருப்பவரினால் கொண்டுநடாத்தப்படும் தொழிற்பாடு களின் தன்மையையும் நோக்கெல்லையையும் பொறுத்து, பெறப் படுவதற்குத் தேவைப்படுகின்ற காப்புறுதி மேவுகையின் ஆகக் குறைந்த எல்லைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

*வானூர்தித் தொழிற் படுத்துநர் சான்றிதழ் களைத் திருத்துதலும், இடைநிறுத்து தலும், இல்லா தொழித்தலும்.*

**72.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, தோதானதென அவர் கருதுமிடத்தும், சான்றிதழ் வைத்திருப்பவரொருவரினால் அதற் கெனச் செய்யப்படும் வேண்டுகோளின்பேரிலும், விதித்துரைக் கப்படும் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதன்மீதும், அத்தகைய சான்றிதழின்கீழ் அளிக்கப்படும் சிறப்புரிமைகளை அல்லது வரையறைகளை வேறுபடுத்தி, அத்தகைய சான்றிதழ் வைத்திருப்ப வருக்கு வழங்கப்படும், விடயத்துக்கேற்ப ஒரு வானூர்தித் தொழிற் படுத்துநர் சான்றிதழை அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை திருத்தலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, விடயத்துக்கேற்ப, ஏதேனும் வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை அல்லது ஒரு வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை, அச்சான்றிதழானது எந்நிபந்தனைகளின்கீழ் வழங்கப்பட்டதோ, அந்நிபந்தனைகள் மாறினால் அல்லது சான்றிதழ் வைத்திருப் பவர், வழங்கப்பட்ட சான்றிதழில் குறித்துரைக்கப்படும் தொழிற் பாட்டு அளவுக் குறிப்பீடுகளுக்கு, 70 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரி வின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளுக்கு, 71 ஆம் பிரிவின்கீழான தேவைப்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத் தின் எவையேனும் ஏற்பாடுகளின்கீழான, அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின், விதிகளின், செயற்படுத்துகின்ற நியமங்களின் அல்லது பணிப்புக்களின் கீழான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறினால், எந்நேரத்திலும் இடை நிறுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப் பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*வானூர்திகளின் குத்தகை, வாடகைக்கமர்த் துகை, அல்லது பரிமாற்றம் என்பவற்றுக் கான ஓர் உடன்படிக்கை யின்கீழ் தொழிற்படுத் தப்படும் வானூர்திகள்.*

**73.** (1) இலங்கையைத் தவிர, சமவாயத்துக்கான திறத்தவராக வுள்ள ஓர் அரசில் பதிவுசெய்யப்படும் வானூர்தியொன்று, வானூர்தியின் குத்தகை, வாடகைக்கமர்த்துகை, அல்லது பரிமாற் றம் என்பவற்றுக்கான ஓர் உடன்படிக்கையின்கீழ் அல்லது இதேபோன்ற வேறேதேனும் ஒழுங்கேற்பாட்டின்கீழ் இலங்கையில் தொழிற்படுத்தப்படலாம். ஆயின், சமவாயத்தின் 83 ஆம் உறுப் புரையைப் பின்பற்றி அத்தகைய வானூர்தியின் பதிவக அரசின் வான்வழி அதிகாரிக்கும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் இடையே காப்பு மேனோக்கும் அதன் தொழிற்பாடுகளும் தொடர் பாகப் பணிகளையும் கடமைகளையும் கைமாற்றுதல் பற்றிய உடன் படிக்கையொன்று செய்யப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் ஏற்புடைமை, அத்தகைய உடன்படிக்கையிற் குறித்துரைக்கப்படும் அளவுக்கு இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, உகந்ததென அவர் கருதுகின்றவிடத்தும் அதிகாரசபையின் அங்கீகாரத்துக்கமையவும், இலங்கையில் பதிவுசெய்யப்பட்டவொரு வானூர்தியின் குத்தகை, வாடகைக்கமர்த்துகை அல்லது பரிமாற்றம் என்பவற்றுக்கான ஓர் உடன்படிக்கையை அல்லது இதேபோன்ற வேறேதேனும் ஒழுங்கேற்பாட்டைப் பின்பற்றி, இன்னோர் அரசின் தொழிற்படுத்துநரொருவரினால் தொழிற்படுத்தப்படவுள்ள அவ்வானூர்தியொன்றின் காப்பு மேனோக்குத் தொடர்பாக பதிவக அரசின் பணிகளையும் கடமைகளையும் கைமாற்றுவதற்காகச் சமவாயத்துக்கான திறத்தவராயுள்ள வேறேதேனும் அரசின் வான் செலவு அதிகாரிகளுடன் உடன்படலாம் ; அத்துடன் அவ்வரசுக்கு அவ்வாறு கைமாற்றப்பட்ட கடமைகளினதும் பணிகளினதும் தன்மையும் நோக்கெல்லையும், அத்தகைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அளவுக்கு இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், செல்லுபடியான வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை ஏலவே வைத்திருக்கின்ற தொழிற்படுத்துநரொருவர் தொடர்பில், (1) ஆம் உட்பிரிவின்கீழான தேவைப்பாட்டைத் தள்ளுபடி செய்யலாம் ; ஆயின், உத்தேச ஒழுங்கேற்பாடானது பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில், காப்புத் தொடர்பிலான தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்கின்றனவாக இருத்தல் வேண்டும்.

அபாயகரமான பண்டங்களைக் கொண்டு செல்லுதல்.

**74.** (1) வான்கலமோட்டலினதும் ஒரு வானூர்தியில் பயணஞ் செய்யும் ஆட்களினதும் காப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, அமைச்சர், ஏற்புடையதற்பாலனவான நிவி வழக்கங்களுக்கு இணங்கியொழுக, வான்வழியாகக் கொண்டுசெல்லப்படும் அபாயகரமான பண்டங்களை வகுப்பாக்கம் செய்வதற்காகவும், பொதியிடுவதற்காகவும், சுட்டுத்துண்டிடுவதற்காகவும், அடையாளமிடுவதற்காகவும், கையாள்வதற்காகவும், திருப்திசெய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளையும் வான்வழியாக அத்தகைய

அபாயகரமான பண்டங்களைக் கையாள்வதற்கான அல்லது இடம்பெயர்ப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்காகச் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதற்கென வழங்கப்படும் பணிப்புகளின்மூலம், வானூர்தியொன்றில் கொண்டுசெல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படும் அபாயகரமான பண்டங்களின் வகுப்பாக்கம், பொதியிடுகை, சுட்டுத்துண்டிடுகை, அடையாளமிடுகை, கையாளுகை மற்றும் கொண்டுசெல்கை என்பன தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் அவசரகால நடவடிக்கைமுறைகளையும், அபாயகரமான பண்டங்களை உட்படுத்துகின்ற விபத்துக்களை அல்லது சம்பவங்களை நுண்ணாய்வு செய்தலும் அபாயகரமான பண்டங்களின் அனுப்பு தொகைகளைக் கையாள்வதில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களுக்குத் தேவையான பயிற்சியையும் குறித்துரைத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வுட்பிரிவின்கீழ் அவரால் வழங்கப்படும் பணிப்புகளுக்கு அல்லது இப்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமாக வரக்கூடியவாறான அத்தகைய செயற்படுத்துகின்ற அறிவுறுத்தல்களைக் காலத்துக்குக்காலம் வழங்குவதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(3) வெடிமருந்துகள் அல்லது வேறு போர்க் கருவிகள், அந்நோக்கத்துக்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் மீதன்றி, இலங்கையின் ஆள்புலத்தினுள் உள்ள ஏதேனும் வானூர்தியினால் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்தியினால் கொண்டுசெல்லப்படுதலாகாது.

(4) இப்பிரிவினால் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ; பணிப்புகளுக்கு அல்லது அதன்கீழ் வழங்கப்படும் செயற்படுத்துகின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் வி. மீ. உரிமைகளின் இலங்கை ரூபாக்களில் சமமான குற்றப்

பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*வான் மார்க்கங்களைத் தீர்மானித்தல்.*

**75.** *(1)* அதிகாரசபையானது, வான் நடமாட்டச் சேவைகளை வழங்குவதற்காக நியமிக்கப்படும் சேவை வழங்குநரின் உதவியுடன், ஏற்புடைத்தற்பாலனவான நி வி வழக்கங்களுக்கும் பிராந்திய வான்கலமோட்டல் திட்டத்துக்கும் இணங்க, இலங்கைப் பறத்தல் தகவற் பிராந்தியத்தினுள் குடியியல் வானூர்திகளின் பிரவேசத்துக்கும், அகலுகைக்கும், இடப்பெயர்வுக்கும் அல்லது நகர்வு களுக்குமான அவற்றினால் பின்பற்றப்படவேண்டிய வான் மார்க் கங்களையும் வான்கலமோட்டல் நடவடிக்கைமுறைகளையும் தீர்மானித்தலும் வெளியிடுதலும் வேண்டும்.

*(2)* விடயத்துக்கு ஏற்ப, ஏற்புடையற்பாலனவான நிவி வழக்கங்களுக்கு அல்லது பிராந்திய வான்கலமோட்டல் திட்டத்தின் வடிவமைப்புக்குச் செய்யப்பட்டிருக்கக்கூடிய எவையேனும் மாற்றங்களுடன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும் வான்மார்க்கங்களை நாளதுவரையானவையாக வைத்திருக்கும்வகையில், அதிகாரசபையானது, அவசியமாகும்போதெல்லாம் அவ்வான் மார்க்கங்களைத் திருத்துதல் வேண்டும்.

*விமான மோட்டியற்ற வானூர்திகள்.*

**76.** விமானமோட்டியொருவரில்லாமல் செலுத்தப்படுவதற்கு இயன்றதாகவுள்ள வானூர்தியொன்று, அந்நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் ஒரு விசேட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றியும் அதன் நியதி நிபந்தனைகளுக்கு இணங்கவன்றியும், அத்துடன் விதித்துரைக்கப்படும் கட்டணத்தைச் செலுத்துவதன் மீதன்றியும், இலங்கையின் ஆள்புலத்தினுள் தொழிற்படுத்தப்படுதலாகாது.

*வான் சாகசப் பறப்பு, பறத்தற் கண்காட்சிகள், போட்டிகள் மற்றும் வான் காட்சிகள்.*

**77.** *(1)* பணிப்பாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்படும் ஒரு விசேட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றியும், விதித்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்படுவதன் மீதன்றியும், வானூர்தியெதுவும் இலங்கையின் ஆள்புலத்தினுள் வான் சாகசப் பறப்புமுறையில் பறக்க விடப்படுதலோ அல்லது ஏதேனும் கண்காட்சி, போட்டி அமைப்புமுறைப் பறப்பு அல்லது வான்காட்சி புரியப்படுதலோ ஆகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, வான்வெளியிலான பறத்தற்காப்பும் பொதுமக்களினதும் ஆதனத்தினதும் காப்பும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓர் அனுமதிப் பத்திரம் எச்செயற்பாடுகள் தொடர்பில் வழங்கப்படவுள்ளதோ அச்செயற்பாடுகளினால் அபாயத்துக்குட்படுத்தப்படுவதில்லையெனத் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வழங்கலாமென்பதுடன், விளைவிக்கப்படக்கூடிய ஏதேனும் சேதத்துக்காகப் போதிய பகிரங்கப் பொறுப்புக்காப்புறுதிக்கான எண்பிப்பை அளிக்கும்படி அத்தகைய ஏதேனும் கண்காட்சியை, போட்டியை, அமைப்புமுறைப் பறப்பை அல்லது வான் காட்சியை ஒழுங்குபடுத்துவோரை மேலும் தேவைப்படுத்தலாம்.

அபாயகரமான பறத்தல் தொழிற்பாடுகள்.

**78.** (1) தரையில் அல்லது நீரில் உள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கு அவசியமற்ற அபாயத்தை விளைவிக்கக் கூடியவாறான அத்தகையவொருமுறையில் வானூர்தியொன்று செலுத்தப்படுமிடத்து -

(அ) வானூர்தியின் ஏவுகின்ற விமானமோட்டியும் தொழிற்படுத்துநரும் ; அல்லது

(ஆ) தொழிற்படுத்துநரெவரும் இல்லாதவிடத்து, வானூர்தியின் ஏவுகின்ற விமானமோட்டியும் சொந்தக்காரரும்,

இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம், வி.மீ உரிமைகளின் இலங்கை ரூபாக்களின் சமமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்குமான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப தொழிற்படுத்துநரொருவர் அல்லது சொந்தக்காரர், அத்தகைய வானூர்தி அவரது அறிவோ சம்மதமோ இன்றி அம்முறையில் செலுத்தப்பட்டதென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிப்பதற்கு அத்தகைய தொழிற்படுத்துநர் அல்லது சொந்தக்காரர் இயன்றவராகவுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான பொறுப்பிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் எவையேனும் பொதுக்காப்பு அல்லது வேறு ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படக்கூடிய எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு, விதிகளுக்கு அல்லது செயற்படுத்துகின்ற நியமங்களுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமேயொழிய அவற்றைப் பதிலீடு செய்வனவாக இருத்தலாகாது.

ஒரு வானூர்தியிற் புரியப்படும் தவறு.

**79.** இலங்கையின் ஆள்புலத்தினுள் அல்லது ஆள்புலத்திற்கு வெளியே பறந்துகொண்டிருக்கையில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்தியொன்றில் அல்லது இலங்கையின் ஆள்புலத்தினுள் பறந்துகொண்டிருக்கையில் வெளிநாட்டு வானூர்தியொன்றில் —

(அ) ஓர் இயக்குத்தொகுதியுறுப்பினரைத் தாக்குகின்றவரான பயமுறுத்துகின்றவரான அச்சுறுத்துகின்றவரான அல்லது அவருக்கெதிராக இதேபோன்ற ஏதேனும் செயலைப் புரிகின்றவரான ;

(ஆ) வானூர்தியின் அல்லது அதன் பயணிகளின் காப்பை அல்லது பாதுகாப்பைப் பாதிக்கின்ற ஏதேனும் கருமம் தொடர்பாக ஏவுகின்ற விமானமோட்டியினால் அல்லது அவரது சார்பில் இயக்கு தொகுதி உறுப்பினரொருவரினால் விடுக்கப்படும் சட்டமுறையான ஓர் அறிவுறுத்தலைக் கடைப்பிடிப்பதற்கு மறுக்கின்றவரான ;

(இ) எவரேனும் பயணியைத் தாக்குகின்றவரான பயமுறுத்துகின்றவரான அல்லது அச்சுறுத்துகின்றவரான ;

(ஈ) வானூர்தியின் ஏதேனும் பாகத்தில் அல்லது பிரிவில் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றவரான ;

(உ) வானூர்திக்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கு வேண்டுமென்று சேதத்தை அல்லது அழிவை விளைவிக்கின்றவரான ;

(ஊ) ஏதேனும் ஒழுக்கக்கேடான நடத்தையில் ஈடுபடுகின்றவரான ;

(எ) வானூர்தியில் நிறுவப்பட்டுள்ள புகைக்காட்டியொன்றுடன் அல்லது வேறேதேனும் காப்பு உபாயத்துடன் தலையிடுகின்றவரான ;

(ஏ) அவ்வானூர்திக்கு ஏற்புடைத்தற்பாலதான சட்டத்தின்கீழ் ஏதேனும் தூக்கிக்கொண்டு செல்லக்கூடிய இலத்திரன் உபாயத்தை இயக்குதல் என்ற செயல் தடைசெய்யப்படும்போது, அதனை அவ்வாறு இயக்குகின்றவரான ; அல்லது

(ஐ) ஏவுகின்ற விமானமோட்டியின் அங்கீகாரமின்றி, வானூர்தியில் காணப்படும் ஏதேனும் காப்பு அல்லது அவசர நிலைமைச் சாதனத்தை உபாயத்தை அல்லது ஆவணத்தை அல்லது வேறேதேனும் சாதனத்தை அல்லது உபாயத்தை அகற்றுகின்றவரான,

ஒவ்வோராளும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தையாயிரம் விமீ உரிமைகளின் இலங்கை ரூபாக்களில் சமமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## அத்தியாயம் IX

### வர்த்தக வான் போக்குவரத்து

**80.** (1) ஆளெவரும், 83 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் வழங்கப்படும் வானூர்திச்சேவை உரிமமொன்றுக்கு இணங்கவன்றி, இலங்கையிலிருந்து உள்நாட்டு அல்லது சர்வதேச வர்த்தக வான்போக்குவரத்தில் ஈடுபடுவதாகாது.

*வானூர்திச் சேவை உரிமமும் வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமும்.*

(2) வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் எவரும், அந்நோக்கத்துக்காக விதித்துரைக்கப்படும் படிவத்தில் அதிகாரசபையினால் வழங்கப்படும் வெளிநாட்டு வானூர்திச்சேவை

உரிமமொன்றுக்கிணங்கவன்றி, இலங்கைக்கு அல்லது இலங்கையிலிருந்து ஏதேனும் வர்த்தக வான் போக்குவரத்தில் ஈடுபடுதலாகாது.

வானூடு வேலை.

**81.** (1) விதித்துரைக்கப்படும் முறையில் அதிகாரசபையினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்படும் உரிமமொன்றுக்கிணங்க வன்றி, வானூடு வேலையெதுவும் இலங்கையின் ஆள்புலத்தினுள் கொண்டுநடாத்தப்படுதலாகாது.

(2) தோதான வானூர்தி தொழிற்படுத்துநர் சான்றிதழொன்றை வைத்திருப்பவரும், அதற்கென ஆக்கப்படுகின்ற விதிகளின்மூலம் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுகின்றவறான அத்தகைய தகைமைகளை உடையவருமான எவரேனுமாள், வானூடு வேலையில் ஈடுபடுவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

இணைக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளும், நிபந்தனைகளும், வரையறைகளும்.

**82.** இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் வானூர்திச் சேவை உரிமம் அல்லது வெளிநாட்டு வானூர்திச்சேவை உரிமம் ஒன்று, வானூர்தி தொழிற்படுத்துநர், வர்த்தக வான்போக்குவரத்தில் எந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றாரோ அந்தச் செயற்பாடுகளின் தன்மையையும், நோக்கெல்லையையும் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அளிக்கப்படவுள்ள சேவைக்கு ஏற்புடைத்தற்பாலனவான சிறப்புரிமைகளையும், நிபந்தனைகளையும், வரையறைகளையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

வர்த்தக வான்போக்குவரத்துக்கான வானூர்திச் சேவை உரிமம்.

**83.** (1) இலங்கையிலுள்ள உள்நாட்டு அல்லது சர்வதேச வர்த்தக வான் போக்குவரத்துக்கான வானூர்திச் சேவை உரிமமொன்றை பெறுவதற்குப் பின்வருவோர் தகவுடையோராதல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையொருவர் ;

(ஆ) அதன் பிரதான தொழிலிடத்தை இலங்கையில் கொண்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் குழுவொன்று, இதில் பங்குமூலதனத்தின் ஆகக்குறைந்தது 51 சதவீதமாவது இலங்கைப் பிரசைகளினால் சொந்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(இ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படும் எவரேனுமாள் அல்லது ஆட்கள்குழு.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனுமாளினால் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேலும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும் தேவைப்பாடுகளுக்கு விண்ணப்பகாரர் இணங்கியொழுகியுள்ளாரெனத் திருப்திப்படுவதன்மேலும், அதிகாரசபையானது வானூர்திச் சேவை உரிமமொன்றை வழங்கலாம்.

(3) பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகின்றமையை எண்பிப்பதற்கு வானூர்திச் சேவை உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கின்ற ஆளொருவரினால் சமர்பிக்கப்படுவதற்கு அவசியமான தகவலை அதற்கென ஆக்கப்படும் விதிகளின் மூலம் அதிகாரசபை தீர்மானித்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரர் செல்லுபடியான வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்றை வைத்திருக்கின்றார் என்றும் ;

(ஆ) உத்தேச உள்நாட்டு வர்த்தக வான்போக்குவரத்துத் தொழிற்பாடுகள், சேவைகளைத் தொடங்குவதற்கு உத்தேசிக்கப்படுவதிலிருந்து மூன்றாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு உள்ளபடியான சொத்துக்களினாலும், வங்கி உத்தரவாதங்களினாலும் அல்லது வேறு பிணைப்பொறுப்பினாலும் நிதிசார் பிணைப்பொறுப்பளிக்கப்படுகின்றன என்றும் ;

(இ) 71 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும் வழிகாட்டு நெறிகள் மீது தீர்மானிக்கப்படுகின்றவாறான போதிய, செல்லுபடியான பொறுப்புக் காப்புறுதி மேவுகை, அதன் உத்தேசத் தொழிற்பாடுகளிலிருந்து எழக்கூடிய ஏதேனும் சேதத்துக்காக வைத்திருக்கப்படுகின்றது என்றும் ;

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, குடியியல் வான் செலவுடன், சட்டவிரோத

மாகத் தலையீடுதலுக்கெதிரான பாதுகாப்புக்காக 17ஆம் பிரிவின் கீழ், அதிகாரசபையினால் அமைத்துருவாக்கப்பட்ட வான்செலவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கிணங்க வரையப்பட்ட பயனுறு நிகழ்ச்சித்திட்டமொன்று வலுவில் உள்ளது என்றும் ; அத்துடன்

(உ) ஒழுங்குவிதிகளினாற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றுகின்றார் என்றும்.

வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமொன்றை வழங்குவதற்கான தகைமைகள்.

**84.** (1) வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநரொருவர் —

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்றைப் பெற்றிருந்தாலொழியவும் ;

(ஆ) அதன் தொழிற்பாடுகளிலிருந்து எழக்கூடிய பொறுப்பை மேவுவதற்கு, 80 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வழிகாட்டு நெறிகளின்மீது தீர்மானிக்கப்பட்டவாறு போதிய, செல்லுபடியான காப்புறுதி மேவுகையைக் கொண்டிருந்தாலொழியும் ; அத்துடன்

(இ) குடியியல் வான்செலவுடனான சட்ட விரோதமான தலையீட்டுக்கெதிரான பாதுகாப்புக்காக, 17 ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட வான்செலவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கிணங்கத் தயாரிக்கப்படும் பயனுள்ள நிகழ்ச்சித் திட்டமொன்றை வலுவில் வைத்திருந்தாலொழியவும்.

அத்தகைய வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநருக்கு வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமொன்று வழங்கப்படுதலாகாது.

(2) அதிகாரசபையானது, வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநரொருவரினால் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும், அத்தகைய விண்ணப்பகாரர் —

(அ) (1) ஆம் உட்பிரிவினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் ; அத்துடன்

(ஆ) இலங்கைக்கும் விண்ணப்பகாரரின் அரசினது முறையான வான்வழி அதிகாரசபைக்குமிடையே செய்துகொள்ளப்படும் வான் சேவை உடன்படிக்கையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வெறெவையேனும் தேவைப்பாடுகளுக்கும்,

இணங்கியொழுகியுள்ளார் எனத் திருப்திப்படுவதன்மீதும், வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமொன்றை வழங்கலாம்.

*இச்சட்டத்தின் 81 ஆம், 83 ஆம் அல்லது 84 ஆம் பிரிவுகளின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றை திருத்துவதற்கான தத்துவம்.*

**85.** (1) தோதானவிடத்து, அதிகாரசபையானது, இச்சட்டத்தின் 81ஆம், 83 ஆம் அல்லது 84 ஆம் பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் விடயத்துக்கேற்ப, வானூர்திச் சேவை உரிமமொன்றை, வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமொன்றை அல்லது வானூர்தி வேலை உரிமமொன்றை வைத்திருப்பவரினால் அதற்கென விடுக்கப்படும் வேண்டுகோளின்பேரிலும், விதித்துரைக்கப்படும் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மீதும், அத்தகைய உரிமத்தைத் திருத்தலாம்.

(2) அதிகாரசபையானது, எந்நேரத்திலும் அதன் தற்றுணிபின்படி, தேசிய பாதுகாப்பின் அல்லது வான்கலமோட்டற் காப்பின் நலன்கருதி, அல்லது நியாயமான போட்டியை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அவசியமானதென அது கருதுகின்றவிடத்து, இச்சட்டத்தின் 81 ஆம், 83 ஆம் அல்லது 84 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும், விடயத்துக்கேற்ப, வானூர்திச்சேவை உரிமமொன்றை, வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமொன்றை அல்லது வானூடு வேலை உரிமமொன்றை, அத்தகைய உரிமத்துக்கு எவையேனும் மேலதிக நிபந்தனைகளை அல்லது வரையறைகளைச் சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

*81 ஆம், 83 ஆம் அல்லது 84 ஆம் பிரிவுகளின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றை இடை நிறுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான தத்துவம்.*

**86.** அதிகாரசபையானது, எந்நேரத்திலும் பின்வரும் ஏதுக்களுள் ஏதேனுமொன்றின்மீது அல்லது அவற்றுள் பலவற்றின் மீது, இச்சட்டத்தின் 81 ஆம், 83 ஆம் அல்லது 84 பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் வானூர்திச் சேவை உரிமமொன்றை, வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமமொன்றை அல்லது வானூடுவேலை உரிமமொன்றை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் —

(அ) உரிமமானது எந்நிபந்தனைகளின்கீழ் வழங்கப்பட்டதோ அந்நிபந்தனைகள் மாறியுள்ளவிடத்து ;

(ஆ) உரிமம் வைத்திருப்பவர் அல்லது உரிமம் வைத்திருப் பவரினால் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் வானூர்தி, இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடு களுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு, அல்லது உரிமத்தின் ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந் தனைக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து ;

(இ) உரிமம் வைத்திருப்பவர், இயைபான உடன்படிக்கை யின் அல்லது ஒழுங்கேற்பாட் டின் ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இசைய அல்லது இணங்கி யொழுகத் தவறுமிடத்து ;

(ஈ) வெளிநாட்டு வானூர்திச் சேவை உரிமத்தை வைத் திருப்பவரொருவரின் விடயத்தில், அவ்வாறு வைத்திருப்பவர் இச்சட்டத்தின் 70 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட வெளிநாட்டு வானூர்திச் சேவை தொழிற்படுத்துநர் சான்றிதழ் இல்லதொழிக்கப்படு மிடத்து ;

(உ) அத்தகைய உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதொழித்தல் சர்வதேச வான் போக்குவரத்துச் சேவைகளில் நியாயமான போட்டியைப் பேணிக் காக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்துக்காக அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதென அமைச்சர் அபிப்பிராயப்படுகின்றமையினால் அதிகாரசபையானது அவ்வாறு செய்யும்படி பணிக் கப்படுமிடத்து.

கட்டணங்களும் இறுப்புகளும்.

**87.** (1) வானூர்திச்சேவை உரிமமொன்றை அல்லது வெளிநாட்டு வானூர்திச்சேவை உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொரு வரும் வர்த்தக வான் போக்குவரத்துக்காக அவர்கள் விதிப்பதற்கு உத்தேசிக்கும் கட்டணங்களையும் இறுப்புக்களையும், விதித்துரைக் கப்படவேண்டியவாறான அத்தகைய முறையில் அதிகார சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதிகாரசபையானது, உத்தேசிக்கப்பட்ட வான் சேவைக்கு ஏற்புடைத்தற்பாலனவான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு உரிய கவனஞ் செலுத்தி, அத்த கைய கட்டணங்களும் இறுப்புக்களும் பின்வரும் அம்சங்களுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பில் நியாயமற்ற போட்டி நடத்தையை விளைவிக்குமென அது திருப்திப்படு

மிடத்து, ஒன்றில் அத்தகைய கட்டணங்களையும் இறப்புக்களையும் அங்கீகரிப்பதற்கான அல்லது அதற்கு அங்கீகாரம் மறுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டு மொத்தத்தில் கட்டணங்களும் இறுப்புக்களும் எந்த மார்க்கங்கள் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கான ஆகுசெலவுகளை மேவுவதற்குப் போதாமல் உள்ளனவோ அந்த மார்க்கங்களின்மீது அத்தகைய கட்டணங்களையும் இறுப்புக்களையும் இறுத்தல் ;

(ஆ) சேவையில் மிதமிஞ்சிய கொள்ளளவை அல்லது அடிக்கடியான தன்மையைக் கூட்டுதல் ;

(இ) சம்பந்தப்பபடட வழக்கங்கள் தற்காலிகமானவையாக வில்லாமல் நிலையுறுதியானவையாகவிருத்தல் ;

(ஈ) சம்பந்தப்பட்ட வழக்கங்கள் இன்னுமொரு வான்சேவையின்மீது பொருளாதார தாக்கத்தைக் கொண்டிருத்தல் அல்லது அதற்குப் பொருளளவினதான பொருளாதாரச் சேதத்தை விளைவித்தல் ;

(உ) சம்பந்தப்பட்ட வழக்கங்கள், சந்தையிலிருந்து இன்னுமொரு வான்சேவையை முடக்கும், தவிர்க்கும் அல்லது விரட்டிவிடும் வெளிப்படையான உட்கருத்தைப் பிரதிபலித்தல் அல்லது முடக்கக்கூடிய, தவிர்க்கக்கூடிய அல்லது விரட்டிவிடக்கூடிய பயனைக் கொண்டிருத்தல் ; அல்லது

(ஊ) ஒரு மார்க்கத்தில் மேலாதிக்கநிலையைத் துஷ்பிரயோகம் செய்தல்.

(2) அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படும் கட்டணங்களுடனும் இறுப்புக்களுடனும் இணைந்தொழுகவிராத கட்டணங்களையும் இறுப்புக்களையும் விதிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுதவன்மேல், பத்தாயிரம் வி. மீ. உரிமைகளின் இலங்கை ரூபாக்களுக்குச் சமமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்

பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் ஒன்றின்மீது மட்டுமே பேணுகைச் சேவைகள் வழங்கப்படல் வேண்டும்.

***88.*** *(1)* வெளிநாட்டு வானூர்திச்சேவை உரிமம் வைத்திருப்பவரெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி வேறேதேனும் வானூர்திச் சேவைக்கும் பேணுதற் சேவைகளை வழங்குதலாகாது.

*(2)* ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரம், விதித்துரைக்கப்படும் கட்டணத்துடன் சேர்த்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது பெறப்படுதல் வேண்டும்.

*(3)* பணிப்பாளர் தலைமையதிபதி, வானூர்திச் சேவைகளுக்கான பேணுதற் சேவைகளை வழங்குவதற்கு விண்ணப்பகாரருக்கு உள்ள தொழிற்னுட்பத் திறமை பற்றியும் ஆற்றல் பற்றியும் திருப்திப்படுவதன்மேல், ஓர் அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய, அவ்வனுமதிப்பத்திரத்தை வழங்கலாம்.

*(4)* இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று, வழங்கற்றேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டுமென்பதுடன் அக்காலமுடிவில் அதன் சார்பில் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும் விதித்துரைக்கப்படும் புதுப்பித்தற் கட்டணத்தைச் செலுத்துவதன்மீதும், புதுப்பிக்கவும்படலாம்.

கணனி ஒதுக்குகை முறைமை.

***89.*** *(1)* ஆளெவரும், அத்தகைய நோக்கத்துக்காக அதிகாரசபையினால் வழங்கப்படும் ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றியும், விதிக்கப்படக்கூடிய அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமையவன்றியும், அத்துடன் விதித்துரைக்கப்படும் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மீதன்றியும், வான் போக்குவரத்துத் தொடர்பான கணனி ஒதுக்குகை முறைமையொன்றைத் தாபித்தலோ அல்லது தொழிற்படுத்துதலோ ஆகாது.

*(2)* அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் கணணி ஒதுக்குகை முறைமைகள் விற்பனையாளர்களுக்கும், அத்தகைய எல்லா விற்பனையாளர்

களுக்கும் பயன்படுத்துநருக்கும் நியாயமான, ஒப்புரவான வாய்ப்பு அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில், கணனி ஒதுக்குகை முறைமைகளைத் தொழிற்படுத்துதல் தொடர்பாகப் பணிப்புக்களையும், அறிவுறுத்தல்களையும், நடவடிக்கை முறைகளையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று, அது வழங்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும், விதித்துரைக்கப்படும் புதுப்பித்தற் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன் மேலும், அக்காலப்பகுதியின் முடிவில் புதுப்பிக்கவும் படலாம்.

(4) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்படும் ஏதேனும் நியதி அல்லது நிபந்தனை மீறப்பட்டமைக்காக, விடயத்துக்கேற்ப இடை நிறுத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

*அட்டவணைப்படுத்தப்படாத சர்வதேச வான் போக்குவரத்து.*

**90.** (1) அட்டவணைப்படுத்தப்படாத சர்வதேச வான் போக்குவரத்து —

(அ) பொதுமக்கள் நலனையும், குறிப்பாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கான நன்மைகளையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பறப்பின் தொடக்க, சேரிடப் புள்ளிகளுக்கிடையே, அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேக வான் போக்குவரத்தின் மீது அதிகாரவளிப்பானது கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் பாதகமான தாக்கத்தையும்,

கருத்திற்கொண்டு, விதித்துரைக்கப்படும் முறையில் தொழிற்படுத்துநரொருவரினால் அதற்கெனச் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பத்தின்மேல் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதன்மூலம் அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன், அது

வழங்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டுகாலப் பகுதிக்குச் செல்லுபடியுள்ளதாதலும் வேண்டும். அதிகாரசபையானது, அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும் விதித்துரைக்கப்படும் புதுப்பித்தற் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மீதும் அனுமதிப்பத்திரமொன்றைப் புதுப்பிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று, அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியமைக்காக, விடயத்திற்கேற்ப, இடைநிறுத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

*வானூர்திப் பயணிகளையும் வானூர்திகளை பயன்படுத்துவோரையும் பாதுகாத்தல்.*

**91.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் எவையேனும் உரிமங்களை அல்லது அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர் எவருக்கும் அல்லது ஏதேனும் வகுதியினரான வைத்திருப்போருக்கும் அதிகாரசபையானது வானூர்திப் பயணிகளினதும் வானூர்திகளைப் பயன்படுத்தும் ஏனையோரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, பயணிகளையும், பயணப்பொதிகளையும், சரக்கையும், தபாலையும் ஏற்றிச் செல்லல் பற்றிய நிபந்தனைகள் தொடர்பாகவும், மறுக்கப்பட்ட வானூர்திப் பயணம் மற்றும் வேறு பிரச்சினைகளுக்கான பொறுப்பைக் கையாளுதல் தொடர்பாகவும், பணிப்புகளை, அறிவுறுத்தல்களை அல்லது நடவடிக்கை முறைகளை வழங்கலாம்.

(2) ஏதேனும் பணிப்பு, அறிவுறுத்தல் அல்லது நடவடிக்கை முறை எவ்வாட்கள் தொடர்பில் வழங்கப்படுகின்றதோ அவ்வாட்கள் எல்லோரும் அதனோடு கண்டிப்பாக இணங்கியொழுகுதல் அவர்களது கடமையாதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு இணங்கியொழுகத் தவறுதல் எதுவும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றாதலும் வேண்டும்.

*பறத்தல் அட்டவணைகள்.*

**92.** வானூர்திச் சேவை உரிமமொன்றை அல்லது வெளிநாட்டு வானூர்திச்சேவை உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், விதித்துரைக்கப்பட்ட முறையில் அதிகாரசபையின் அங்கீகாரத்துக்காக, விடயத்துக்கேற்ப, இலங்கையினுள் அதன் தொழிற்பாடுகள் தொடர்பிலான அல்லது இலங்கையை வந்தடைகின்றமைக்கான அல்லது இலங்கையிலிருந்து புறப்படுகின்றமைக்கான உத்தேசப் பறத்தல் அட்டவணைகளை

அதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். வான்நடமாட்டம் சாரா நோக்கங்களுக்காக இலங்கைக்கு வருகின்ற ஒரு வானூர்தியின் விடயத்தில், அல்லது மேலாகப் பறத்தல் விடயத்தில் இயைபான தகவல், அதிகாரசபையினால் விதித்துரைக்கப்படும் முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.

செல் கட்டங்களைக் குறித் தொதுக்குதல்.

**93**. வான் நடமாட்டத்தின் ஒழுங்கான ஓட்டத்தை உறுதிப் படுத்துவதற்கு அதிகாரசபையானது, வானூர்தித் தொழிற் படுத்துநர்களுக்குச் செல்கட்டங்களைக் குறித்தொதுக்குவதற்கான பணிப்புகளை, அறிவுறுத்தல்களை அல்லது நடவடிக்கை முறைகளை வழங்கலாம். பணிப்புகளை, அறிவுறுத்தல்களை அல்லது நடவடிக்கை முறைகளை வழங்குவதில், அட்ட வணைப்படுத்தப் பட்ட சர்வதேச வான் சேவைகளுக்கு முந்துரிமை கொடுக்கப்பட லாம். அதிகாரசபையானது, எல்லா வேண்டுகோள்களினதும் ஓரங்காட்டாக் கவனத்துக்கெடுத்தலை உறுதிப்படுத்துதல் வேண் டும் ;

வான் போக்கு வரத்துச்சேவை உரிமம்.

**94**. (1) அதிகாரசபையினால் அதற்கென வழங்கப்படும் வான் போக்குவரத்துச் சேவை உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி அல்லது அவ்வுரிமத்தின் நியதி, நிபந்தனைகளுக்கு இணங்க வல்லாது வேறுவகையாக, ஆளெவரும், இலங்கையில் வான் போக்குவரத்து என்ற தொழிலைக்கொண்டு நடாத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றைப் பெறவிரும்பு கின்ற எவரேனுமாள், விதித்துரைக்கப்படும் கட்டணத்துடன் சேர்த்து அதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன், அதிகாரசபையானது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் குறித் துரைக்கப்படும் தேவைப்பாடுகளுக்கு விண்ணப்பகாரர் இணங்கி யுள்ளாரென அது திருப்திப்படுமிடத்து, அத்தகைய ஆளுக்கு உரிமமொன்றையும் வழங்கலாம்.

(3) இப்பிரிவின் கீழான உரிமமொன்றை வழங்குவதற்காகத் திருப்திசெய்யப்படவேண்டிய தேவைப்பாடுகள் பின்வருவன வாதல் வேண்டும் :—

(அ) போதிய உள்ளகக்கட்டமைப்பு வசதிகளும் பணியாட் டொகுதித் தேவைப்பாடுகளும் ;

(ஆ) வான் போக்குவரத்துத் தொடர்பான தொழிற்செயற் பாடுகள் தொடர்பில் உள்ளபடியான மற்றும் நிகழக் கூடிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசிய மான நிதிசார் ஒழுங்கேற்பாடுகள் ; அத்துடன்

(இ) வாடிக்கையாளர்களுக்கான நிதிசார் பொறுப்புகளை மேவுவதற்கு அவசியமான வங்கி உத்தரவாதங்கள் அல்லது வேறு பிணைப்பொறுப்பு.

(4) மூன்றாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பிக்கின்ற வானூர்தியொன்றின் தொழிற்படுத்துநர், அப்பந்தியின்கீழ் விதித்துரைக்கப்பட்டவாறு வங்கி உத்தரவாத மொன்றை அல்லது வேறு பிணைப்பொறுப்பைக் கொடுத்துத வுதற்குத் தேவைப்படுத்தப்படலாகாது.

**95.** (1) விடயத்துக்கேற்ப 89, 90 அல்லது 94 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரும், அதிகார சபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், கொடுத்து தவப்படுமாறு அதிகாரசபையினால் காலத்துக்குக்காலம் தேவைப் படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய விபரத்திரட்டுகளை அல் லது தகவலை அதிகாரசபைக்குக் கொடுத்துதவுதலும் வேண் டும்.

*89 ஆம், 90 ஆம் அல்லது 94 ஆம் பிரிவுகளின்கீழ் உரிமங்கள் வழங்கப் பட்டுள்ள ஆள் குறித்தசில பதிவேடுகளைப் பேணுதலும் தகவலைக் கொடுத்துவு தலும்.*

(2) அத்தகைய உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் -

(அ) உரிமமானது அல்லது அனுமதிப்பத்திரமானது எந்தத் தொழில் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்தத் தொழிலைக் கொண்டுநடத்தாதொழிந் துள்ளாரென ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல்லது எவையேனும் விதிகளுக்கு முரணாக உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ளாரென ;

(இ) உரிமத்தை வைத்திருப்பவர் அல்லது அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர் ஒரு கம்பெனியாக இருக்கு மிடத்து, ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற கம்பெனி யின் தொழிலுடன் சம்பந்தப்படும் தவறொன்றுக்கு அதன் பிரதான அலுவலர்களுள் எவரும் அல்லது எல்லோரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்களென;

(ஈ) அத்தகைய உரிமத்தில் அல்லது அனுமதிப்பத் திரத்தின் வழங்குகைக்காக குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாதொழிந் துள்ளாரென ; அல்லது

(உ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுள் எவற்றை யும் அல்லது இப்பாகத்தின்கீழ் ஆக்கப்படும் எவை யேனும் ஒழுங்குவிதிகளை அல்லது விதிகளை மீறியுள்ளாரென,

அதிகாரசபை திருப்திப்படுமிடத்து, 89 ஆம், 90 ஆம் அல்லது 94 ஆம் உட்பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை அல் லது அதிகாரப்பத்திரமொன்றை அதிகாரசபையானது இல்லா தொழிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றின் அல்லது அனுமதிப்பத்திரமொன்றின் இல்லாதொழிப்பு எதுவும், விடயத்துக்கேற்ப, உரிமமானது, அல்லது அனுமதிப்பத்திரமான ஏன் இல்லாதொழிக்கப்படலாகாதென அறிவித்தலில் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டும்படி அத்தகைய அறிவித்தலில் வழங்கப்பட்ட பின்னரன்றி, எவரேனுமாளுக்கெதிராகச் செய்யப்படுதலாகாது.

(4) அதிகாரசபையானது அல்லது அதிகாரசபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் —

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப் படும் எவையேனும் ஒழுங்குவிதிகள் அல்லது விதிகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயிக் கும் நோக்கத்துக்காக, அதிகாரசபையினால் வழங்கப் பட்ட உரிமத்தினது அல்லது அனுமதிப்பத்திரத்தினது அதிகாரத்தின்கீழ் விடயத்திற்கேற்ப, உரிமம் அல்லது

அனுமதிப்பத்திரம் எந்தத் தொழில் தொடர்பில் வழங்கப்படுகின்றதோ அந்தத் தொழில் கொண்டுநடாத்தப்படுகின்ற வளவுகளினுள் பகலில் அல்லது இரவில் நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசித்து அவ்வளவுகளைச் சோதனையிடலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய தொழில் தொடர்பில் வைத்திருக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளினால் அல்லது விதிகளினால் தேவைப்படுத்தப்படும் எவையேனும் பதிவேடுகளையும் அல்லது விபரத்திரட்டுகளையும் அத்தகைய தொழில் தொடர்பான வேறெவையேனும் பதிவேடுகளையும் சோதனையிட்டு அவற்றின் பிரதிகளை எடுக்கலாம்.

(5) இச்சட்டத்தின் இப்பாகத்தின் எவையேனும் எற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது விதிகள் விடயத்திற்கேற்ப, 89 ஆம், 90 ஆம் அல்லது 94 ஆம் பிரிவுகளின்கீழ் எந்த ஆளுக்கு உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆளினால் மீறப்படுகின்றனவென நம்புவதற்கு அதிகாரசபைக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அதிகாரசபையானது, நீதிவானொருவரின் கைப்பட்ட ஆணைப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர், அத்தகைய ஆணைப்பத்திரத்திற் குறித்துரைக்கப்படும் எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைச் சோதனையிடலாமென்பதுடன், அத்தகைய தவறைப் புரிவது சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் எவையேனும் சீட்டுகளை, கையிருப்புகளை அல்லது வேறு ஆவணங்களை கட்டுக்காப்பினுள்ளும் எடுக்கலாம்.

வானூர்திச் சேவைகளுக்கு பணிப்புகள் வழங்குவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.

**96**. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சுகாதார, உடனலக் கருமங்கள் குறித்து அல்லது தேசிய அக்கறை, நலன் அல்லது முக்கியத்துவம் என்பனபற்றிய வேறேதேனும் கருமத்தின்மீது, விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளை வானூர்திச் சேவைகளுக்கு வழங்குவது விலங்குகள் பறவைகள் உட்பட ஆட்களினதும், ஆதனத்தினதும், சூழலினதும் பொதுவான சுகாதாரத்தையும் சேமநலத்தையும் பாதுகாப்பதற்கு அவசியமாகவுள்ளதென அவர் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய பணிப்புகளை வழங்குவதற்கு அவர் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகாமை, இச்சட்டத்தின்கீழான தவறொன்றாதல் வேண்டும்.

## அத்தியாயம் X

### தவறுகளும் தண்டங்களும்

*தகவலைக் கொடுத்துதவத் தவறுதல்.*

**97.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின்கீழ் அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்படும் எழுத்திலான வேண்டுகோளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது ஏதேனும் பொய்யான தகவலை அல்லது விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் வி.மீ. உரிமைகளின் இலங்கை ரூபாக்களுக்குச் சமமானதை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*வானூர்தி ஒன்றைக் கைப்பற்றுதல்.*

**98.** (1) இச்சட்டத்தின்கீழ் எந்த வானூர்தி தொடர்பில் ஏதேனும் இறுப்பனவு அல்லது தண்டம் செலுத்தப்படற்பாலதோ அந்த வானூர்தியின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர், கோரப்பட்டதன்மேல் அதனை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைச் செலுத்துவதற்கு மறுக்குமிடத்து அல்லது அசட்டை செய்யுமிடத்து, அதிகாரசபையானது வேறேதேனும் சட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் வேறேதேனும் பரிகாரத்துக்கும் பங்கமின்றி, அத்தகைய வானூர்தியைக் கைப்பற்றலாம் என்பதுடன், வருமதியாகவுள்ள தொகை முழுமையாகச் செலுத்தப்படும்வரை அதனைத் தடுத்தும்வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வானூர்தியொன்றைக் கைப்பற்றுவதற்கான அல்லது தடுத்து வைப்பதற்கான செலவுத்தொகை, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு வானூர்தியின் சொந்தக்காரரினால், அல்லது தொழிற்படுத்துநரினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பதினான்கு நாட்களி

னுள் செலுத்தப்படாவிடின், அதிகாரசபையானது, வருமதியாக வுள்ள மொத்தத் தொகையை அறவிடுவதற்காக அத்தகைய வானூர்தியை விற்பனை செய்விக்கலாம். எஞ்சியுள்ள ஏதேனும் மேன்மிகை விடயத்துக்கேற்ப, வானூர்தியின் சொந்தக்காரருக்கு, தொழிற்படுத்துநருக்கு அல்லது ஏவுகின்ற விமானமோட்டிக்கு கோரிக்கையின்மேல் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கொடுப்பனவுக்கான கோரிக்கையெதுவும் இரண்டாண்டுகாலப் பகுதியொன்றுக்குச் செய்யப்படாதவிடத்து, மேன்மிகையாக எஞ்சியுள்ள தொகை அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

*காப்பு அல்லது பாதுகாப்புத் தேவைப் பாடுகளை மீறுதல் தவறொன்றாதல்.*

**99.** *(1)* வான்வழிச் சேவைகளை வழங்குவதில் அல்லது வானூர்தியொன்றைத் தொழிற்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஆளொவ்வொருவரும் விதித்துரைக்கப்படவேண்டியனவான அத்தகைய வான்வழிச் சேவையை அல்லது வானூர்தியொன்றின் தொழிற்பாட்டை வழங்குதல் தொடர்பாகத் தற்போது ஏற்புடைத் தற்பாலனவான காப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படும் காப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுமாறு தேவைப் படுத்தப்படும் ஆளொருவர், அவ்வாறு இசைந்தொழுகுவதற்குத் தவறுமிடத்து, விதித்துரைக்கப்பட்டவாறான தண்டமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் ; ஆயின், அத்தகைய தண்டம், ஆயிரம் வி.மீ. உரிமைகளின் இலங்கை ரூபாக்களுக்குச் சமமான பணத்தொகையொன்றை விஞ்சாததாக இருத்தல் வேண்டும். ஒருதடவை தண்டமளிக்கப்பட்ட ஆளொருவர், *(1)* ஆம் உட்பிரி வின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்குத் தொடர்ந்து இசைந்தொழுக மறுக்குமிடத்து, அத்தகைய ஆள், முன்னைய தடவையில் தண்டமாக விதிக்கப்பட்ட தொகையின் இரட்டித்த தொகையைக் கொண்ட பணத்தொகையொன்றிலான மேலதிகத் தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

*(3)* பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழ் விதிக்கப் படும் எல்லாத் தண்டங்களையும் சேகரிப்பதற்குப் பொறுப்பான வராதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு சேகரிக்கப்படும் பணங்கள், இச்சட்டத்தின் 108 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்படும்

குடியியல் வான்செலவு அபிவிருத்தி நிதியத்துக்கு வரவுவைக்கப் படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் தண்டமொன்றை விதித்தலானது, அத்தகைய தண்டம் எவ்வாளின்மீது விதிக்கப்பட்டதோ அவ்வாளினால் மீறப்பட்டுக் கொண்டிருந்த காப்பு அத்துடன் பாதுகாப்பு வழிமுறைகளுடன் உரியமுறையில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கென, அவசியமானவையென அல்லது தோதானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய நிருவாக வழிமுறைகளை எடுப்பதிலிருந்து, விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது அதிகாரசபையைத் தடைசெய்தலாகாது.

**100.** (அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்கு விதியை அல்லது விதியை மீறுகின்றவரான அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரான ; தவறுகள்.

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அல்லது விதிகளின்கீழ் ஏதேனும் செயற்படுத்துகின்ற நியமத்துக்கு, பணிப்புரைக்கு, பணிப்புக்கு, நடவடிக்கை முறைக்கு அல்லது அறிவுறுத்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரான ;

(இ) இச்சட்டத்தின்கீழான அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான, கட்டளையின் கீழான, விதியின்கீழான, நியமத்தின் கீழான அல்லது நடவடிக்கைமுறையின்கீழான தமது தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதில் எவரேனுமாளுக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான அல்லது அவரைத் தடங்கல் செய்கின்றவரான,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்

மேல் இருபத்தையாயிரம் வி.மீ. உரிமைகளின் இலங்கை ரூபாக்களில் சமமானதை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண் டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*தண்டங்கள்.*

**101.** இச்சட்டத்தின்கீழான எந்தத் தவறுக்கு இச்சட்டத்தினால் தண்டமெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில் லையோ அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனு மாள், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம். வி.மீ. உரிமைகளின் இலங்கை ரூபாவில் சமமானதை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு, அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத் துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

*ஓர் ஆட்கள் குழுவினாற் புரியப்படும் தவறு.*

**102.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றி னாற் புரியப்படுமிடத்து, அப்போது -

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாகவிருப்பின், தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளரொருவராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது இதே போன்ற வேறு அலுவலராக இருந்த ஆளொவ் வொருவரும் ; அல்லது

(ஆ) அக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இராதிருப்பின், தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக்குழு வின் தலைவராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது இதேபோன்ற வேறு அலுவலராக இருந்த ஆளொவ்வொருவரும்,

அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்று அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப் படுதல் வேண்டும்.

ஆவணங்களின் எண்பிப்பு.

**103.** (1) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியினால் அல்லது ஒழுங்குவிதியின்கீழ் அல்லது விதியினால் அல்லது விதியின் கீழ் அல்லது எவையேனும் செயற்படுகின்ற நியமங்களினால் அல்லது நியமங்களின்கீழ் அமைச்சரினால், அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்படும் அல்லது வழங்கப்படும் கட்டளையொன்றாக அல்லது வேறு சாதனமாகக்கொள்ளப்படுகின்றதும், அவர்களினால் அல்லது அவர்கள் சார்பில் கையொப்பமிடப்படுவதுமான ஒவ்வோர் ஆவணமும் சான்றில் பெறப்படுதல் வேண்டுமென்பதுடன், முரணாக எண்பிக்கப்படும்வரை, விடயத்துக்கேற்ப, அமைச்சரினால், அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் சாதனமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய ஏதேனும் சாதனம் பற்றிய சான்று, எவையேனும் சட்ட நடவடிக்கைகளில், விடயத்துக்கேற்ப, அமைச்சரினால், அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர்களின் சார்பில் சாதனத்தின் உண்மையான பிரதியென அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற ஆவணமொன்றைக் காண்பிப்பதன்மூலம் அளிக்கப்படலாம்.

தவறுகள் பிடியாணை யின்றிக் கைதுசெய்யத் தக்கனவான தவறுகளாக விருத்தலும், தவறுகளுக்கான வழக்கு எந்நீதி மன்றத்தில் கோப்பிடப் படலாமென் பதுவும்.

**104.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக இருத்தல் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடனன்றி, நீதிமன்றமெதுவும், இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழான ஏதேனும் தவறை நீதிநெறி கவனத்துக்கெடுத்தலாகாது.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், இச்சட்டத்தின்கீழ்

புரியப்படும் ஏதேனும் தவறு தொடர்பிலான வழக் கொன்று, சட்டத்துறைத் தலைமையதிபதியின் தீர்மானத்தின் மேல், விடயத்துக்கேற்ப, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அல்லது குற்றப்பத்திரமொன்றின்மேல், கொழும்பு நீதிநிருவாக வலயத்தில் நடாத்தப்படும் இலங்கைக் குடியரசின் மேல் நீதி மன்றத்தில் கோப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் அத்தவறைப் புரிந்தமைக்காக, நீதிமன்றமானது, இச்சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான தண்டனையை விதித்தலும் வேண்டும்.

*அத்து மீறுகையும், தொல்லையும் சேதத்துக்கான பொறுப்பும்.*

**105.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளும் அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளும், விதிகளும் அல்லது செயற் படுத்துகின்ற நியமங்களும் பணிப்புரைகளும், பணிப்புகளும் அல்லது நடவடிக்கைமுறைகளும் உரியமுறையில் இணங்கி யொழுகப்படும்வரை, காற்று, காலநிலை மற்றும் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்ட பின்னர், நிலத்திற்கு மேலான ஓர் உயரத்தில் ஏதேனும் ஆதனத்தின் மேலாக வானூர்தியொன்று பறப்பதன் காரணமாக மட்டும் அல்லது வானூர்தி பறத்தலின் ஏதேனும் சாதாரணச் சம்பவங்கள் காரணமாக மட்டும், நியாயமாகவுள்ள அத்துமீறு கைக்காக அல்லது தொல்லைக்காக வானூர்திச் சொந்தக்கார ரொருவருக்கெதிராக வழக்கு நடவடிக்கையெதுவும் அமைவதாத லாகாது.

(2) பறப்பிலுள்ள வானூர்தியொன்றின்மூலம், வானேறுகின் றமைமூலம் அல்லது தரையிறங்குகின்றமைமூலம், அல்லது அத்தகைய ஏதேனும் வானூர்தியிலுள்ள எவரேனுமாளினால் அல்லது அத்தகைய ஏதேனும் வானூர்தியிலிருந்து பொரு ளொன்று அல்லது ஆளொருவர் விழுகின்றமையினால் தரை யிலுள்ள அல்லது நீரிலுள்ள எவரேனுமாளுக்கு அல்லது ஆதனத் துக்குப் பெருமளவினதான சேதம் அல்லது இழப்பு விளைவிக் கப்படுமிடத்து, அச்சேதமானது அல்லது இழப்பானது எந்த ஆளினால் உறப்பட்டதோ அந்த ஆளின் அசட்டையினால் விளை விக்கப்பட்டுள்ளவிடத்து, உதவப்பட்டுள்ளவிடத்துத்தவிர, வானூர்திச் சொந்தக்காரரின் வேண்டுமென்ற செயல், அசட்டை அல்லது தவறுகையினால் அது விளைவிக்கப்பட்டிருந்தாற் போன்று, அசட்டை அல்லது உட்கருத்து அல்லது வேறு வழக்குக் காரணத்துக்கான எண்பிப்பின்றி, அத்தகைய சேதம் அல்லது

இழப்புத் தொடர்பில் அவரிடமிருந்து சேதவீடுகள் அறவிடப் படற்பாலனவாதல் வேண்டும்.

ஆயின், பின்வரும் சூழ்நிலைகளில், அதாவது —

(அ) வானூர்திச் சொந்தக்காரரல்லாத வேறு எவரேனுமாள் இலங்கையில் வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின்கீழ் அத்தகைய சேதம் அல்லது இழப்புத் தொடர்பில் சேதவீடுகளைச் செலுத்துவதற்கு ஆளாகின்ற ; அத்துடன்

(ஆ) அத்தகைய சேதவீடுகள் இப்பிரிவின் ஏற்பாடுகளின் பயனை மட்டுமே கொண்டு வானூர்திச் சொந்தக் காரரிடமிருந்து அறவிடப்படற்பாலனவாகவுள்ள மற்றும் அறவிடப்படுகின்ற,

சூழ்நிலைகளில் மேற்கூறப்பட்டவாறாகப் பெருமளவினதான சேதம் அல்லது இழப்பு விளைவிக்கப்படுமிடத்து, சொந்தக்காரரிடமிருந்து அவ்வாறு அறவிடப்படும் சேதவீடுகள் தொடர்பில் அந்த மற்றைய ஆளினால் நட்டோத்தரவாதம் அளிக்கப்படுவதற்குச் சொந்தக்காரர் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஏதேனும் வானூர்தி, பதினான்கு நாட்களை விஞ்சுகின்ற ஒரு காலப்பகுதிக்கு அதன் சொந்தக்காரரினால் வேறெவரேனுமாளுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளவிடத்தும், அல்லது கேள்வுக்குவிடப்பட்டுள்ளவிடத்தும், வானூர்தியின் ஏவுகின்ற விமான மோட்டி, வான்கலமோட்டுநர் அல்லது இயக்குதொகுதியினரின் தொழிற்பாட்டு உறுப்பினர் எவரும் சொந்தக்காரரின் ஊழியத்தில் இராதவிடத்தும், “சொந்தகாரருக்கான” குறிப்பீடு வானூர்தி எவ்வாளுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதோ அல்லது கேள்வுக்கு விடப்பட்டுள்ளதோ அவ்வாளுக்கான ஒரு குறிப்பீடு என்றாற் போன்று இப்பிரிவு வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XI

### பொது

**106.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளில் அல்லது விதிகளில் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் அல்லது வழங்கப்படும் ஏதேனும் உரிமத்தில், சான்றிதழில், அனுமதிப்பத்திரத்தில், அதிகார வளிப்பில் அல்லது அங்கீகாரத்தில் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகளில் முரணாக அடங்கியுள்ளது எது எவ்வாறிருப் பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, தேசிய வான்செலவுப் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள இலங்கையில் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட அரசாங்க முகவரத்துவம்என்ற அவரது தன்மையில், விடயத்திற்கேற்ப, அத்தகைய உரிமத்தை, சான்றிதழை, அனு மதிப்பதிரத்தை, அதிகாரவளிப்பை அல்லது அங்கீகாரத்தை வைத்திருப்பவர் இலங்கையின் தேசிய பந்தோபஸ்துக்கு அல்லது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்துகின்றா ரென நம்புவதற்கு அவருக்குப் போதிய காரணம் உள்ளவிடத்து அல்லது அத்தகைய உரிமத்தை, சான்றிதழை, அனுமதிப் பத்திரத்தை, அதிகாரவளிப்பை அல்லது அங்கீகாரத்தை வைத் திருப்பவர், இலங்கையின் தேசிய பந்தோபஸ்பத்துக்கு அல்லது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்தும் சாத்தியங்கொண்டவரெனச் சந்தேகிப்பதற்கு அவருக்குப் போதிய காரணம் உள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, அது அவரினால் அளிக்கப்பட்டதாக அல்லது வழங்கப்பட்டதாக இருப்பினுஞ்சரி, அதிகாரசபையினால் அளிக்கப்பட்டதாக அல்லது வழங்கப்பட் டதாக இருப்பினுஞ்சரி, அத்தகைய ஏதேனும் உரிமத்தை, சான் றிதழை, அனுமதிப்பத்திரத்தை, அதிகாரவளிப்பை அல்லது அங்கீகாரத்தை உடனடியாகப் பயனுறும்வகையில் இல்லாதாக்கு வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

குறத்தசில சூழ்நிலை களில் உரிமங்கள் முதலியவற்றை இல்லாதாக்கு வதற்குப் பணிப்பாளர் தலைமை யதிபதிக்குள்ள தத்துவம்.

(2) இச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினதும் 110 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் உரிமம் சான்றிதழ், அனுமதிப்பத்திரம், அதிகார வளிப்பு அல்லது அங்கீகாரம் ஒன்றின் ஏதேனும் இல்லாதாக் குகை தொடர்பில் ஏற்புடை யனவாதல் ஆகாது.

**107.** (1) இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் அல்லது வழங்கப் படும் உரிமம், சான்றிதழ், அனுமதிப்பத்திரம், அதிகாரவளிப்பு, அல்லது அங்கீகாரம் ஒன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன் றுக்கு அல்லது பங்காண்மையொன்றுக்கு அளிக்கப்பட்டுள்ள விடத்து அல்லது வழங்கப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளர் சபை யில் அல்லது பங்காண்மையில் ஏற்படுகின்ற ஏதேனும் மாற்றம்,

எந்தக் கூட்டிணைக்கப் பட்ட குழுவுக்கு அல்லது பங்காண்மைக்கு ஏதேனும் அதிகாரம் அளிக்கப்படு

அத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு இரு வாரங்களுக்குக் குறையாமல் முன்னராக விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமத்தை, சான்றிதழை, அனுமதிப்பத்திரத்தை, அதிகாரவளிப்பை அல்லது அங்கீகாரத்தை வழங்கிய தோதான அதிகாரிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

கின்றதோ அந்த கூட்டிணைக்கப் பட்ட குழுவில் அல்லது பங்காண்மையில் ஏற்படும் மாற்றங்கள்.

(2) ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அல்லது பங்காண்மைக்கு ஏலவே அளிக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள உரிமம், சான்றிதழ், அனுமதிப்பத்திரம், அதிகாரவளிப்பு அல்லது அங்கீகாரம் ஒன்று, விடயத்துக்கேற்ப, அதன் பணிப்பாளர் சபையில் அல்லது பங்காண்மையில் மாற்றமொன்று ஏற்படுகின்ற தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமத்தில், சான்றிதழில், அனுமதிப்பத்திரத்தில், அதிகாரவளிப்பில் அல்லது அங்கீகாரத்தில், அல்லது இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளில் முரணாக அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், செல்லுபடி மற்றும் பயன் இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பணிப்பாளர் சபையில் அல்லது பங்காண்மையில் மாற்றமொன்று உத்தேசிக்கப்படுமிடத்து, அத்தகைய மாற்றத்துக்குப் பதிலாக, விடயத்துக்கேற்ப, ஒரு புதிய உரிமத்தை, சான்றிழை, அனுமதிப்பத்திரத்தை, அதிகாரவளிப்பை அல்லது அங்கீகாரத்தை அளிப்பதற்காக அல்லது வழங்குவதற்காக, முன்னப்பட்ட பணிப்பாளர் சபையினால் அல்லது பங்காண்மையின் முன்னப்பட்ட பங்காளியினால், அத்தகைய மாற்றம் ஏற்படுமுன்னர் தோதான அதிகாரிக்கு விண்ணப்பமொன்று அளிக்கப்படுவதனை இச்சட்டத்திலுள்ளதெதுவும் தடைசெய்தலோ அல்லது தடுத்தலோ ஆகாது :

ஆயின், விடயத்துக்கேற்ப, அத்தகைய புதிய உரிமம், சான்றிதழ், அனுதிப்பத்திரம், அதிகாரவளிப்பு அல்லது அங்கீகாரம், பணிப்பாளர் சபையிலான அல்லது பங்காண்மையிலான உத்தேசிக்கப்பட்ட மாற்றம் ஏற்பட்ட பின்னர்வரை, தோதான அதிகாரியினால் அளிக்கப்படுதலோ அல்லது வழங்கப்படுதலோ ஆகாது.

**108.** (1) "குடியியல் வான்செலவு அபிவிருத்தி நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும், இச்சட்டத்தின் 99 ஆம் பிரிவின்கீழும் 109 ஆம் பிரிவின்கீழும்

குடியியல் வான்செலவு அபிவிருத்தி நிதியம்.

பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைக்கப்படும் எல்லாப் பணங்களையும் அது கொண்டிடுத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, குடியியல் வான்செலவு அபிவிருத்தி நிதியத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் வரவுக்கிருக்கும் பணங்களைப் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதலும் வேண்டும் :—

(அ) நாட்டில் குடியியல் வான்செலவு உள்ளகக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் அல்லது ஏற்பாடு செய்தல் ;

(ஆ) சமவாயத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட நியமங்களுக்கிணங்க நாட்டினுள் திறமையான, காப்பான வான்வழிச்சேவையை வழங்குவதற்குத் தேவையான மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்தல் ; அத்துடன்

(இ) நாட்டில் குடியியல் வான் செலவுத் தொழிலின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமென அதிகாரசபை கருதுகின்ற வேறேதேனும் பணி.

(3) இலங்கை குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், குடியியல் வான் செலவு அபிவிருத்தி நிதியத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

விதிக்கப்படவேண்டிய சேவைக் கட்டணம்.

**109.** (1) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றின் மீது ஏதேனும் வான்வழிச் சேவையை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்படும் ஆளொவ்வொருவரிடமிருந்தும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய வீதங்களிலான சேவைக் கட்டணமொன்று ஆண்டுதோறும் விதிக்கப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் விதிக்கப்படும் சேவைக்கட்டணம், வழங்கப்படும் எவையேனும் உரிமங்களுக்காகச் செலுத்தப்படற்பாலதான உரிமக் கட்டணத்துக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும். அதனைக் குறைப்பதாகவிருத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்படும் சேவைக்கட்டணம் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும், அவரினால் பெறப்படும் அத்தகைய எல்லாக் கொடுப்பனவுகளும் பற்றித் தகுந்த பதிவேடுகளை, அவர் பேணுதல் வேண்டு மென்பதுடன், சேகரிக்கப்படும் எல்லாப் பணங்களையும், இச்சட்டத்தின் 108 ஆம் பிரிவினால் தாபிக்கப்படும் குடியியல் வான் செலவு அபிவிருத்தி நிதியத்துக்கு வரவுவைத்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் அத்தகைய ஆளினால் செலுத்தப்படுமாறு தேவைப்படுத்தப்படும் சேவைக்கட்டணத்தை செலுத்தத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், நீதிமன்றத்தினால் விதிக்கப்பட வேண்டிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, இச்சட்டத்தின்கீழ் அவ்வாளுக்கு வழங்கப்படும் ஏதேனும் உரிமம் அல்லது எவையேனும் உரிமங்கள், இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், விடயத்துக்கேற்ப, இடைநிறுத்தப்படுவதற்கு அல்லது இல்லாதாக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

மேன்முறையீட்டு நடைவடிக்கை முறை.

**110.** (1) விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரசபையினால் ஆக்கப்படும் கட்டளையொன்றினால் அல்லது முடிபொன்றினால் இன்னலுறுகின்ற எவரேனுமாள், அத்தகைய கட்டளை அல்லது முடிபு அவ்வாளுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் முப்பது வேலைநாட்கள் முடிவுறுமுன்னர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றைச் செய்யலாம் என்பதுடன், செயலாளர், இவ்வுட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்படும் ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாள்வதில், விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது அதிகாரசபையின் கருத்தைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும் ; அத்துடன் செயலாளர், உரிய விசாரணையின் பின்னர், மேன்முறையீடானது எந்தக் கட்டளைக்கு அல்லது முடிவுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளதோ அந்தக் கட்டளையை அல்லது முடிபை உறுதிப்படுத்துதல், வேறுபடுத்துதல் அல்லது வெற்றானதாக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றன்மீது அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிவு முற்றுமுடிவானதாதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அதற்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலுமாகாது.

*அதிகாரமளிக்கப்படும் ஆட்களுக்கான அணுகுகை.*

**111.** பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், நியாயமான எல்லா நேரங்களிலும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அல்லது விதிகளின்கீழ் அவருக்குரித்தாக்கப்படும் எவையேனும் தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அணுகுகை அவசியமாகவுள்ள ஏதேனும் இடத்தை அணுகக்கூடியவராதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது அதிகார சபையின் ஏதேனும் கட்டளை அல்லது முடிவு வலுவுக்கு வருதல்.*

**112.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அல்லது விதிகளின்கீழ் விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரசபையினால் ஆக்கப்படும் கட்டளை அல்லது முடிபு ஒன்று, சம்பந்தப்படட ஆளுக்கு அத்தகைய கட்டளை அல்லது முடிபு எத்தேதியன்று அறிவிக்கப்படுகின்றதோ அத்தேதியன்று வலுவுக்குவருதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அக்கட்டளைக்கு அல்லது முடிபுக்கு எதிரான மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளது என்பது எவ்வாறிருப்பினும், மேன்முறையீட்டின்மீது அத்தகைய செயலாளரினால் முடிபொன்று செய்யப்படும்வரை வலுவில் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

*உரிமம் முதலியவற்றைக் கைமாற்றுதலுக்கெதிரான தடை.*

**113.** (1) இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளுக்கு வழங்கப்படும் உரிமம் , சான்றிதழ், அனுமதிப்பத்திரம் அல்லது அங்கீகாரம் எதுவும் —

(அ) வேறெவரேனுமாளுக்குக் கைமாற்றப்படற்பாலதாதலாகாது ; அல்லது

(ஆ) வேறெவரேனுமாளின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாட்டுக்கு முரணாகச் செய்யப்படும் உரிமம், சான்றிதழ், அனுமதிப்பத்திரம் அல்லது அங்கீகாரம் என்பவற்றின் ஏதேனும் கைமாற்றம் வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும்.

**114.** (1) வித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பிலும், எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்படும் தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமையவும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் அல்லது அவை தொடர்பில் அமைச்சரினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் –

(அ) சமவாயத்தின், (சமவாயத்திற்கிணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னிணைப்பு ஒன்றாகவுள்ள அத்துடன் சமவாயத்துக்கான ஏதேனும் திருத்தமும்) சர்வதேச நியமங்களும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களும் தொடர்பாக அதற்கான ஏதேனும் பின்னிணைப்பின், மற்றும் சமவாயத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுதல் ;

(ஆ) பறத்தகு நிலையிலிருத்தல் பற்றிய சான்றிதழ்களை வழங்குதலும் எத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்பட வேண்டுமோ அந்த நியதி நிபந்தனைகளும் ;

(இ) வானூர்தி நிலையங்களுக்கு உரிமமளித்தலும், அவற்றைப் பரிசோதனை செய்தலும், ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும், அத்துடன் உரிமம் அளிக்கும் நோக்கத்துக்காக வானூர்தி நிலையங்களை வகைப்படுத்தலும் ;

(ஈ) பரிசோதனை செய்யும் நோக்கத்துக்காக வானூர்தி நிலையங்களையும் வானூர்திகள் தரையிறக்கப்படும் இடங்களையும் வானூர்தி தொழிற்சாலைகளையும் அணுகுதலும் வானூர்தி நிலையங்களின்மீது அத்துமீறுதலைத் தடைசெய்தலும் ;

(உ) வான்கலமோட்டலிலும் அல்லது அது சம்பந்தமாகவும் ஆட்களைத் தொழிலுக்கமர்த்துதலும் வானூர்திகளைப் பரிசோதனை செய்வதில் அல்லது மேற்பார்வை செய்வதில் உரிமம் பெற்ற வானூர்தி நிலையங்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டோருக்கு உரிமமளித்தலும் ;

(ஊ) இலங்கையினுட் பிரவேசிக்கின்ற அல்லது இலங் கையை விட்டுச் செல்கின்ற வானூர்திகள் எந்நிபந் தனைகளின் கீழ் பறக்கலாமோ அந்நிபந்தனைகளும், வானூர்தியொன்று இலங்கையின் ஒரு பாகத்தி லிருந்து இலங்கையின் இன்னொரு பாகத்துக்கு எந்நிபந்தனைகளின்கீழ் பறக்கலாமோ அந்நிபந்தனை களும் ;

(எ) பயணிகளும் சரக்குகளும் எந்நிபந்தனைகளின்கீழ் வான்மூலம் ஏற்றிச் செல்லப்படலாமோ அந்நிபந் தனைகளும், எந்நிபந்தனைகளின்கீழ் வானூர்திகள் வேறு வர்த்தக, கைத்தொழில் அல்லது இலாபமீட்டும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாமோ அந்நிபந் தனைகளும் வான்மூலம் கொண்டு செல்லப்படுவதி லிருந்து தடைசெய்யப்படுகின்ற பண்டங்களைக் குறித் துரைத்தலும் ;

(ஏ) வான்கலமோட்டல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் பயன்பாட்டுடன் அல்லது பயனுறு தன்மையுடன் தலையிடுவதைத் தடுத்தல், அத்தகைய உபகரணங்களின் பயன்பாட்டையும், அத்துடன் வானூர்திகளை ஆபத்துக்குட்படுத்தக்கூடிய சைகை களையும் வெளிச்சங்களையும் வெளிக்காட்டுதலையும் தடைசெய்தல் அல்லது ஒழுங்குபடுத்துதல் ;

(ஐ) வான்கலமோட்டலின் காப்பு, திறமை மற்றும் கிரமத் தன்மை, வானூர்திகளினதும் அதன்கண் ஏற்றிச் செல்லப்படும் ஆட்களினதும் ஆதனத்தினதும் காப்பு, மற்றைய ஆட்களுக்கும் ஆதனத்துக்கும் வானூர்திகள் ஆபத்தேற்படுத்துவதனைத் தடுத்தல், அத்துடன் இப் பந்தியிற் குறித்துரைக்கப்படும் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் வானூர்திகளைத் தடுத்துவைத்தல் ;

(ஒ) குடியியல் வான்செலவினதும் அதனோடு சம்பந்தப் பட்ட கருமங்களினதும் காப்பு மேனோக்கு ;

(ஓ) அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு வான்கலமொன்றின் விபத்து அல்லது நிகழ்ச்சியின் நேரடிவிளைவாக அல்லது அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அவரது அல்லது அவளது கடமைகளைப் புரிவதில் அத்தகைய அலுவலரினால் அல்லது சேவையாள ரினால் நடாத்தப்படும் பரிசோதனையின் நேரடி விளைவாக மரணம் அல்லது ஊறுவிளைவிக்கப்படுமிடத்து, நட்டஈடு செலுத்துதுல் ;

(ஔ) வான்கலமோட்டலில் ஈடுபட்டுள்ள அல்லது அதில் அல்லது அது சம்பந்தமாகத் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள ஆளினால் வான்கலமோட்டலின் நோக்கத்துக்காக வானிலைசார் தகவல் வழங்கப்படுதல் ;

(க) வானூர்திகளினாலும் அதன்கண் ஏற்றிச்செல்லப் படும் ஆட்களினாலும் அல்லது வானூர்திகளுக்கும் அதன்கண் ஏற்றிச்செல்லப்படும் ஆட்களுக்கும் சைகைகளையும் வேறு தொடர்புகளையும் செய்வதனை ஒழுங்குபடுத்துதல் ;

(ங) குடியியல் வான் சின்னத்தையும் வான்கலமோட்டலுடன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காக அமைச்சரினால் ஏற்படுத்தப்படும் வேறு ஏதேனும் சின்னத்தையும் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துதல் ;

(ச) வான்மூலமான கடத்தலைத் தடுத்தல் ;

(ஞ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் சான்றிதழின், உரிமத்தின், அனுமதிப்பத்திரத்தின் அல்லது வேறு ஆவணத்தின் வழங்குகை, செல்லுபடியாக்குகை, புதுப்பிப்பு, விசாலிப்பு அல்லது வேறுபாடு தொடர்பான முறையும் நிபந்தனைகளும், அத்துடன் அத்தகைய ஏதேனும் ஆவணத்தின் படிவமும், கட்டுக்காப்பும், காண்பிப்பும், இல்லாதாக்குகையும், இடைநிறுத்துகையும், புறக்குறிப்பும், மீள் ஒப்படைப்பும் ;

(ட) வானூர்தி நிலையங்களையும் அத்தகைய வானூர்தி நிலையங்களில் வழங்கப்படும் சேவைகளையும் பயன்படுத்துவதற்காக விதிக்கப்படக்கூடிய இறுப்பனவுகளை ஒழுங்குபடுத்துதல் ;

(ண) அரசினால் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் வானூர்தி நிலையத்தினால் வழங்கப்படும் வான்கலமோட்டல் சேவைகளை அல்லது வசதிகளைப் பயன்படுத்துவதற்காக, மேலாகப் பறக்கும் வானூர்திகளிடமிருந்து விதிக்கப்படக்கூடிய இறுப்பனவுகளை ஒழுங்குபடுத்துதல் ;

(த) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் சான்றிதழின், உரிமத்தின் அனுமதிப்பத்திரத்தின் அல்லது வேறு ஆவணத்தின் வழங்குகை, செல்லுபடியாக்குகை, புதுப்பிப்பு, விசாலிப்பு அல்லது வேறுபாடு தொடர்பில் அல்லது ஏதேனும் பரிசோதனைக்கு அல்லது பரீட்சைக்கு உட்படுகின்றமை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை விதித்துரைத்தல் ;

(ந) வானூர்தி நிலையங்கள் மீதுள்ள வானூர்தியினால் எந்நிலைமைகளின்கீழ் சத்தமும் அதிர்வும் ஏற்படுத்தப்படக்கூடுமோ அந்நிலைமைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்.

(3) இதனகத்துமுன்னர் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம் :—

(அ) வெவ்வேறு வகுப்பினவான வானூர்திகள், வானூர்தி நிலையங்கள், ஆட்கள் அல்லது ஆதனம் என்பன தொடர்பாகவும் வெவ்வேறு சூழ்நிலைகளும் இலங்கையின் வெவ்வேறு பாகங்களும் தொடர்பிலும் வெவ்வேறான ஏற்பாடுகள் ; ஆனால், செயல்முறைக்குகந்த அளவுக்கு, ஒரு வான் போக்குவரத்துப் பொறுப்பு முயற்சியினால் வாடகைக்கமர்தல் நியதிகளின்மீது தொழிற்படுத்தப்படும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திக்கும், அத்தகைய இன்னுமொரு பொறுப்புமுயற்சியினால் அவ்வாறு தொழிற்படுத்தப்படும் அத்தகைய வானூர்திகளுக்கும் இடையே அதேபோன்ற சூழ்நிலைகளில் பாரபட்சம்காட்டாத வகையில் அவை செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லா வானூர்திகள் தொடர்பிலும், அவை எங்கிருப்பினும், அத்தகைய ஒழுங்குவிதிகளின் ஏற்புடைமை ;

(இ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகளிலுள்ள ஆட்களினால் அல்லது இலங்கை வானூர்திகளின் இயக்குதொகுதியினுள் எவரினாலும், அவை எங்கிருப்பினும், எக்காரியமும் செய்யப்படுவதனைத் தடைசெய்தல் அல்லது ஒழுங்குபடுத்துதல் ; அத்துடன்

(ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகள் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளணி தவிர்ந்த எவரேனும் ஆளினால் எக்காரியமும் செய்யப்படுவதனைத் தடைசெய்தல் அல்லது ஒழுங்குபடுத்துதல்.

(4) வானூர்திகள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகள், அத்தகைய ஒழுங்குவிதிக்கு அல்லது இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு வானூர்தியொன்றைத் தடுத்துவைப்பதற்கும் ஏற்பாடுசெய்யலாம் என்பதுடன், அத்தகைய தடுத்துவைத்தலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதென அல்லது உசிதமானதென அமைச்சருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய மேலதிக ஏற்பாடுகளையும் செய்யலாம்.

*நிதியமைச்சரினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல்.*

**115.** நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சரின் கலந்தாலோசனையுடன், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் அவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) வானூர்திமூலம் பிரயாணஞ்செய்வதற்கான பயணிகள் சீட்டுக்களை விற்பனைசெய்தலும், வானூர்திமூலம் பிரயாணஞ்செய்வதற்கான பயண ஒதுக்கீட்டை மேற்கொள்ளுதலும் ;

(ஆ) வானூர்திமூலமான ஏற்றுமதிகளின்மீது கப்பற்கேள்வுக் கட்டணங்களைச் சேகரித்தல் ;

(இ) வானூர்திமூலமான இறக்குமதிகளுக்கான கப்பற்கேள்வுக்கான ஒப்பந்தம் இலங்கையில் செய்யப்படுமிடத்து, அத்தகைய கொண்டுசெல்லுகையின்மீது கப்பற்கேள்வுக் கட்டணங்களைச் சேகரித்தல் ;

(ஈ) பின்வருவனபற்றிய விபரங்களுட்பட, 114 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறாக 94 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களை வைத்திருப்போரினால் அத்தகைய எல்லாக் கூற்றுக்களும் அல்லது வெளிப்படுத்துகைகளும் கொடுத்துதவப்படுதல் :-

(i) ஏதேனும் மாதத்தின்போது வழங்கப்படும் வான் நடமாட்ட ஆவணங்களின் வழங்குகையில் எவையேனும் பணச் சேகரிப்புகள் உட்படுத்தப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி வழங்கப்பட்ட அத்தகைய வான்நடமாட்ட ஆவணங்கள் ;

(ii) பயணிகள் சீட்டுக்களின் விற்பனையிலிருந்தும் கேள்வுக் கட்டணங்களிலிருந்தும் ஏதேனும் மாதத்தில் பெறப்படும் மொத்தப் பணச் சேகரிப்புகள் ; அத்துடன்

(iii) இலங்கையில் வழங்கப்படும் வான்போக்குவரத்து ஆவணங்களுக்கெதிராக அளிக்கப்படும் மீளளிப்புகள்.

*114 ஆம், 115 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை வர்த்தமானியில் வெளியிடுதல்.*

**116.** (1) இச்சட்டத்தில் 114 ஆம, 115 ஆம் பிரிவுகளின்கீழ், அமைச்சரினாலும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினாலும் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்குப் பங்கமின்றி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*செயற்படுத்துகின்ற நியமங்களை வழங்குவதற்கான தத்துவம்.*

**117.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல்லது விதிக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கான அத்தகைய செயற்படுத்துகின்ற நியமங்களை, பணிப்பாளர் தலைமையதிபதி, அவ்வாறு செய்வது அவசியமானதாக அல்லது தோதானதாக உள்ளதென அவர் கருதும்போதெல்லாம் வழங்குவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவ்வாட்கள் தொடர்பில் எவையேனும் செயற்படுத்துகின்ற நியமங்கள் வழங்கப்படுகின்றனவோ அவ்வாட்கள் எல்லோரும் அவற்றுடன் இணங்கியொழுகுதல் அவர்களது கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவையேனும் செயற்படுத்துகின்ற நியமங்களுக்கு இணங்கியொழுகாமை எதுவும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதி பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை வழங்குதல்.

**118.** பணிப்பாளர் தலைமையதிபதி, வான்வழிச் சேவைகளை வழங்குகின்ற எல்லாத் தொழிற்படுத்துநர்களுக்கும் உரிமம் வைத்திருப்போருக்கும், பொதுமக்கள் காப்பையும் இலங்கைப் பிரசைகளின் சேமநலத்தையும் பேணுதல் சம்பந்தமான அல்லது அது தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பாக அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை வழங்குவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல், விடயத்துக்கேற்ப, அத்தகைய எல்லாத் தொழிற்படுத்துநர்களினதும் உரிமம் வைத்திருப்போரினதும் கடமையாதலும் வேண்டும்.

விதிகள்.

**119.** (1) ஆக்கப்படுதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்ற அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அதிகார சபையானது விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்படும் விதியெதுவும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை பயனுடையதாதலாகாது.

ரூபாக்களில் வி.மீ. உரிமைகளின் சமமான தொகை.

**120.** இச்சட்டத்தின்கீழ் புரியப்படும் தவறொன்றுக்கான குற்றப்பணமொன்றை விதிக்கும் நோக்கத்துக்காக இலங்கை ரூபாக்களின் வி.மி உரிமைகளின் சமமான தொகை, அத்தகைய குற்றப்பணம் எத்தவறு தொடர்பில் விதிக்கப்படுகின்றதோ அத்தவறு புரியப்படும் தேதிக்கு முற்போந்த தேதிக்காக வி.மீ. உரிமைகளின்படி தீர்மானிக்கப்பட்ட ரூபாவின் பெறுமதியினது அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

***121.*** *(1)* *இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலொழிய —* *பொருள் கோடல்.*

*“வானூடு வேலை” என்பது கமத்தொழில், நிர்மாணிப்பு, நிழற்படவியல், நில அளவையிடுதல், அவதானிப்பு மற்றும் ரோந்து, தேடுகை மீட்புத் தொழிற்பாடுகள், வானூடு விளம்பரம், ஒலிபரப்புதல் அல்லது தொடர்பு, வளிக் குமுறலைத் தோற்றுவித்தல், பறப்புப் பயிற்சி, மலர்தூவுதல் அத்துடன் அவசரகால தொழிற்பாடுகள் ஆகிய நோக்கங்களுக்காக வானூர்தி ஒன்று பயன்படுத் தப்படுகின்ற வானூர்தித் தொழிற்பாடுகள் என்று பொருளாகும்* ;

*“வானூர்தி நிலையம்” என்பது, வானூர்திகளின் தரையிறக் கத்துக்கதாகவும் புறப்படுகைக்காகவும் முழுமையா கவோ அல்லது பகுதியளவிலோ பயன்படுத்தப்படு வதற்கு முன்னப்படும் ஏதேனும் வரையறுக்கப்பட்ட நில அல்லது நீர் இடப்பரப்பு என்றும், அதன்மீதுள்ள அல் லது அதனோடு இணைந்துள்ள எல்லா கட்டிடங்களும், கொட்டில்களும், கலன்களும், துறைமேடைகளும், ஏனைய கட்டமைப்புகளும் என்று பொருளாகும்* ;

*“வான்கலமோட்டல் சட்டம்” என்பது (365 ஆம் அத்தியாய மான) வான்கலமோட்டல் சட்டம் என்று பொருளாகும் என்பதுடன், 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க வான் செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தையும் உள்ளடக்கும்* ;

*“வான்கலமோட்டல் சேவைகள்” என்பது, கலமோட்டல் கருவி களும் கலமோட்டல் வசதிகளும் என்று பொருளாகும்* ;

*“வான்நடமாட்டக் கட்டுப்பாடு” என்பது —*

*(அ)* (i) *வானூர்திகளுக்கிடையேயும்* ;

(ii) *வானூர்திகளுக்கும் முட்டுக்கட்டைகளுக்கு மிடையேயான நுட்பச்செயற்பாட்டு இடப் பரப்பின்மீதும்*

*மோதல்களைத் தவிர்க்கும்* ; *அத்துடன்*

*(ஆ)* *வான்நடமாட்டத்தின் ஒழுங்கான ஓட்டத் தைத் துரிதப்படுத்தும் அத்துடன் பேணும்,*

*நோக்கத்துக்காக வழங்கப்படும் ஒரு சேவை என்று பொருளாகும்* ;

“வானூர்தி” என்பது, பூமியின் மேற்பரப்பை எதிர்த்த வளியின் வான் எதிர்விளைவுகள் தவிர வளியின் வளியியக்கஞ் சார் எதிர்விளைவுகளிலிருந்து வளிமண்டலத்தில் ஆதாரத்தைப் பெறக்கூடிய ஏதேனும் எந்திரம் என்று பொருளாகும் ;

“அதிகாரசபை” என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபை என்று பொருளாகும் ;

“அதிகாரமளிக்கப்படும் பாதுகாப்பு ஆளணியினர்” என்பது வான்செலவுப் பாதுகாப்புச் சேவையொன்றை வழங்குவதற்காகவும் பேணுவதற்காகவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எந்தேச் சேவை வழங்குநருக்கு உரிமமொன்று வழங்கப்படுகின்றதோ அந்தச் சேவை வழங்குநரால் பேணப்படுகின்ற பாதுகாப்புச் சேவையின் உறுப்பினரொருவர் என்று பொருளாகும் என்பதுடன், வானூர்தி நிலையத்தினுள் கடமைகளை புரிகின்ற அல்லது புரியும்படி கோரப்படுகின்ற ஆயுதந்தாங்கிய படையின் அல்லது பொலிசுப் படையின் எவரேனும் உறுப்பினரையும் உள்ளடக்கும் ;

“வான் போக்குவரத்துத் தொழில்” என்பது, இலங்கை ஆள்புலத்திற்கும் அதலிருந்துமான பறத்தல்கள் உட்பட, உலகத்தில் எப்பாகத்திலேனும் (இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத) வானூர்திமூலமான பறத்தலின்மீது ஆட்களை அல்லது சரக்கை அல்லது தபாலை ஏற்றிச்செல்வதற்கான ஏதேனும் இடவசதியை (ஒரு வானூர்தியின் தொழிற்படுத்துநராக அல்லது முதல்வராக அல்லது முகவராக,) கிடைக்கும்படியாக்குகின்றமை என்று பொருளாகும் ;

“இலங்கை குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டம்” என்பது, 2002, ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டம் என்று பொருளாகும் ;

"சமவாயம்" என்பது, ஏதேனும் பின்னரான சமவாயத்தினால் அல்லது உடன்படிக்கையினால் திருத்தப்பட்டவாறான 1944 ஆம் ஆண்டு திசெம்பர் 7 ஆம் நாளன்று சிக்காகோவில் கையொப்பமிடப்பட்ட சர்வதேசக் குடியியல் வான்செலவு பற்றிய சமவாயம் என்று பொருளாகுமென்பதுடன் அத்தகைய சமவாயத்துக்கு இணைக்கப்பட்ட பின்னிணைப்புக்களையும் உள்ளடக்கும் ;

"அபாயகரமான பண்டங்கள்" என்பது, சுகாதாரத்துக்கு, காப்புக்கு, ஆதனத்துக்கு அல்லது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவையும், சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பினால் வழங்கப்பட்ட தொழினுட்ப அறிவுறுத்தல்களிற் குறித்துரைக்கப்பட்ட அபாயகரமான பண்டங்கள் பற்றிய நிரலில் காட்டப்பட்டவையும் அல்லது அந்தத் தொழினுட்ப அறிவுறுத்தல்களின்படி அபாயகரமான பண்டங்களாக வகுப்பாக்கம் செய்யப்படுகின்றவையுமான எவையேனும் பதார்த்தங்கள் அல்லது பொருட்கள் என்று பொருளாகும் ;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின் II ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் ;

"வெளிநாட்டு வானூர்தி" என்பது, இச்சட்டத்தின்கீழ் இலங்கையில் பதிவு செய்யப்படாத வானூர்தியொன்று என்று பொருளாகும் ;

"தளக் கையாளுகைச் சேவைகள்" என்பது, வான்நடமாட்டச் சேவைகள் தவிர, ஒரு வானூர்தி நிலையத்தை வானூர்தியொன்று வந்தடைவதற்கும் அதிலிருந்தும் புறப்படுவதற்கும் அவசியமான சேவைகள் என்று பொருளாகும் ;

"இராணுவ வானூர்தி" என்பது, வாடகைக்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளை அல்லது சரக்கைக்

கொண்டு செல்லுதல் தவிர்ந்த நோக்கங்களுக்காக அரசுக்காக அல்லது அதன்சார்பில் பயன்படுத்தப்பட்ட அல்லது தொழிற்படுத்தப்பட்ட ஒரு வானூர்தி என்று பொருளாகும் ;

"தேசிய வான்செலவுக் கொள்கை" என்பது, அமைச்சரவையினால் வகுத்தமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் வான்செலவுபற்றிய தேசியக் கொள்கை என்று பொருளாகும் ;

"வான்கலமோட்டு கருவிகள்" என்பது, வான் மார்க்கமொன்று நெடுகிலும் கட்புலஞ்சார், கட்புலஞ்சாரா வான்கலமோட்டுகருவிகள் மற்றும் வானூர்திநிலையங்களில் அணுகுகைக்கும் தரையிறக்கத்துத்துக்குமான கட்புலஞ்சார், கட்புலஞ்சாராக் கருவிகள் என்று பொருளாகும் என்பதுடன், தொடர்புச் சேவைகளையும் வானிலைசார் சேவைகளையும், வான்நடமாட்டக் கட்டுப்பாட்டுச் சேவைகளையும் உள்ளடக்கும் ;

"வான்கலமோட்டு வசதிகள்" என்பது, வானூர்திகளின் காப்பான வான்கலமோட்டலை அனுமதிப்பதற்கு வழங்கப்படும் வசதிகள் என்று பொருளாகும் என்பதுடன், கட்புலஞ்சார், கட்புலஞ்சாரா வான்கலமோட்டு கருவிகளையும் உள்ளடக்கும் ;

"தொழிற்படுத்துநர்" என்பது, வானூர்தி தொழிற்படுத்துநர் சான்றிதழை அல்லது வெளிநாட்டு வானூர்தித் தொழிற்படுத்துநர் சான்றிதழை வைத்திருக்கின்ற வானூர்தித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு முன்வருகின்ற ஆளொருவர் ஒழுங்கமைப்பொன்று அல்லது தொழில் முயற்சியொன்று என்ற பொருளாகும் என்பதுடன், வானூர்தியின் கட்டுப்பாட்டுடனோ அல்லது கட்டுப்பாடின்றியோ (சொந்தக்காரர் அல்லது குத்தகைபெறுநர் என்ற தன்மையில் அல்லது வேறு வகையாக) வானூர்தித் தொழிற்பாட்டைச் செய்விக்கின்ற அல்லது அதிகாரமளிக்கின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும் என்று பொருளாகும் ;

"வானூர்தி நிலையத் தொழிற்படுத்துநர்" என்பது, வானூர்தி நிலையமொன்றாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு கையேற்கப்படும் எவையேனும் வளவுகள் தொடர்பாக, அவ்வளவுகளில் வானூர்தி நிலையத்தைப் பேணுகின்ற அல்லது தொழிற்படுத்துகின்ற அல்லது பேணுதற்கு அல்லது தொழிற்படுத்துதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் என்று அல்லது அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் தாபிக்கப்படும் அல்லது பேணப்படும் வானூர்தி நிலையமொன்றின் விடயத்தில், அந்நோக்கத்துக்காக அவ்வாறு நியமிக்கப்படும் சேவை வழங்குநர் என்று பொருளாகும் ;

"பிராந்திய வான்கலமோட்டல் திட்டம்" என்பது, ஏதேனும் பிராந்திய வான்கலமோட்டல் மாநாட்டில் அரசாங்கத்தினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்டு சர்வதேசக் குடியியல் வான் செலவு ஒழுங்கமைப்பின் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்கள், வசதிகள் மற்றும் சேவைகள் என்று பொருளாகும் ;

"நிவி வழக்கங்கள்" என்பது, சமவாயத்தின் 37 ஆம் உறுப்புரையின்கீழ் சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பின் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களும் என்று பொருளாகும் ;

"விமீ உரிமை" என்பது, சர்வதேச பண நிதியத்தினால் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு விசேட மீளப்பெறுகை உரிமை என்று பொருளாகும் ;

"நியமங்கள்" என்பது, —

(அ) சமவாயத்தின் 37 ஆம் உறுப்புரையின்கீழ் சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பின் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையும், இலங்கையானது, சமவாயத்தின் 38 ஆம் உறுப்புரையின்கீழ் அவற்றுக்கு வித்தியாசங்களைக் கோப்பிட்டிராதவையுமான நியமங்கள் ; அத்துடன்

(ஆ) சமவாயத்தின் 37 ஆம் உறுப்புரையின்கீழ் சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பின் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையும், இலங்கையில் உரிய முறையில் செயற்படுத்தப்பட்டுள்ளவையுமான விதந்துரைக்கப்பட்ட வழக்கங்கள்,

என்று பொருளாகும் ;

"சமவாயத்துக்கான திறத்தவராகவுள்ள அரசு" என்பது, சமவாயத்தை உறுதிப்படுத்தியுள்ள அல்லது அதனைக் கடைப்பிடித்துள்ள அரசொன்று என்று பொருளாகும் ;

"இலங்கை ஆள்புலம்" என்பது, இலங்கையின் நில இடப்பரப்பு, உள்நாட்டு நீர்ப்பரப்புகள் மற்றும் ஆள்புலக் கடல் என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய இடப்பரப்புகளுக்கு மேலாகவுள்ள வான்பரப்பையும் உள்ளடக்கும்.

(2) "பண்டங்கள் அல்லது பொருட்கள்" பற்றி இச்சட்டத்திலுள்ள ஏதேனும் குறிப்பீடு, தபால் அல்லது விலங்குகள் பற்றிய குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தில் ஏதேனும் "நாடு அல்லது ஆள்புலம்" பற்றிய ஏதேனும் குறிப்பீடு, சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலொழிய அந்நாட்டுக்கு அல்லது ஆள்புலத்துக்கு அணித்தாயுள்ள ஆள்புல நீர்ப்பரப்புகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தில், "குடியியல் வான்செலவு நோக்கங்களுக்காக" என்ற சொல்லமைப்பு, வான்மூலம் இலங்கையின் பாதுகாப்புடன் சம்பந்தப்படும் ஏதேனும் நோக்கம் தவிர, வான்கலமோட்டலுடன் சம்பந்தப்படும் எல்லா நோக்கங்களையும் உள்ளடக்கும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**122.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

நீக்கல் மற்றும் பேணல்கள் ஏற்பாடுகள்.

**123.** (1) இப்பிரிவிலும் 124 ஆம் பிரிவிலும் "நீக்கப்பட்ட ஏற்பாடுகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்ற (365 ஆம் அத்தியாயமான) வான்கலமோட்டல் சட்டத்தின் III ஆம் பாகத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் தவிர, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்துடன் 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வான்செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் தவிர, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் நீக்கம் எவ்வாறிருப்பினும், —

(அ) நீக்கப்பட்ட ஏற்பாடுகளுள் எவற்றின் கீழும் ஆக்கப்பட்டு நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலுள்ள ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அல்லது கட்டளையும், அத்தகைய ஒழுங்குவிதி அல்லது கட்டளை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகவிராத அளவுக்கு, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி அல்லது கட்டளை ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியினால் அல்லது கட்டளையினால் திருத்தப் படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் ;

(ஆ) நீக்கப்பட்ட ஏற்பாடுகளுள் எவற்றின் கீழும் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஆக்கப்பட்டும் அல்லது செல்லுபடியாக்கப்பட்டும் நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலுள்ள ஒவ்வோர் உரிமமும் அல்லது சான்றிதழும் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றாக அல்லது சான்றிதழொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரிமம் அல்லது சான்றிதழ் எக்காலப்பகுதிக்காக வழங்கப்பட்டதோ அல்லது செல்லுபடியாக்கப்பட்டதோ அக்காலப்பகுதி முடிவுறும் வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) நீக்கப்பட்ட ஏற்பாடுகளுள் எவற்றின் கீழும் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அளிக்கப்பட்ட

ஒவ்வோர் அங்கீகாரமும், செய்யப்பட்ட ஒவ்வோரு பதவிக்குறிப்பும், அதிகாரவளிப்பும் அல்லது நியமன மும் வழங்கப்பட்ட பணிப்புகளும், சுற்றறிக்கைகளும், கைந்நூல்களும், அறிவுத்தல்களும், வேறெவையேனும் வெளியீடுகளும், தாபிக்கப்பட்ட சபைகளும் அல்லது வேறெவையேனும் குழுக்களும், இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டவையாக, செய்யப்பட்டவையாக அல் லது வழங்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், வேறுவகையில் இல்லாதாக்கப்பட்டா லொழிய அல்லது செல்லுபடியற்றதாக்கப்பட்டா லொழிய வலுவில் தொடர்ந்திருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஈ) ஏதேனும் வழக்கில், கருமத்தில் வழக்கு நடவடிக்கை யில் அல்லது காரியத்தில் ஏதேனும் நீதிமன்றத்தி னால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் குடியியல் வான்செலவுத் திணைக்களத் துக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப் படும் அல்லது ஆக்கப்படும் ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அதிகாரச்சபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்படும் அல்லது ஆக்கப்படும் ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது அளிப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம்.

(365 ஆம் அத்தியாயமான) வான்கல மோட்டற் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவர் தொடர்பான ஏற்பாடுகள்.

**124.** (1) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறி ருப்பினும், (365 ஆம் அத்தியாயமான) வான்கலமோட்டற் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவர், நியமிக்கப்பட்ட தேதியன்றும் அத்தேதியி லிருந்தும், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக (இதனகத்துப்பின்னர் “நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சேவைவழங்கு நராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, அத்தகைய முகவர் வழங்கு வதில் ஈடுபட்டுள்ள வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கு

இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுவதற் குத் தேவைப்படுத்தப்படும் இயைபான எல்லா உரிமங்களும் அவருக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், நியதிச்சட்டமுறையான சேவை வழங்குநரின் நியமனம் பற்றிய கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிடுவித்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய நியதிச்சட்டமுறையான சேவை வழங்குநருக்கும் அவர் தொடர்பிலும் அது ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநரொருவருக்கு வழங்கப்பட்ட எல்லா உரிமங்களும், வழங்குகைத் தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் வேறெவரேனும் சேவை வழங்குநருக்கு வழங்கப்படும் இதேபோன்ற உரிமமொன்றுடன் இணைந்துள்ளவையைப் போன்று அதே நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தனவாதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநருக்கு வழங்கப்படும் ஒவ்வோர் உரிமத்தினதும் வழங்குகைத் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுக்கு இணங்கவுள்ள விண்ணப்பம் ஒன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் செல்லுபடிக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர் அத்தகைய நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநர் வழங்குவதற்கு உத்தேசிக்கின்ற வான்வழிச் சேவைகளை அவர் வழங்குவதற்கான புதிய உரிமங்களை வழங்கப்பெறுவதற்காக, விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

*நியதிச்சட்ட முறையான சேவைவழங்குநரினால் குறித்த சில ஆதனங்கள் பிடித்துவைக்கப் படுதல்.*

**125.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் 124 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நியதிச்சட்ட முறையான சேவை வழங்குநரொருவருக்கு எவையேனும் புதிய உரிமங்களை வழங்குவதன்மேல், அத்தகைய புதிய உரிமங்கள் எந்த வான்வழிச் சேவைகள் தொடர்பில் வழங்கப்பட்டனவோ அந்த வான்வழிச் சேவை

களை வழங்குவதற்கென அவரினால் பிடித்து வைக்கப்படுதல் அவசியமானதென்றும் தோதானதென்றும் அதிகாரசபை கருது கின்றவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் முகவரொருவ ரென்ற தன்மையில் அவருக்குச் செய்யப்பட்ட எவையேனும் கைமாற்றங்களின் பயனைக்கொண்டு அவரது உடைமையில் உள்ளவையுமான எவையேனும் அசைவற்ற ஆதனங்களைப் பிடித்துவைக்க அத்தகைய நியதிச்சட்டமுறையான சேவை வழங்கு நருக்கு எழுத்திலான அனுமதியளித்தல் வேண்டும்.

(2) நூற்றியிருபத்திநான்காம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நியதிச் சட்டமுறையான சேவை வழங்கநருக்கு வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் செல்லுபடிக்காலம் தொடங்குவதன்மேல் அல்லது அதற்குமுன்னர், அவரது உடைமையில் உள்ளவையாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் அளிக்கப்படும் அனுமதி யின்மீது அத்தகைய நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநர் பிடித்துவைப்பதற்கு உரித்துடையவராகவிராத அத்தகைய எல்லா அசைவற்ற ஆதனங்களையும் அதிகாரசபைக்கு திருப்பிக் கொடுத்தல் நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநரின் கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்குத் திருப்பிக் கொடுக்கும்படி தேவைப்படுத்தப்படும் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைத் திருப்பிக்கொடுக்கத்தவறுதல் இச்சட்டத்தின் கீழான தவறொன்றாதல் வேண்டுமென்பதுடன், நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநருக்குப் புதிய உரிமங்களை வழங்கிய, விடயத்துக் கேற்ப, அதிகாரசபை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட ஆதனம் உடனடியாக அதிகாரசபைக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்வரை, அவ்வாறு வழங்கப்படும் உரிமங்களை இடைநிறுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு உரித்துடைய வராதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியதிச்சட்டமுறையான சேவை வழங்குநரினால் திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய அசைவற்ற ஆதனங்கள் தொடர்பாக எழக்கூடிய ஏதேனும் பிணக்கு, தீர்த்து வைக்கப்படுவதற்காக, அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன்மீது அவரது முடிவு, முற்றுமுடிவானதாதலும் வேண்டும்.

**அட்டவணை**

(பிரிவு 2)

குடியியல் வான்செலவின் காப்பு, கிரமமானதன்மை, வினைத்திறன் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாகச் சமவாயத்தின் உறுப்புரைகள்

உறுப்புரை — 1

**இறைமை**

ஒவ்வோர் அரசிற்கும், அதன் ஆள்புலத்திற்கு மேலேயுள்ள வான்வெளி மீது முழுமையான மற்றும் புறநீங்கலான இறைமை உண்டென ஒப்பந்த அரசுகள் ஏற்று அங்கீகரிக்கின்றன.

உறுப்புரை — 2

**ஆள்புலம்**

இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காக ஓர் அரசின் ஆள்புலமானது, அத்தகைய அரசின் இறைமை, மேலாதிக்க உரிமை, பாதுகாப்பு அல்லது ஆணை ஆகியவற்றின்கீழ் இருக்கும் பூமிப்பரப்புகள் மற்றும் அதற்கருகில் இருக்கும் ஆள்புல நீர்ப்பரப்புகள் என்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

உறுப்புரை — 3

**குடியியல் மற்றும் அரச வானூர்திகள்**

(அ) இச்சமவாயம், குடியியல் வானூர்திகளுக்கு மட்டுமே ஏற்புடையதாதல் வேண்டுமென்பதுடன், அரச வானூர்திகளுக்கு ஏற்புடையதாதலும் ஆகாது ;

(ஆ) இராணுவ, சுங்க மற்றும் பொலிசு சேவைகளிற் பயன்படுத்தப்படும் வானூர்திகள், அரச வானூர்திகளாகக் கருதப்படல் வேண்டும் ;

(இ) ஓர் ஒப்பந்த அரசின் அரச வானூர்தியெதுவும் ஒரு விசேட உடன்படிக்கையின்கீழான அல்லது வேறு வகையான அதிகார வளிப்பின்றியும் அதன் நியதிகளுக்கு இணங்கவன்றியும், வேறு ஓர் அரசினது ஆள்புலத்தின்மேல் பறத்தல் அல்லது அதன்மீது தரையிறங்குதல் ஆகாது ;

(ஈ) ஒப்பந்த அரசுகள், தமது அரசு வானூர்திகளுக்கான ஒழுங்கு விதிகளை வழங்கும்போது, குடியியல் வானூர்திகளின் போக்குவரத்தினது காப்புப்பற்றி உரிய கவனம் செலுத்துவார்களெனப் பொறுப்பேற்கின்றன.

உறுப்புரை – 4

### குடியியல் வான்செலவின் துர்ப்பிரயோகம்

இச்சமவாயத்தின் இலக்குகளுக்கு ஒவ்வாதனவான ஏதேனும் நோக்கத்துக்காகக் குடியியல் வான் செலவைப் பயன்படுத்தாது இருப்பதற்கு ஒவ்வோர் ஒப்பந்த அரசும் உடன்படுகின்றது.

உறுப்புரை – 5

### அட்டவணைப்படுத்தப்படாத பறத்தலுக்கான உரிமை

அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடாதிருக் கும் வானூர்திகளாகவுள்ள மற்றைய ஒப்பந்த அரசுகளினது எல்லா வானூர்திகளும், இச்சமவாயத்தின் நியதிகள் கடைப்பிடிக்கப்படுவதற்கமைய, முன்னனுமதி பெறுவதற்கான அவசியமின்றியும், வானூர்தியானது எந்த அரசுக்கு மேலாகப் பறக்கின்றதோ, தரையிறங்குதலைத் தேவைப்படுத்து வதற்கு அந்த அரசுக்குள்ள உரிமைக்கமையவும், அதன் ஆள்புலத்தினுள் அல்லது இடப்பெயர்வில் அதன் ஆள்புலத்தினூடாக நிறுத்தாமல் பறப்புகளைச் செய்வதற்கும், வான்நடமாட்டமல்லாத நோக்கங்களுக்காக நிறுத்தல்களைச் செய்வதற்கும் உரிமைகொண்டிருத்தல் வேண்டுமென ஒவ்வோர் ஒப்பந்த அரசும் உடன்படுகின்றது. எனினும், ஒவ்வோர் ஒப்பந்த அரசும் அணுகக்கூடியனவாக இல்லாத அல்லது போதிய வான் போக்குவரத்து வசதிகள் இல்லாத பிராந்தியங்களின்மேல் பறந்து செல்வதற்கு விரும்புகின்ற வானூர்திகள், விதித்துரைக்கப்பட்ட மார்க்கங்களைப் பின்பற்றும்படி அல்லது அத்தகைய பறப்புகளுக்காக விசேட அனுமதியைப் பெறும்படி தேவைப்படுத்துவதற்கான உரிமையை, காப்பான பறப்பின் காரணங்களுக்காகத் தனக்கென்று ஒதுக்குகின்றது. அத்தகைய வானூர்திகள், அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் சேவைகள் அல்லாத வான் சேவைகளில், ஊதியத்திற்காக அல்லது வாடகைக்காகப் பயணிகளை, சரக்கை அல்லது தபாலை ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருப்பின், 7 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய ஏற்றிச்செல்லுதல் அல்லது இறக்குதல் ஏதேனும் அரசு விரும்பத்தக்கதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளை, நிபந்தனைகளை அல்லது வரையறைகளை விதிப்பதற்கு இடம்பெறுமிடத்து அவ்வரசுக்குள்ள உரிமைக்கமைய, பயணிகளை, சரக்கை அல்லது தபாலை உள்ளெடுப்பதற்கான அல்லது இறக்குவதற்கான சிறப்புரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்புரை – 6

### அட்டவணைப்படுத்தப்பட்ட வான் சேவைகள்

ஓர் ஒப்பந்த அரசிடமிருந்து பெறப்பட்ட விசேட அனுமதியுடன் அல்லது வேறு அதிகாரவளிப்புடன் தவிரவும், மற்றும் அத்தகைய அனுமதியின் அல்லது அதிகாரவளிப்பின் நியதிகளுக்கு இணங்கவன்றியும், அந்த அரசினது ஆள்புலத்துக்கு மேலாக அல்லது ஆள்புலத்தினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் சேவையெதுவும் தொழிற்படுத்தப்படுதல் ஆகாது.

உறுப்புரை — 7

**உள்துறைகளிடைப் போக்குவரத்து**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், ஊதியத்திற்காக அல்லது வாடகைக்காகக் கொண்டு செல்லப்பட்டு அதன் ஆள்புலத்தினுள் வேறோர் இடத்தைச் சேரவேண்டிய பயணிகளையும், தபாலையும், சரக்கையும் அதன் ஆள்புலத்தில் உள்ளெடுப்பதற்கு வேறு ஒப்பந்த அரசுகளின் வானூர்திகளுக்கு அனுமதி மறுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். வேறேதேனும் அரசுக்கு அல்லது வேறேதேனும் அரசின் ஒரு வானூர்திச் சேவைக்குப் புறநீங்கலானவோர் அடிப்படையில் அத்தகைய ஏதேனும் சிறப்புரிமையைக் குறிப்பாக அளிக்கின்ற எவையேனும் ஒழுங்கேற்பாடுகளைச் செய்து கொள்ளாதிருப்பதற்கும் வேறேதேனும் அரசிடமிருந்து அத்தகைய ஏதேனும் புறநீங்கலான சிறப்புரிமையைப் பெறாதிருப்பதற்கும் ஒவ்வோர் ஒப்பந்த அரசும் பொறுப்பேற்கின்றது.

உறுப்புரை — 8

**விமானமோட்டியற்ற வானூர்திகள்**

விமானமோட்டியொருவர் அன்றி பறக்கவிடப்படக்கூடிய வானூர்தியெதுவும், ஒப்பந்த அரசொன்றின் விசேட அதிகாரவளிப்பின்றியும் அத்தகைய அதிகாரவளிப்பின் நியதிகளுக்கிணங்கவன்றியும் அவ்வரசின் ஆள்புலத்தின் மேல் விமானமோட்டியொருவர் இல்லாமல் பறக்கவிடப்படலாகாது. குடியியல் வானூர்திகள் பறக்கக்கூடிய பிராந்தியங்களில் விமானமோட்டியொருவர் இல்லாமல் அத்தகைய வானூர்தியின் பறப்பு, குடியியல் வானூர்திகளுக்கு ஆபத்து ஏற்படுவதனைத் தடுக்கும் வகையில் அவ்வாறு கட்டுப் படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வோர் ஒப்பந்த அரசும் பொறுப்பேற்கின்றது.

உறுப்புரை — 9

**தடைசெய்யப்பட்ட இடப்பரப்புகள்**

(அ) ஒவ்வோர் ஒப்பந்த அரசும், இராணுவ அவசியம் அல்லது பொதுமக்களின் காப்புக்காரணங்களுக்காக, அதன் ஆள்புலத்தின் குறித்தசில இடப்பரப்புகளுக்கு மேலோகப் பறப்பதிலிருந்து வேறு அரசுகளின் வானூர்திகளை ஒருசீரான முறையில் மட்டுப்படுத்த லாம் அல்லது தடை செய்யலாம், ஆயின், எந்த அரசு சம்பந்தப் பட்டதாகவுள்ளதோ அந்த அரசின் அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வானூர்திச் சேவைகளில் ஈடுபட்டுள்ளனவான வானூர்திகளுக்கும், அதேபோன்று ஈடுபட்டுள்ளனவான ஏனைய ஒப்பந்த அரசுகளின் வானூர்திச் சேவைகளுக்கும் இடையே இது தொடர்பில் வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது. அத்தகைய தடைசெய்யப்பட்ட இடப்பரப்புகள், வான் போக்குவரத்துடன் அவசியமற்ற முறையில் தலையிடாத வகையில் நியாயமான பரப்பளவினவாகவும், நியாயமான அமைவிடத்தைக்கொண்டன

வாகவும் இருத்தல் வேண்டும். ஒப்பந்த அரசொன்றின் ஆள்புலத்தில் அத்தகைய தடை செய்யப்பட்ட இடப்பரப்புக்கள் பற்றிய விவரணங்களும், அதன்கண் செய்யப்பட்ட எவையேனும் அடுத்துப்பின்னரான மாற்றங்களும், ஏனைய ஒப்பந்த அரசு களுக்கும் சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்புக்கும் இயன்றளவு விரைவாக அறிவிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வோர் ஒப்பந்த அரசும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் அல்லது ஓர் அவசர நிலைமைக் காலப்பகுதியின் போது, அல்லது பொதுமக்கள் காப்பின் நலன்கருதி, மற்றும் உடனடியாகப் பயனுறும் வகையில், அதன் ஆள்புலம் முழுவதின் மேலாக அல்லது ஏதேனும் பாகத்தின் மேலாகப் பறத்தலைத் தற்காலிக மாக மட்டுப்படுத்தல் அல்லது தடை செய்தல், மற்றெல்லா அரசு களினதும் வானூர்திகளுக்கு நாட்டினம் பற்றிய வேறுபாடின்றி ஏற்புடையதாதல் வேண்டுமென்ற நிபந்தனையின்மீது, அவ்வாறு பறத்தலைத் தற்காலிகமாக மட்டுப்படுத்துவதற்கான அல்லது தடைசெய்வதற்கான உரிமையையும் தனக்கென்று ஒதுக்குகின்றது;

(இ) ஒவ்வோர் ஒப்பந்த அரசும், அது விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கு விதிகளின்கீழ், மேலே (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்திகளில் உத்தேசிக்கப்பட்ட இடப்பரப்புகளினுட் பிரவேசிக்கின்ற ஏதேனும் வானூர்தியை, அதன் ஆள்புலத்தினுள் உள்ள ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வானூர்தி நிலையத்தில் அதன் பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாகத் தரையிறங்குதலொன்றைச் செய்யும்படி தேவைப்படுத்தலாம்.

உறுப்புரை — 10

**சுங்க வானூர்திநிலையத்தில் தரையிறங்குதல்**

இச்சமவாயத்தின் அல்லது விசேட அதிகாரவளிப்பொன்றின் நியதிகளின்கீழ், தரையிறங்காமால் ஒப்பந்த அரசொன்றின் ஆள்புலத்தைக் கடப்பதற்கு வானூர்திகள் அனுமதிக்கப்படும் விடயமொன்றில் தவிர, ஒப்பந்த அரசொன்றின் ஆள்புலத்தினுட் பிரவேசிக்கின்ற ஒவ்வொரு வானூர்தியும், அவ்வரசின் ஒழுங்குவிதிகள் அவ்வாறு தேவைப்படுத்தினால், சுங்க மற்றும் வேறுபரிசோதனை நோக்கத்துக்காக, அவ்வரசினால் பெயர்குறிக்கப்பட்ட வானூர்தி நிலையமொன்றில் தரையிறங்குதல் வேண்டும். ஒப்பந்த அரசொன்றின் ஆள்புலத்திலிருந்து புறப்படுவதன் மேல், அத்தகைய வானூர்தி இதேபோன்று பெயர்குறிக்கப்பட்ட சுங்க வானூர்தி நிலைய மொன்றிலிருந்து புறப்படுதல் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட எல்லாச் சுங்க வானூர்தி நிலையங்களும் பற்றிய விபரங்கள், அரசினால் வெளியிடப்பட்டு, மற்றெல்லா ஒப்பந்த அரசுகளுக்கும் அறிவிக்கப்படுவதற்காக இச்சமவாயத் தின் II ஆம் பாகத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்புக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

உறுப்புரை – 11

**வான் ஒழுங்குவிதிகளின் ஏற்புடைமை**

இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வானூர்திகளை ஒப்பந்த அரசொன்றின் ஆள்புலத்திற்கு அனுமதித்தல் தொடர்பாக அல்லது அவை ஆள்புலத்திலிருந்து புறப்படுதல் தொடர்பாக அல்லது அதன் ஆள்புலத்தினுள் இருக்கும்போது அத்தகைய வானூர்திகளின் தொழிற்பாடும் போக்குவரத்தும் தொடர்பாக அந்த அரசின் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும், நாட்டினம் பற்றிய வேறுபாடின்றி எல்லா ஒப்பந்த அரசுகளினதும் வானூர்திகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் அந்த அரசின் ஆள்புலத்தினுட் பிரவேசிப்பதன்மீது அல்லது ஆள்புலத்திலிருந்து புறப்படுவதன்மீது அல்லது அவ்வரசின் ஆள்புலத்தினுள் இருக்கும் போது, அத்தகைய வானூர்திகளினால் இணங்கியொகப்படுதலும் வேண்டும்.

உறுப்புரை – 12

**வான்விதிகள்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசினதும் ஆள்புலத்திற்கு மேலாகப் பறக்கின்ற அல்லது அதன் ஆள்புலத்தினுள் நுட்பச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு வானூர்தியும், அத்துடன் அதன் நாட்டினக் குறியைக் கொண்டுள்ள ஒவ்வொரு வானூர்தியும், அத்தகைய வானூர்தி எங்கிருப்பினும், அங்கு வலுவிலுள்ள வானூர்திகளின் பறப்பு மற்றும் நுட்பச் செயற்பாடு தொடர்பான சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணைங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு அவ்வரசு பொறுப்பேற்கின்றது. ஒவ்வோர் ஒப்பந்த அரசும், இச்சமவாயத்தின் கீழ் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கேற்ப, இயலுமானளவு ஆகக்கூடிய அளவுக்கு, இவை தொடர்பிலான அதன் சொந்த ஒழுங்குவிதிகளை ஒருசீராக வைத்திருப்பதற்குப் பொறுப்பேற்கின்றது. ஆழ் கடல்கள் மீது, வலுவிலுள்ள விதிகளானவை, இச்சமவாயத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ஒவ்வோர் ஒப்பந்த அரசும், ஏற்புடையற்பாலனவான ஒழுங்குவிதிகளை மீறுகின்ற எல்லா ஆட்களுக் காகவும் எதிராகவும் குற்றவழக்குத்தொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்து வதற்குப் பொறுப்பேற்கின்றது.

உறுப்புரை – 13

**உட்பிரவேசித்தல், தடைநீக்கல் ஒழுங்குவிதிகள்**

உட்பிரவேசித்தல், தடை நீக்கல், குடிவரவு, கடவுச் சீட்டுக்கள், சுங்கம் மற்றும் தொற்றுத்தடைகாப்பு என்பன தொடர்பான ஒழுங்கு விதிகள் போன்ற, ஓர் ஒப்பந்த அரசின் ஆள்புலத்திற்கு வானூர்திகளின் பயணிகளை, இயக்குதொகுதியினரை அல்லது சரக்கை அனுமதித்தல் பற்றிய அல்லது அவர்கள் அல்லது அது அதன் ஆள்புலத்திலிருந்து புறப்படுதல் பற்றிய அவ்வரசின் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும், அவ்வரசின் ஆள்புலத்தினுட் பிரவேசிப்பதன் மீது அல்லது ஆள்புலத்திலிருந்து புறப்படுவதன் மீது அல்லது

ஆள்புலத்தினுள் இருக்கும்போது அத்தகைய பயணிகளினால், இயக்குதொகுதியினரினால் அல்லது சரக்கினால் அல்லது அவர்களின் அல்லது அதன் சார்பில் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்.

உறுப்புரை — 14

**நோய் பாவுவதனைத் தடுத்தல்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், வாந்திபேதி, நச்சுக்காய்ச்சல் (பெருவாரியாகப் பரவியுள்ளது), பெரிய அம்மை நோய், மஞ்சள் காய்ச்சல் நோய், கொள்ளை நோய் மற்றும் ஒப்பந்த அரசுகள் காலத்துக்குக்காலம் பெயர்குறிப்பதற்கு முடிவுசெய்ய வேண்டியவாறான அத்தகைய வேறு தொற்று நோய்கள் என்பன, வான் போக்குவரத்து மூலம் பரப்பப்படுவதனைத் தடுப்பதற்கான பயனுள்ள வழி முறைகளை எடுப்பதற்கு உடன்படுகிறது. அத்துடன் அதன் பொருட்டு, ஒப்பந்த அரசுகள், வானூர்திகளுக்கு ஏற்புடையற்பாலனவான சுகாதார வழி முறைகள் தொடர்பான சர்வதேச ஒழுங்குவிதிகளுடன் சம்பந்தப்பட்ட முகவர் நிலையங்களுடன் நெருங்கிய கலந்தாலோசனை செய்யும். அத்தகைய கலந்தாலோசனையானது, ஒப்பந்த அரசுகள் திறத்தவர்களாக இருக்கக்கூடிய இவ்விடயம் பற்றி ஏதேனும் ஏலவேயுள்ள சர்வதேசச் சமவாயத்தின் ஏற்புடைமைக்குப் பங்கமில்லாதிருத்தல் வேண்டும்.

உறுப்புரை — 15

**வானூர்தி நிலைய மற்றும் இதையொத்த இறுப்பனவுகள்**

ஒப்பந்த அரசொன்றின் தேசிய வானூர்திகளினால் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதற்கு அந்த அரசிலுள்ள எந்த வானூர்தி நிலையம் கிடைக்கக் கூடியதாகவுள்ளதோ அந்த வானூர்தி நிலையம் ஒவ்வொன்றும், அதே போன்று 68 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, மற்றெல்லா ஒப்பந்த அரசுகளினதும் வானூர்திக்கும் ஒருசீரான நிபந்தனைகளின்கீழ் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும். அதேபோன்ற ஒருசீரான நிபந்தனைகள், வான் போக்குவரத்தின் காப்புக்காகவும் துரிதத்துக்காகவும் பொதுப் பயன்பாட்டுக்காக வழங்கப்படக்கூடிய, வானொலி மற்றும் வளிமண்டல நிலைச் சேவைகள் உட்பட்ட எல்லா வான் போக்குவரத்து வசதிகளும் ஒவ்வோர் ஒப்பந்த அரசினதும் வானூர்திகளினால் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்புடையவையாதல் வேண்டும். வேறேதேனும் ஒப்பந்த அரசின் வானூர்திகளினால் அத்தகை வானூர்தி நிலையங்களும் வான் போக்கு வரத்து வசதிகளும் பயன்படுத்தப்படுவதற்காக ஒப்பந்த அரசொன்றினால் விதிக்கப்படக்கூடிய அல்லது விதிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய எவையேனும் இறுப்பனவுகள் —

(அ) அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் சேவைகளில் ஈடுபட்டிராத வானூர்திகள் தொடர்பாக, இதையொத்த தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அதே வகுப்பினவான அதன் தேசிய வானூர்திகளினால் செலுத்தப்படுவனவற்றிலும் பார்க்கக்கூடுதலாகவிருத்தலாகாது ; அத்துடன்

(ஆ) அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் சேவைகளில் ஈடுபட்டுள்ள வானூர்திகள் தொடர்பாக, இதையொத்த சர்வதேச வான் சேவைகளில் ஈடுபட்டுள்ள அதன் தேசிய வானூர்திகளினால் செலுத்தப்படுவனவற்றிலும் பார்க்கக் கூடுதலாகவிருத்தலாகாது.

அத்தகைய எல்லா இறுப்பனவுகளும் வெளியிடப்பட்டு, சர்வதேசக் குடியியல் வான் செலவு ஒழுங்கமைப்புக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் : ஆயின், அக்கறைகொண்டுள்ள ஒப்பந்த அரசொன்றினால் செய்யப்படும் முறையீட்டின் மீது, வானூர்தி நிலையங்களையும் ஏனைய வசதிகளையும் பயன்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட இறுப்பனவுகள், பேரவையினால் மீளாய்வுக்கமைந்தனவாதல் வேண்டும். சம்பந்தப்பட்ட அரசின் அல்லது அரசுகளின் கவனத்துக்காக, பேரவையானது, அதன் மீதான அறிக்கையைச் செய்தலும் விதப்புரைகளைச் செய்தலும் வேண்டும். ஒப்பந்த அரசொன்றின் எவையேனும் வானூர்திகள் அல்லது அதிலுள்ள ஆட்கள் அல்லது ஆதனம் அதன் ஆள்புலத்தின் மேல் இடைப்பெயர்வதற்கான அல்லது ஆள்புலத்தினுட் பிரவேசிப்பதற்கான அல்லது ஆள்புலத்திலிருந்து வெளியேறுவதற்கான உரிமை தொடர்பில் மட்டுமே ஏதேனும் ஒப்பந்த அரசினால் கட்டணங்கள், வருமதிகள் அல்லது வேறு இறுப்பனவுகள் எவையும் விதிக்கப்படுதலாகாது.

உறுப்புரை — 16

### வானூர்திகளைத் தேடுகையிடுதல்

ஒப்பந்த அரசுகளுள் ஒவ்வொன்றினதும் தோதான அதிகாரிகள், தரையிறங்குவதன் மேல் அல்லது புறப்படுவதன் மேல் ஏனைய ஒப்பந்த அரசுகளின் வானூர்திகளை, நியாயமற்ற தாமதமின்றி, தேடுகையிடுவதற்கும், இச்சமவாயத்தினால் விதித்துரைக்கப்பட்ட சான்றிதழ்களையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடுவதற்கும் உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்புரை — 17

### வானூர்திகளின் நாட்டினம்

வானூர்திகள், அவை எந்த அரசில் பதிவுசெய்யப்படுகின்றனவோ அந்த அரசின் நாட்டினத்தைக் கொண்டுள்ளன.

உறுப்புரை — 18

### இரட்டைப்பதிவு

ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளில் வானூர்தியொன்று செல்லுபடியான முறையில் பதிவுசெய்யப்படமுடியாது ; ஆனால் அதன் பதிவு, ஓர் அரசிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றப்படலாம்.

உறுப்புரை – 19

**பதிவை ஆளுகின்ற தேசிய சட்டங்கள்**

ஏதேனும் ஒப்பந்த அரசில் வானூர்திகளின் பதிவு அல்லது பதிவுமாற்றம், அதன் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

உறுப்புரை – 20

**குறிகளை வெளிக்காட்டுதல்**

சர்வதேச வான்போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு வானூர்தியும், அதன் தோதான நாட்டினத்தையும் பதிவுக்குறிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்புரை – 21

**பதிவுகளை அறிக்கையிடுதல்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், வேறேதேனும் ஒப்பந்த அரசுக்கு அல்லது சர்வதேசக் குடியியல் வான் செலவு ஒழுங்கமைப்புக்கு, அந்த அரசில் பதிவு செய்யப்படட எவையேனும் குறிப்பிடப்பட்ட வானூர்திகளின் பதிவும் சொத்தாண்மையும் சம்பந்தமான தகவலை, கோரப்படுவதன் மீது வழங்குவதற்குப் பொறுப்பேற்கின்றது. அத்துடன் சேர்த்து, ஒவ்வோர் ஒப்பந்த அரசும், அவ்வரசில் பதிவுசெய்யப்பட்டு, சர்வதேச வான் போக்குவரத்தில் வழமையாக ஈடுபடுகின்ற வானூர்திகளின் சொத்தாண் மையும் கட்டுப்பாடும் சம்பந்தமாகக் கிடைக்கும்படியாக்கப்பட முடியுமான வாறான அத்தகைய இயைபான தரவைக்கொடுத்து, சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பு விதித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளின்கீழ், அதற்கு அறிக்கைகளைக் கொடுத்துதவுதல் வேண்டும். சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பினால் அவ்வாறு பெற்றப்பட்ட தரவு, ஏனைய ஒப்பந்த அரசுகளுக்கு, வேண்டுகோளின் பேரில் அதனால் கிடைக்கும்படியாக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை – 22

**விதிமுறைகளை வசதிப்படுத்துதல்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், விசேட ஒழுங்குவிதிகளை வழங்குவதன் மூலம் அல்லது வேறுவகையாக, ஒப்பந்த அரசுகளின் ஆள்புலங்களுக்கிடையே வானூர்திகளின் போக்குவரத்தை வசதிப்படுத்துவதற்கும் துரிதப்படுத்து வதற்கும், விசேடமாகக் குடிவரவு, தொற்றுத்தடைக்காப்பு, சுங்கம் மற்றும் தடைநீக்கம் என்பன தொடர்பான சட்டங்களை நிருவகிப்பதில், வானூர்திக ளுக்கு, இயக்குதொகுதியினருக்கு, மற்றும் சரக்குக்கு அவசியமற்ற தாமதங் களைத் தடுப்பதற்கும், செயல்முறைக்குகந்த எல்லா வழி முறைகளையும் கடைப்பிடிப்பதற்கு உடன்படுகின்றது.

உறுப்புரை — 23

**சுங்க மற்றும் குடிவரவு நடவடிக்கை முறைகள்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், செயல்முறைக்குகந்ததென அது காணுமளவுவரை, இச்சமவாயத்தைப் பின்பற்றி, காலத்துக்குக்காலம் ஏற்படுத்தக்கூடிய அல்லது விதந்துரைக்கப்படக்கூடிய வழக்கங்களுக்கிணங்க, சர்வதேச வான் போக்குவரத்துத் தொடர்பான சுங்க மற்றும் குடிவரவு நடவடிக்கை முறைகளை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பேற்கின்றது. இச்சமவாயத்திலுள்ளதெதுவும், சுங்கமில்லாத வானூர்தி நிலையங்களை ஏற்படுத்துவதனைத் தடுப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

உறுப்புரை — 24

**சுங்கத் தீர்வை**

(அ) வேறோர் ஒப்பந்த அரசின் ஆள்புலத்துக்கு, ஆள்புத்திலிருந்து அல்லது ஆள்புலத்தினூடாகப் பறக்கின்ற வானூர்தியொன்று, அவ்வரசின் சுங்க ஒழுங்குவிதிகளுக்கயை, தீர்வையின்றித் தற்காலிகமாக அனுமதிக்கப்படுதல் வேண்டும். ஓர் ஒப்பந்த அரசின் வானூர்தியொன்றின் மீதுள்ள எரிபொருள், மசகெண்ணெய்கள், உதிரிப்பாகங்கள், கிரமமான சாதனங்கள் மற்றும் வானூர்திக் களஞ்சியப் பொருட்கள் என்பன, வேறோர் ஒப்பந்த நாட்டின் ஆள்புலத்தை வந்தடைந்து அவ்வரசின் ஆள்புலத்தை விட்டுச் செல்கையில் வானூர்தியின்மீது வைத்திருக்கப்படும் போது, சுங்கத்தீர்வை, பரிசோதனைக் கட்டணங்கள் அல்லது இவற்றையொத்த தேசிய அல்லது உள்ளூர்த் தீர்வைகளிலிருந்தும் இறுப்பனவுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். இந்த விலக்களிப்பு, சுங்க மேற்பார்வையின் கீழ் வைத்திருக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தக்கூடியவாறான, அரசின் சுங்க ஒழுங்குவிதிகளுக் கிணங்கவன்றி, தரையிறக்கப்பட்ட எவையேனும் தொகைகளுக்கு அல்லது பொருட்களுக்கு ஏற்புடையதாதலாகாது.

(ஆ) சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வேறோர் ஒப்பந்த அரசின் வானூர்தியொன்றில் சேர்க்கப்படுவதற்காக அல்லது அதன் மீது பயன்படுத்தப்படுவதற்காக ஒப்பந்த அரசின் ஆள்புலத்தினுள் இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களும் சாதனங்களும், பொருட்களானவை சுங்க மேற்பார்வையின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் வைத்திருக்கப்படவேண்டுமென ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான, சம்பந்தப்பட்ட அரசின் ஒழுங்குவிதிக ளுக்கு இணங்கியொழுகுவதற்கமைய, சுங்கத் தீர்வையின்றி அனு மதிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை – 25

### இடர்ப்பாட்டிலுள்ள வானூர்திகள்

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், செயல்முறைக்குகந்ததென அது காணக்கூடியவாறாக, அதன் ஆள்புலத்தில் இடர்ப்பாட்டிலுள்ள வானூர்திகளுக்கு அத்தகைய உதவி வழிமுறைகளை வழங்குவதற்கும், அதன் சொந்த அதிகாரிகளினாலான கட்டுப்பாட்டுக்கமைய, சூழ்நிலைகள் அவசியமாக்கக்கூடியவாறான அத்தகைய உதவி வழிமுறைகளை வழங்கும்படி வானூர்திகளின் சொந்தக்காரர்களை அல்லது வானூர்திகள் எந்த அரசில் பதிவு செய்யப்படுகின்றனவோ அந்த அரசின் அதிகாரிகளை அனுமதிப்பதற்கும் பொறுப்பேற்கின்றது. ஒவ்வோர் ஒப்பந்த அரசும், காணாமற்போன வானூர்திகளுக்காகத் தேடுகையிடுவதனைப் பொறுப்பேற்கும்போது இச்சமவாயத்தைப் பின்பற்றிக் காலத்துக்குக்காலம் விதந்துரைக்கப்படக்கூடியவாறான ஒருங்கிணைக்கப்பட்ட வழிமுறைகளில் ஒத்திசையும்.

உறுப்புரை – 26

### விபத்துக்களை நுண்ணாய்வு செய்தல்

வேறோர் ஒப்பந்த அரசின் ஆள்புலத்தில் நடைபெறுகின்றதும், மரணத்தை அல்லது பாரதூரமான ஊறுபாட்டை உட்படுத்துகின்றதும் அல்லது வானூர்தியில் அல்லது வான் போக்குவரத்து வசதிகளில் பாரதூரமான தொழிநுட்பக்குறைபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றதுமான ஒப்பந்த அரசொன்றின் வானூர்தியொன்றுக்கு விபத்தொன்று ஏற்படும் பட்சத்தில், அந்த விபத்து எந்த அரசில் நடைபெறுகின்றதோ அந்த அரசு, சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பினால் விதந்துரைக் கப்படக்கூடியவாறான நடவடிக்கை முறைக்கிணங்க, அதன் சட்டங்கள் அனுமதிக்கும் அளவுவரை, விபத்தின் சூழ்நிலைகள் பற்றிய விசாரணை யொன்றைத் தொடுக்கும். வானூர்தியானது எந்த அரசில் பதிவு செய்யப் படுகின்றதோ அந்த அரசுக்கு, விசாரணையில் சமூகமளிப்பதற்கான அவதானிப்பாளர்களை நியமிப்பதற்கான வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், விசாரணையை நடாத்துகின்ற அரசு அக்கருமம் பற்றிய அறிக்கையையும் முடிவெடுப்புக்களையும் அவ்வரசுக்கு அறிவித்தலும் வேண்டும்.

உறுப்புரை – 27

### ஆக்கவுரிமைக் கோரிக்கைகளின் மீது கைப்பற்றப்படுவதற்கெதிராக விலக்களித்தல்

(அ) சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளபோது, ஒப்பந்த அரசொன்றின் வானூர்திகள் வேறோர் ஒப்பந்த அரசின் ஆள்புலத்தினுட் செய்யும் ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட பிரவேசம் அல்லது தரையிறங்குதல்களுடனோ அல்லது தரையிறங்குதல்களின்றியோ அத்தகைய அரசின் ஆள்புலத்தி னூடாகச் செய்யும் அதிகாரமளிக்கப்பட்ட இடைப்பெயர்வு,

வானூர்திகளின் நிர்மாணம், பொறிமுறை, பாகங்கள், துணைப் பொருட்கள் அல்லது தொழிற்பாடு என்பன, வானூர்திகள் எந்த அரசின் ஆள்புலத்தினுட் பிரவேசிக்கின்றனவோ அந்த அரசில் உரிய முறையில் அளிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஆக்கவுரிமையின், வடிவமைப்பின் அல்லது மாதிரியின் மீறுகையொன்றாகவுள்ளதென்ற ஏதுவின்மீது, அத்தகைய அரசினால் அல்லது அதன் சார்பில் அல்லது அதன்கண்ணுள்ள எவரேனும் ஆளினால் அல்லது அவரின்சார்பில், வானூர்தி களின் ஏதேனும் கைப்பற்றுகையை அல்லது தடுத்துவைத்தலை அல்லது அதன் சொந்தக்காரருக்கெதிரான அல்லது தொழிற்படுத்துநருக்கெதிரான ஏதேனும் உரிமைக்கோரிக்கையை அல்லது அதனுடனான ஏதேனும் தலையீட்டை உட்படுத்துத லாகாது ; வானூர்திகளின் கைப்பற்றுகைக்கு அல்லது தடுத்து வைத்தலுக்கு எதிரான மேற்போந்த விலக்களிப்புச் சம்பந்தமாகப் பிணைப்பொறுப்பு வைப்பெதுவும் அத்தகைய வானூர்திகள் பிரவேசிக்கும் அரசில் எவ்விடயத்திலும் தேவைப்படுத்தப்பட லாகாதென உடன்பட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) இவ்வுறுப்புரையின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், ஓர் ஒப்பந்த அரசின் வானூர்தியொன்றை வேறேதேனும் ஒப்பந்த அரசின் ஆள்புலத்தில் பழுதுபார்ப்பதில் அவ்வானூர்திக்கான உதிரிப்பாகங்களையும் உதிரிச்சாதனங்களையும் களஞ்சியப் படுத்துவதற்கும், அவற்றைப் பயன்படுத்தி நிறுவுவதற்கும் ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும் ; ஆயின், அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆக்கவுரிமையுள்ள பாகம் அல்லது எவையேனும் சாதனங்கள், அவ்வானூர்தி எவ்வொப்பந்த அரசின் ஆள்புலத்தினுட் பிரவேசிக்கின்றதோ அவ்வொப்பந்த அரசின் உள்நாட்டில் விற்பனை செய்யப் படுதலோ அல்லது விநியோகிக்கப்படுதலோ அல்லது அதிலிருந்து வர்த்தக ரீதியில் ஏற்றுமதிசெய்யப்படுதலோ ஆகாது.

(இ) இவ்வுறுப்புரையின் நன்மைகள், ஒன்றில் (1) கைத்தொழில் ஆதனத்தைப் பாதகாப்பதற்கான சர்வதேசச் சமவாயத்துக்கும் அதற்கான எவையேனும் திருத்தங்களுக்கும் திறத்தவர்களாக வுள்ள ; அல்லது (2) இச்சமவாயத்துக்கான திறத்தவர்களாகவுள்ள ஏனைய அரசுகளின் நாட்டவர்களினாற் செய்யப்பட்ட புத்தாக்கங்களை ஏற்றங்கீகரித்து அவற்றுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக்கும் ஆக்கவுரிமைச் சட்டங்களை இயற்றியுள்ள இச்சமவாயத்துக்கான அத்தகைய திறத்தவர்களாகவுள்ள அரசுகளுக்கு மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும்.

உறுப்புரை — 28

### வான் போக்குவரத்து வசதிகளும் நியம முறைமைகளும்

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், செயல்முறைக்குகந்ததாக அது காணக்கூடிய அளவு வரை :

(அ) இச்சமவாயத்தைப் பின்பற்றி, காலத்துக்குக்காலம் விதந்துரைக் கப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட நியமங்களுக்கும் வழக்கங்க ளுக்கும் இணங்க, சர்வதேச வான் போக்குவரத்தை வசதிப்படுத்து வதற்கு, அதன் ஆள்புலத்தில், வானூர்தி நிலையங்களையும் வானொலிச் சேவைகளையும், வளிமண்டல நிலைச் சேவை களையும், ஏனைய வான் போக்குவரத்து வசதிகளையும் வழங்கு வதற்கும் ;

(ஆ) இச்சமவாயத்தைப் பின்பற்றி, காலத்துக்காலம் விதந்துரைக் கப்படக்கூடியவாறான அல்லது ஏற்படுத்தப்படக்கூடியவாறான தொடர்பாடல் நடவடிக்கைமுறை, குறியீடுகள், அடையாளங்கள், சைகைகள், வெளிச்சமிடுதல் மற்றும் ஏனைய தொழிற்பாடுசார் வழக்கங்களும் விதிகளும் என்பன பற்றிய தோதான நியம முறைமைகளை ஏற்றுத் தொழிற்படுத்துவதற்கும் ;

(இ) இச்சமவாயத்தைப் பின்பற்றி, காலத்துக்குக்காலம் விதந்துரைக் கப்படக்கூடியவாறான அல்லது ஏற்படுத்தப்படக்கூடியவாறான நியமங்களுக்கிணங்க வான்வழித் தேசப்படங்களும் விளக்க வரைபடங்களும் வெளியிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குச் சர்வதேச வழிமுறைகளில் ஒத்திசைவதற்கும்,

பொறுப்பேற்கின்றது.

உறுப்புரை — 29

**வானூர்திகளில் கொண்டுசெல்லப்படும் ஆவணங்கள்**

சர்வதேசப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஒப்பந்த அரசொன்றின் வானூர்தி ஒவ்வொன்றும், இச்சமவாயத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கியைய பின்வரும் ஆவணங்களைக் கொண்டசெல்லுதல் வேண்டும் :–

(அ) அதன் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) அதன் பறத்தகு நிலை பற்றிய சான்றிதழ் ;

(இ) இயக்கு தொகுதியினரின் ஒவ்வோர் உறுப்பினருக்குமான தோதான உரிமங்கள் ;

(ஈ) அதன் பிரயாண விபரக் குறிப்பேடு ;

(உ) வானொலி உபகரணங்கள் அதில் பொருத்தப்பட்டிருப்பின், வானூர்தி வானொலி நிலைய உரிமம் ;

(ஊ) அது பயணிகளை ஏற்றிச்சென்றால், அவர்களின் பெயர்களும் அவர்கள் ஏறுகின்ற மற்றும் வந்தடைகின்ற இடங்களும் பற்றிய நிரலொன்று ;

(எ) அது சரக்கை ஏற்றிச் சென்றால் சரக்குப்பட்டியல் ஒன்றும் சரக்கு பற்றிய விபரமான வெளிப்படுத்துகைகளும்.

உறுப்புரை — 30

**வானூர்தி வானொலிச் சாதனங்கள்**

(அ) ஒவ்வோர் ஒப்பந்த அரசினதும் வானூர்திகள், ஏனைய ஒப்பந்த அரசுகளின் ஆள்புலத்தில் அல்லது ஆள்புலத்துக்கு மேலாக, அவ்வானூர்திகள் எந்த அரசில் பதிவுசெய்யப்பட்டுள்ளனவோ அந்த அரசின் தோதான அதிகாரிகளினால் வானொலி அலை பரப்பீட்டு உபகரணங்களை நிறுவித் தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்று வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே அத்தகைய உபகரணங்களைக் கொண்டுசெல்லலாம். எந்த ஒப்பந்த அரசின் ஆள்புலத்துக்கு மேலாக வானூர்திகள் பறக்கின்றனவோ அந்த ஒப்பந்த அரசின் ஆள்புலத்தில் வானொலி அலைபரப்பீட்டு உபகரணங்களைப் பயன்படுத்துதலானது, அவ்வரசினால் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும் ;

(ஆ) வானூர்திகள் எந்த அரசில் பதிவுசெய்யப்படுகின்றனவோ அந்த அரசின் தோதான அதிகாரிகளினால் வழங்கப்பட்ட, அந்நோக்கங்களுக்காக விசேட உரிமம் வழங்கப்பட்டுள்ள பறப்பு இயக்குதொகுதி உறுப்பினர்களினால் மட்டுமே வானொலி அலைபரப்பீட்டு உபகரணங்கள் பயன்படுத்தப்படலாம்.

உறுப்புரை — 31

**பறத்தகு நிலைபற்றிய சான்றிதழ்கள்**

சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு வானூர்திக்கும், அது எந்த அரசில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த அரசினால் வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட பறத்தகுநிலை பற்றிய சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை — 32

**ஆளணியினரின் உரிமங்கள்**

(அ) சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு வானூர்தியினதும் விமானமோட்டிக்கும் ஒவ்வொரு வானூர்தியினதும் ஏனைய தொழிற்பாட்டு இயக்குதொகுதி உறுப்பினர்களுக்கும் அவ்வானூர்தியானது எந்த அரசில் பதிவுசெய்யப்படுகின்றதோ அந்த அரசினால் வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட தகுதிவாய்ந்தமைபற்றிய சான்றிதழ்களும் உரிமங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒவ்வோர் ஒப்பந்த அரசும், அதன் சொந்த ஆள்புலத்துக்கு மேலான பறப்பு நோக்கத்துக்காக, வேறோர் ஒப்பந்த அரசினால் அதன் நாட்டவர்களுள் எவருக்கும் அளிக்கப்பட்ட தகுதிவாய்ந்தமைபற்றிய சான்றிதழ்களையும் உரிமங்களையும் ஏற்றங்கீகரிப்பதற்கு மறுக்கின்ற உரிமையைத் தனக்கென்று ஒதுக்குகின்றது.

உறுப்புரை — 33

**சான்றிதழ்களையும் உரிமங்களையும் ஏற்றங்கீகரித்தல்**

வானூர்தியொன்று எந்த ஒப்பந்த அரசில் பதிவுசெய்யப்படுகின்றதோ அந்த ஒப்பந்த அரசினால் வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட பறத்தகு நிலைபற்றிய மற்றும் தகுதிவாய்ந்தமைபற்றிய சான்றிதழ்களும் மற்றும் உரிமங்களும், ஏனைய ஒப்பந்த அரசுகளினால் செல்லுபடியானவையாக ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும் ; ஆயின், வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட அத்தகைய சான்றிதழ்களின் அல்லது உரிமங்களின் கீழான தேவைப்பாடுகள், இச்சமவாயத்தைப் பின்பற்றிக் காலத்துக்குக்காலம் ஏற்படுத்தப்படக்கூடிய ஆகக்குறைந்த நியமங்களுக்குச் சமமாக அல்லது மேலாக இருத்தல் வேண்டும்.

உறுப்புரை — 34

**பிரயாண விபரக்குறிப்பேடுகள்**

சர்வதேச வான்போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு வானூர்தியும் தொடர்பில் பிரயாண விவரக்குறிப்பேடொன்று பேணப்படுதல் வேண்டும் ; இச்சமவாயத்தைப் பின்பற்றிக் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில், வானூர்தி, அதன் இயக்குதொகுதியினர் மற்றும் அதன் ஒவ்வொரு பிரயாணமும் பற்றிய விபரங்கள் அதில் பதிவீடுசெய்யப்பட்டதாதல் வேண்டும்.

உறுப்புரை — 35

**சரக்கு மட்டுப்பாடுகள்**

(அ) அரசொன்றின் ஆள்புலத்தில் அல்லது அதன்மேலாக, அத்தகைய அரசின் அனுமதியுடன்தவிர, சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வானூர்திகளில் போர்ப்படைக்கலங்கள் அல்லது போர்க்கருவிகள் கொண்டுசெல்லப்படலாகாது. சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பு காலத்துக்குக்காலம் செய்யக் கூடியவாறான அத்தகைய விதப்புரைகளுக்கு ஒரு சீராண்மை நோக்கங்களுக்காக உரிய கவனஞ்செலுத்தி, இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக எது போர்ப்படைக்கலங்களாக அல்லது போர்க்கருவிகளாக அமைகின்றதென்பதை ஒவ்வோர் அரசும் ஒழுங்குவிதிகள்மூலம் தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வோர் ஒப்பந்த அரசும், பொது ஒழுங்கமைதி மற்றும் காப்புக் காரணங்களுக்காக, (அ) என்னும் பந்தியில் எடுத்துக்கூறப்பட்டவை தவிர்ந்த பொருட்களை அதன் ஆள்புலத்தில் அல்லது ஆள்புலத்துக்கு மேலாகக் கொண்டுசெல்வதனை ஒழுங்குபடுத்துவதற்கான அல்லது தடைசெய்வதற்கான உரிமையைத் தனக்கென்று ஒதுக்குகின்றது ; ஆயின், சர்வதேச வான் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள அதன் தேசிய வானூர்திகளுக்கும் அவ்வாறு ஈடுபட்டுள்ள ஏனைய அரசுகளின் வானூர்திகளுக்கும் இடையே

இது தொடர்பில் வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது ; ஆயின், மேலும், வானூர்திகளின் தொழிற்பாட்டுக்கு அல்லது போக்கு வரத்துக்கு அல்லது ஆளணியினரின் அல்லது பயணிகளின் காப்புக்கு அவசியமான உபகரணங்களை வானூர்திகளில் கொண்டுசெல்வதுடனும் பயன்படுத்துவதுடனும் தலையிடக்கூடிய வாறான மட்டுப்பாடெதுவும் விதிக்கப்படுதலாகாது

உறுப்புரை — 36

**நிழற்படஞ்சார் உபகரணங்கள்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், அதன் ஆள்புலத்துக்கு மேலாக வானூர்திகளில் நிழற்படஞ்சார் உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதனைத் தடைசெய்யலாம் அல்லது அதன் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தலாம்.

உறுப்புரை — 37

**சர்வதேச நியமங்களையும் நடவடிக்கைமுறைகளையும் கடைப்பிடித்தல்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், வானூர்திகள், ஆளணியினர், வானூர்திப்பாதைகள், துணைநிலையான சேவைகள் என்பன தொடர்பாக, ஒழுங்குவிதிகளில், நியமங்களில், நடவடிக்கைமுறைகளில் மற்றும் ஒழுங்குபடுத்துதலில் ஆகக்கூடிய செயல்முறைக்குகந்த அளவினதான ஒரு சீராண்மையை, அத்தகைய ஒரு சீராண்மை எக்கருமங்களில் வான் போக்குவரத்தை வசதிப்படுத்திச் சீராக்குமோ அக்கருமங்கள் எல்லாவற்றிலும் உறுதிப்படுத்துவதில் ஒத்திசைவதற்குப் பொறுப்பேற்கின்றது. இதன் பொருட்டு சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பு பின்வருவனவற்றைக் கையாளுகின்ற சர்வதேச நியமங்களும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களும் நடவடிக்கைமுறைகளும் என்பவற்றை, அவசியமாகக்கூடியவாறாக, காலத்துக்குக்காலம் கடைப்பிடித்துத் திருத்துதல் வேண்டும்.

(அ) நில அடையாளமிடுதலுட்பட, தொடர்பாடல் முறைமைகளும் வான் போக்குவரத்து உதவுகருவிகளும் ;

(ஆ) வானூர்தி நிலையங்களினதும் தரையிறங்குதல் இடப்பரப்புகளினதும் வேறுபடுத்திக்காட்டும் இயல்பு ;

(இ) வான் விதிகளும் வான் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழக்கங்களும் ;

(ஈ) தொழிற்பாட்டு, பொறிமுறை ஆளணியினருக்கு உரிமமளித்தல் ;

(உ) வானூர்திகளின் பறத்தகுநிலை ;

(ஊ) வானூர்திகளைப் பதிவுசெய்தலும் அடையாளங்காணுதலும் ;

(எ) வளிமண்டலநிலைசார் தகவலைச் சேகரித்தலும் பரிமாற்றுதலும்;

(ஏ) பிரயாண விவரக்குறிப்பேடுகள் ;

(ஐ) வான்வழித் தேசப்படங்களும் விளக்கவரைபடங்களும் ;

(ஒ) சுங்க மற்றும் குடிவரவு நடவடிக்கைமுறைகள் ;

(ஓ) இடர்பாட்டிலுள்ள வானூர்திகளும் விபத்துக்களை நுண்ணாய்வு செய்தலும்.

அத்துடன் தோதானவையெனக் காலத்துக்குக்காலம் காணப்படக்கூடிய வாறாக வான் போக்குவரத்தின் காப்பு, கிரமமான தன்மை மற்றும் வினைத்திறன் சம்பந்தமான அத்தகைய வேறு கருமங்கள்.

உறுப்புரை — 38

**சர்வதேச நியமங்களிலிருந்தும் நடவடிக்கைமுறைகளிலிருந்தும் விலகுதல்**

அத்தகைய ஏதேனும் சர்வதேச நியமத்துக்கு அல்லது நடவடிக்கைமுறைக்கு எல்லாம் தொடர்பிலும் இணங்கியொழுகுதல் அல்லது ஏதேனும் சர்வதேச நியமம் அல்லது நடவடிக்கைமுறை திருத்தப்பட்ட பின்னர் அதன் சொந்த ஒழுங்குவிதிகளை அல்லது வழக்கங்களை அவற்றுடன் இணங்கும்படி செய்தல் செயல்முறைக்குகந்ததல்லவெனக் காணுகின்ற அல்லது சர்வதேச நியமமொன்றினால் ஏற்படுத்தப்பட்டவற்றிலிருந்து குறிப்பிட்ட ஏதேனும் விடயத்தில் வித்தியாசப்படுகின்ற ஒழுங்குவிதிகளை அல்லது வழக்கங்களைக் கடைப்பிடிப்பது அவசியமெனக் கருதுகின்ற ஏதேனும் அரசு, அதன் சொந்த வழக்கத்துக்கும் சர்வதேச நியமத்தினால் ஏற்படுத்தப்பட்டதற்கும் இடையேயான வித்தியாசங்கள் பற்றிச் சர்வதேசக் குடியியல் வான் செலவு ஒழுங்கமைப்புக்கு உடனடி அறிவிப்புக் கொடுத்தல் வேண்டும். சர்வதேச நியமங்களுக்கான திருத்தங்களின் விடயத்தில் அதன் சொந்த ஒழுங்கு விதிகளுக்கு அல்லது வழக்கங்களுக்குத் தோதான திருத்தங்களைச் செய்யாத ஏதேனும் அரசு, சர்வதேச நியமத்துக்கான திருத்தம் ஏற்றுக்கொள் ளப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள் பேரவைக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும், அல்லது அது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற நடவடிக்கையைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் விடயத்தில், பேரவையானது, சர்வதேச நியமமொன்றின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனிச்சிறப்புக்கூறுகளுக்கும் அவ்வரசின் நேரொத்த தேசிய வழக்கத்துக்கும் இடையேயான வித்தியாசம் பற்றி மற்றெல்லா அரசுகளுக்கும் உடனடி அறிவிப்புக் கொடுத்தல் வேண்டும்.

உறுப்புரை — 39

**சான்றிதழ்களையும் உரிமங்களையும் புறக்குறிப்பிடுதல்**

(அ) எந்த வானூர்தி அல்லது அதன் பாகம் தொடர்பில் பறத்தகுநிலை அல்லது செயல்நிறைவேற்றம் பற்றிச் சர்வதேச நியமமொன் றுள்ளதோ, அத்துடன் அதன் சான்றுப்படுத்துகை நேரத்தில் ஏதேனும் விடயத்தில் அந்நியமத்தைத் திருப்திப்படுத்துவதற்கு அது தவறியுள்ளதோ அந்த ஏதேனும் வானூர்தி அல்லது அதன் பாகம், அது எந்த விபரங்கள் தொடர்பில் அவ்வாறு தவறியுள்

ளதோ அந்த விபரங்கள் பற்றிய முழுமையான விவரக்கூற்றொன்றை அதன் பறத்தகுநிலைச் சான்றிதழில் புறக்குறிப்பிடுதல் அல்லது அதனோடு இணைத்தல் வேண்டும்.

(ஆ) உரிமமொன்றை வைத்திருப்பவரும், அவர் வைத்திருக்கும் உரிமத்தின் அல்லது சான்றிதழின் வகுப்புத் தொடர்பான சர்வதேச நியமத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை முழுமையாகத் திருப்திப்படுத்தாதவருமான எவரேனுமாள், அவர் அத்தகைய நிபந்தனைகளை எந்த விபரங்களில் திருப்திப்படுத்தாதுள்ளாரோ அந்த நிபந்தனைகள் பற்றிய முழுமையான விவரக்கூற்றொன்றை அவரது உரிமத்தில் புறக்குறிப்பிடுதல் வேண்டும் அல்லது அதனோடு இணைத்தல் வேண்டும்.

*உறுப்புரை — 40*

**புறக்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களினதும் உரிமங்களினதும் செல்லுபடியாந்தன்மை**

அவ்வாறு புறக்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களை அல்லது உரிமங்களை உடைய வானூர்தியெதுவும் அல்லது ஆளணியினரெவரும், எந்த அரசின் அல்லது அரசுகளின் ஆள்புலத்தினுட் பிரவேசம் செய்யப்படுகின்றதோ அந்த அரசின் அல்லது அரசுகளின் அனுமதியுடனன்றி, சர்வதேச வான் போக்குவரத்தில் பங்குபற்றுதலாகாது. தொடக்கத்தில் அது எந்த அரசில் சான்றுப்படுத்தப்பட்டதோ அந்த அரசாகவிராத வேறேதேனும் அரசில் அத்தகைய ஏதேனும் வானூர்தியை அலலது சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் வானூர்திப் பாகத்தைப் பதிவுசெய்தல் அல்லது பயன்படுத்துதல், அவ் வானூர்தி அல்லது பாகம் எந்த அரசினுள் இறக்குமதி செய்யப்படுகின்றதோ அந்த அரசின் தற்றுணிபின்படி இருத்தல் வேண்டும்.

*உறுப்புரை — 41*

**பறத்தகுநிலைபற்றி ஏலவேயுள்ள நியமங்களை ஏற்றங்கீகரித்தல்**

எந்த வகையினவான வானூர்திகளினதும் வானூர்திச் சாதனங்களினதும் ஆதிவடிவம், அத்தகைய சாதனங்களுக்கான பறத்தகுநிலை பற்றிய சர்வதேச நியமமொன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்றாண்டுகளுக்கு முன்னரான ஒரு தேதியில் சான்றுப்படுத்துகைக்காகத் தோதான தேசிய அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த வகையினவான வானூர்திகளுக்கும் வானூர்திச் சாதனங்களுக்கும் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

*உறுப்புரை — 42*

**ஆளணியினரின் தகுதிபற்றி ஏலவேயுள்ள நியமங்களை ஏற்றங்கீகரித்தல்**

எந்த ஆளணியினரின் உரிமங்கள், அத்தகைய ஆளணியினருக்கான தகைமை பற்றிய சர்வதேச நியமமொன்று முதன்முதலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முன்னரான ஒரு தேதியில் தொடக்கத்தில் வழங்கப்படுகின்றனவோ அந்த ஆளணியினருக்கு இவ்வத்தியாயத்தின்

ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது ; ஆனால், அத்தகைய நியமத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் எந்த ஆளணியினரின் உரிமங்கள் ஐந்தாண்டுகளுக்குச் செல்லுபடியாகவுள்ளனவோ அந்த ஆளணியினர் எல்லோருக்கும் அவை எவ்விடயத்திலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உறுப்புரை — 67

**பேரவையிலுள்ள கோப்பு அறிக்கைகள்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், அதன் சர்வதேச வானூர்திச் சேவைகள், பேரவையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க, மற்றவற்றுக் கிடையில் எல்லாப் பெறுகைகளையும் அவற்றின் மூலங்களையும் காட்டுகின்ற வான் நடமாட்ட அறிக்கைகளையும் ஆகுசெலவுப் புள்ளிவிபரங்களையும், நிதிசார் கூற்றுக்களையும் பேரவையில் கோப்பிடுமெனப் பொறுப்பேற்கின்றது.

உறுப்புரை — 68

**மார்க்கங்களையும் வானூர்தி நிலையங்களையும் பெயர்குறித்தல்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் சர்வதேச வான்சேவை பயன்படுத்தக்கூடியதான, அத்தகைய ஏதேனும் சேவையினால் அல்லது வானூர்தி நிலையங்களினால் அதன் ஆள்புலத்தினுட் பின்பற்றப்படவேண்டிய மார்க்கத்தைப் பெயர்குறிக்கலாம்.

உறுப்புரை — 72

**காணியைக் கொள்ளுதல் அல்லது பயன்படுத்துதல்**

ஒப்பந்த அரசொன்றின் வேண்டுகோளின்மேல் பேரவையினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வசதிகளுக்காகக் காணி தேவைப்படுமிடத்து, அந்த அரசு, ஒன்றில், அது விரும்பினால் உரித்தை வைத்துக்கொண்டு, காணியையே வழங்குதல் வேண்டும், அல்லது நீதியானவையும் நியாயமானவையுமான நியதிகளின்மீதும் சம்பந்தப்பட்ட அரசின் சட்டங்களுக்கிணங்கவும் பேரவையினால் காணி பயன்படுத்தப் படுவதற்கு வசதியளித்தல் வேண்டும்.

உறுப்புரை — 80

**பரிஸ் மற்றும் ஹபானா சமவாயங்கள்**

ஒவ்வோர் ஒப்பந்த அரசும், இச்சமவாயம் வலுவுக்குவருவதன்மீது உடனடியாக, 1919, ஒற்றோபர் 13 ஆம் தேதியன்று பரிஸில் கையொப்பமிடப்பட்ட வானூடு போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சமவாயத்துக்கு அல்லது 1928, பெப்ரவரி 20 ஆம் தேதியன்று ஹபானாவில் கையொப்பமிடப்பட்ட வர்த்தக வான்செலவு பற்றிய சமவாயத்துக்கு, இவற்றிலொன்றுக்கு அது திறந்தவராகவிருப்பின் கண்டனம் தெரிவிக்கின்ற அறிவித்தலைக் கொடுப்பதற்குப் பொறுப்பேற்கின்றது. ஒப்பந்த அரசுகளுக் கிடையேயுள்ளவாறு, இச்சமவாயம் முன்னர் குறிப்பீடுசெய்யப்பட்ட பரிஸ் மற்றும் ஹபானா சமவாயங்களைப் பதிலீடு செய்கின்றது.

உறுப்புரை — 81

**ஏலவேயுள்ள உடன்படிக்கைகளைப் பதிவுசெய்தல்**

இச்சமவாயம் வலுவுக்கு வரும்போது உள்ளவையும், ஓர் ஒப்பந்த அரசுக்கும் வேறேதேனும் அரசுக்கும் இடையிலானவையும் அல்லது ஓர் ஒப்பந்த அரசின் வானூர்திச் சேவைக்கும் வேறேதேனும் அரசுக்கும் அல்லது வேறேதேனும் அரசின் வானூர்திச் சேவைக்கும் இடையிலானவையுமான எல்லா வான்வழி உடன்படிக்கைகளும் பேரவையில் உடனடியாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

உறுப்புரை — 82

**ஒவ்வாதனவாகவுள்ள ஒழுங்கேற்பாடுகளை வழக்கொழித்தல்**

ஒப்பந்த அரசுகள், இச்சமவாயத்தின் நியதிகளுக்கு ஒவ்வாதனவாகவுள்ள அவர்களுக்கிடையேயான எல்லாக் கடப்பாடுகளையும் உடன்பாடுகளையும் வழக்கொழிப்பதாக இச்சமவாயத்தை ஏற்றுக்கொள்கின்றனவென்பதுடன், அத்தகைய எவையேனும் கடப்பாடுகளையும் உடன்பாடுகளையும் செய்துகொள்ளாதிருப்பதற்கும் பொறுப்பேற்கின்றன. ஒழுங்கமைப்பின் உறுப்பினரொருவராக வருமுன்னர் இச்சமவாயத்தின் நியதிகளுக்கு ஒவ்வாதனவாகவுள்ள எவையேனும் கடப்பாடுகளை ஒப்பந்தஞ்சாரா அரசொன்று தொடர்பில் பொறுப்பேற்றுள்ள ஒப்பந்த அரசொன்று, அக்கடப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கான உடனடி நடபடிகளை எடுத்தல் வேண்டும். ஏதேனும் ஒப்பந்த அரசின் வானூர்திச்சேவையொன்று அத்தகைய எவையேனும் ஒவ்வாதவையாக வுள்ள கடப்பாடுகளைச் செய்திருப்பின், அது எந்த அரசின் நாட்டவ ராகவுள்ளதோ அந்த அரசு, உடனடியாக அவற்றின் முடிவுறுத்தலைப் பெறுவதற்கென ஆகக்கூடிய முயற்சிகளைப் பயன்படுத்தல் வேண்டுமென்பது டன், எப்பட்சத்திலும், இச்சமவாயம் வலுவுக்குவந்த பின்னர் அத்தகைய நடவடிக்கை சட்டமுறையாக எடுக்கப்பட முடியுமானவரை, விரைவாக அவற்றை முடிவுறுத்தச் செய்தலும் வேண்டும்.

உறுப்புரை — 83

**புதிய ஒழுங்கேற்பாடுகளைப் பதிவு செய்தல்**

முற்போந்த உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத ஒழுங்கேற்பாடுகளை ஏதேனும் ஒப்பந்த அரசு செய்யலாம். அத்தகைய ஏதேனும் ஒழுங்கேற்பாடு, உடனடியாகப் பேரவையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பேரவையானது இயன்றளவு விரைவாக அதனைப் பகிரங்கப்படுத்துதலும் வேண்டும்.

உறுப்புரை – 87

**வானூர்திச் சேவையினால் இசைந்தொழுகப்படாமைக்கான தண்டம்**

ஒப்பந்த அரசொன்றின் வானூர்திச்சேவை, முன்னைய உறுப்புரைக் கிணங்க அளிக்கப்பட்டவோர் இறுதி முடிபுக்கு இசைந்தொழுகுகின்ற தில்லையெனப் பேரவை முடிபுசெய்திருப்பின், ஒவ்வோர் ஒப்பந்த அரசும் அதன் ஆள்புலத்துக்கு மேலாகவுள்ள வான் வெளியினூடாகச் சம்பந்தப்பட்ட வானூர்திச் சேவையின் தொழிற்பாட்டை அனுமதிக்காது விடுவதற்குப் பொறுப்பேற்கின்றது.

உறுப்புரை – 89

**போர் மற்றும் அவசரகால நிலைமைகள்**

போர் ஏற்படும் விடயத்தில், பொருநராகவோ அல்லது நடுநிலையாளர் களாகவோ, பாதிக்கப்பட்ட ஒப்பந்த அரசுகளுள் எதனதும் நடவடிக்கைச் சுதந்திரத்தை இச்சமவாயத்தின் ஏற்பாடுகள் பாதித்தலாகாது. தேசிய அவசரகால நிலைமையை வெளிப்படுத்தி அந்நிகழ்வைப் பேரவைக்கு அறிவிக்கின்ற ஏதேனும் ஒப்பந்த அரசின் விடயத்தில் இதே நெறி ஏற்புடையதாதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*